# நட்சத்திர மாலை

'குண்டூசி'

'பேசும் படம்' வெளியீடு

# நட்சத்திர மாலை

## மாலை 2

திருத்திய இரண்டாம் பதிப்பு

ஆசிரியர் :

பி. ஆர். எஸ். கோபால்

" குண்டூசி "

வெளியீடு :

"பேசும் படம்" காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை.

K. N. PURAM,
Pin: 638662.

K. Subramaniam & Bros
General Merchant & News Ag
TIRUPPUR.

K. N. சங்கரன்,
இல்ல நூல் நிலையம்.
மூத்து நகர் திருப்பூர்.

முதற் பதிப்பு—ஏப்ரல் 1946
இரண்டாம் பதிப்பு—செப். 1947

தமிழ்ப் பதிப்புரிமை :

'பேசும் படம்' காரியாலயம்

இதர உரிமைகள் :

ஆசிரியருடையவை

விலை ரூபாய் 2

Ramanath Press, 188 Royapettah High Road, Madras, 14.
P. I. Card Q. H. No. MS 458

# முன்னுரை

முதல் நட்சத்திர மாலையின் முன்னுரையில், "(நேயர்களின்)... அன்பும், ஆதரவும் நிரந்தரமாய் வேண்டும்" என்ற வாக்கியத்துடன் முடித்திருந்தேன். நான் கோரிய அன்பையும், ஆதரவையும் அவர்கள் நான் எதிர்பார்த்ததற்குப் பன்மடங்காய் காட்டி என்னை உத்ஸாகத்தில் ஆழ்த்திவிட்டார்கள். சமீபகாலத்தில் தமிழ் நாட்டில் "நட்சத்திர மாலை"யைப் போல் வேறு எந்தப் புத்தகமும் விற்பனை ஆகவில்லை என்பதை அறிய நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நேயர்கள் காட்டிய அபாரமான ஆதரவு ஒருபுறமிருக்க, முதல்மாலை வெளிவந்தவுடன் பத்திரிகைகள் பிரமாதமாகப் புகழ்ந்து விமர்சனம் எழுதி, இப்புத்தகத்தைப் பிரபலப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அந்த விமர்சகர்களுக்கும், முதல் மாலையை வாங்கிய நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தன் மகனைப்பற்றி உலகோர் புகழும்போது ஒரு தாயார் எவ்வளவு சந்தோஷம் அடைவாளோ அவ்வளவு சந்தோஷத்துடன் இந்த இரண்டாவது மாலையை வெளியிடுகிறேன்.

முதல் மாலையை நான் ரொம்பவும் அவசரத்தில் தயாரிக்க நேர்ந்தது. அதனால் விஷயங்களையும், போட்டோக்களையும் சேகரிப்பதில் எனக்கேற்பட்ட சிரமத்தை எடுத்துக் காட்டியிருந்தேன். ஆனால், இந்த மாலையைத் தயாரிப்பதற்கு நான் அவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கவில்லை. இப்புத்தகத்தின் அவசியத்தையும், பலனையும் சினிமா நட்சத்திரங்கள் நன்குணர்ந்து கொண்டுவிட்டனர். அவர்கள் இம்மாலையைத் தயாரிப்பதில், என்னுடன் தேவையான அளவுக்கு ஒத்துழைத்திருக்கிறார்கள். தங்கள் வாழ்க்கை வரலாறுகளை விவரமாகக் கூறியிருப்பதுடன் அவர்கள் இப்புத்தகத்திற்கென்றே பிரத்தியேகமாய் சிரமத்தையும், செலவையும் பாராமல் புதிய போட்டோக்களை எடுத்துக் கொடுத்திருக்கின்றனர். சில நட்சத்திரங்கள் தங்கள் வாழ்க்கையை வெளியிடுவதற்குத் தாமாகவே முன்வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்பொழுது எனக்கேற்பட்ட சிரமமெல்லாம், எந்தெந்த நட்சத்திரத்தின் வாழ்க்கையை இந்த மாலையில் சேர்ப்பது என்பதில்தான்.

நட்சத்திரங்களின் மிகுந்த ஒத்துழைப்புடன் இந்த இரண்டாவது மாலை வெளிவருவதால், இதில் வெளிவந்துள்ள வாழ்க்கைச் சித்திரங்களில் பூரண வரலாறுகளும், ஒரு தனி அமைப்பும் பொருந்தியிருப்பதைக் காணலாம். முதல் மாலையை வாங்கிய நேயர்கள் பலர், "நட்சத்திரங்களின் உயரம், நிறம் போன்ற விவரங்களையும் அடுத்த மாலைகளில் வெளியிட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். அவர்களது விருப்பம் இம்மாலையில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

முதல் மாலை வெளிவந்து சுமார் இரண்டு வருஷ காலத்திற்குப் பிறகு இரண்டாவது மாலை வெளிவருகிறது. ஆனால் மூன்றாவது மாலையை இன்னும் சில மாதங்களிலேயே வெளிக்கொண்டு வந்துவிடத் தீர்மானித்திருக்கிறேன். முதல் மாலைக்குக் கிடைத்ததைவிட அதிக வரவேற்பு இந்த இரண்டாவது மாலைக்குக் கிடைக்குமென்று நம்புகிறேன்.

கடைசியாக, இந்த மாலையில் மின்னும் நட்சத்திரங்கள் எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்கள் அதிகமாக மின்னி, மேலும் மிகுந்த பிரகாசத்தைப் பெற இம்மாலை உதவுமாக.

சென்னை
11-9-1947

—பி. ஆர். எஸ். கோபால்
"குண்டூசி"

## இம் மாலையில்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. குமாரி ருக்மணி ... | 21 | 12. எம். கே. தியாகராஜ பாகவதர் ... | 88 |
| 2. எம். வி. ராஜம்மா ... | 28 | 13. கிருஷ்ணன்—மதுரம் ... | 100 |
| 3. வஸந்தகோகிலம் ... | 34 | 14. எம். கே. ராதா ... | 111 |
| 4. டி. வி. குமுதினி ... | 40 | 15. எல். நாராயண ராவ் ... | 117 |
| 5. எஸ். பி. எல். தனலக்ஷ்மி ... | 47 | 16. பி. எஸ். கோவிந்தன் | 126 |
| 6. டி. எஸ். தமயந்தி ... | 52 | 17. கே. சாரங்கபாணி ... | 132 |
| 7. சந்தானலக்ஷ்மி ... | 55 | 18. கொத்தமங்கலம் சீனு ... | 142 |
| 8. ஜி. சுப்புலக்ஷ்மி ... | 62 | 19. கொளத்து மணி ... | 146 |
| 9. எம். எஸ். தேவசேனு | 67 | 20. வி. வி. வி. பந்துலு ... | 151 |
| 10. எம். எம். தண்டபாணி தேசிகர் ... | 72 | | |
| 11. ஸி. ஹொன்னப்ப பாகவதர் ... | 81 | | |





















K. N. சங்கரன்,
இல்ல நூல் நிலையம்,
முத்து நகர் திருப்பூர்





K. N. சங்கரன்,
இல்ல நூல்
முத்து நகர் திருப்




K. N. சங்கரன்





K. N. சங்கரன்,
இல்ல நூல் நிலையம்,
முத்து நகர் திருப்பூர்.







# குமாரி ருக்மணி

ஜொஹரா கஜ்ஜன் என்று ஒரு பிரபல வட இந்திய நடிகை இருந்தாரே, ஞாபகம் இருக்கிறதா? இந்தக் காலத்து சாந்தா ஆப்தே, லீலா சிட்னிஸ் ஆகியோரைப்போல பிரபலமாய் விளங்கி வந்தார் அந்தக் காலத்தில் கஜ்ஜன். ஒரு நாள் கல்கத்தா மதன் பிலிம் ஸ்டுடியோவில் கஜ்ஜன் தம் படமொன்றிற்காக நாட்டியம் ஆடினார். அது முடிந்து, அவர் தம் அறைக்குச் செல்லும் வழியில் தற்செயலாய் கண்ட காக்ஷி அவருக்கு அதிக ஆச்சரியத்தை உண்டுபண்ணி விட்டது. ஏழெட்டு வயதுடைய ஒரு சிறுமி தாம் சற்றுமுன் ஆடிய நாட்டியத்தை அப்படியே தத்ரூபமாக ஆடிக்கொண்டு இருப்பதைக் கண்டார் கஜ்ஜன். உடனே அந்தச் சிறுமியை தம் அறைக்கு அழைத்துச் சென்று தம்மைப்போலவே மீண்டும் நாட்டியம் ஆடச்சொன்னார். சிறுமி முதலில் சங்கோஜப் பட்டாள். ஆனால் கஜ்ஜன் உற்சாகப்படுத்தியதின் பேரில் சிறுமி அவரைப்போலவே ஆடிக் காட்டினாள். கஜ்ஜன் உள்ளம் பூரித்தார். அந்தச் சிறுமியை அணைத்து முத்தமிட்டு விட்டு, தம்முடைய போட்டோ ஒன்றை எடுத்து அதில் தம் கையெழுத்தைப் போட்டு அவளிடம் கொடுத்தார். அப்பொழுது கஜ்ஜன் சொன்னார்: "இதோ பார், ருக்மணி! நீயும் என்னைப்போல பிரபல நடிகை ஆகவேண்டும்; தெரிந்ததா? என் படம் எந்தத் தியேட்டரில் ஓடிக்கொண்டிருந்தாலும் சரி; இந்தப் போட்டோவைக் காட்டினால் போதும். உன்னை சும்மாவே உள்ளே விடுவார்கள்" என்றார். கஜ்ஜனின் மனப்பூர்வமான ஆசீர்வாதம் வீண் போகவில்லை. இன்றைய தினம்—சுமார் பத்து வருஷங்களுக்குப் பிறகு—குமாரி ருக்மணி தமிழ் நாட்டின் கால் லக்ஷ ரூபாய் நக்ஷத்திரமாக ஆகியிருக்கிறார். அதோடு கஜ்ஜனைப் போலவே ருக்மணியும் நாட்டியத்தில் புகழ்பெற்ற நக்ஷத்திரமாக விளங்குவது கவனிக்கத் தக்கதாகும்.

ருக்மணியின் தாயாரே ஒரு சினிமா நடிகை ஆவார். அவருக்கும் பரத நாட்டியம் ஆடத்தெரியும். அவர் முதன் முதலாக "சீதா வனவாசம்" என்ற படத்தில் நடிப்பதற்காக

தம் பெண் ருக்மணியுடன கல்கத்தாவுக்குச் சென்றார். அந்தப் படத்திற்கு பிறகு அவர் "லலிதாங்கி," "ஹரிச்சந்திரா," "மாயா பஸார்," "ஜலஜா," "வாலிபர் சங்கம்," "தமிழ்த் தாய்," "பாக்ய லீலா," 'பூலோக ரம்பை" ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். "லலிதாங்கி" படத்தில் நடித்துக் கொண்டிருக்கையில்தான் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக்கும் சம்பவம் நிகழ்ந்தது.

"விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்பது வசனம். இதன் உண்மையைக் கண்டறிந்தார் காலஞ்சென்ற ஸ்ரீ. எஸ். வின்ஸென்ட். அப்பொழுது அவர் பயொனீர் பிலிம் ஸ்டுடியோவில் (டி. பி. ராஜலக்ஷ்மி நடித்த) **ஹரிச்சந்திரா** படத்தைத் தயாரிப்பதற்காகச் சென்றிருந்தார். ஸ்டுடியோவில் துறுதுறுப்பாக ஓடியாடிக் கொண்டிருந்த சிறுமி ருக்மணிக்கு அவர் தம் படத்தில் லோகிதாஸன் வேஷத்தைக் கொடுத்து நடிக்கச் செய்தார். அவர் எதிர்பார்த்தபடியே 'பேபி' ருக்மணி அந்த வேஷத்தை திருப்திகரமாய் நடித்து முடித்தாள்.

1927ம் வருஷம் ஏப்ரல் மாதம் 19ந் தேதி பிறந்த குமாரி ருக்மணி தம் எட்டாவது வயதில் சினிமாவில் நடிக்கப் புகுந்தார். சென்ற பத்து வருஷ காலத்தில் (நான்கு ஹிந்திப் படங்கள் உள்பட) இருபது படங்களில் நடித்து முடித்திருக்கிறார். **ஹரிச்சந்திரா**வுக்குப் பிறகு ருக்மணி கல்கத்தாவிலேயே தயாரான **மாயா பஸார்**, **தேசிங்கு ராஜன்**, **பாலயோகினி** ஆகிய படங்களில் நடித்தார். முந்தின இரண்டிலும் அவரது பாகம் சாதாரணமாகவே இருந்தது. ஆனால் பெருப்பாலும் குழந்தைகளே நடித்த **பாலயோகினி**யில் அவர் வேலைக்கார முனிசாமியின் மகளாகத் தோன்றி நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டு விட்டார்.

**பாலயோகினி** படம் முடிந்தவுடன் ருக்மணி குடும்பத்தாரின் கல்கத்தா வாசமும் முடிந்து விட்டது. பிறகு **ஜலஜா** படத்தில் நடிப்பதற்காக பம்பாய்க்குச் சென்றார்கள். அவர்கள் புறப்பட்ட வேளை நல்ல வேளையாகத்தான் இருக்க வேண்டும். பம்பாய் நகரம் அவர்களை பல வருஷங்களுக்கு விடாமல் இருத்திக் கொண்டுவிட்டது.

ஜலஜாவில் அவருக்கு அதிக சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றாலும் வாலிபர் சங்கம் இக்குறையைச் சரிக்கட்டி விட்டது. பிந்தின படத்தில் ருக்மணியின் திறமைகளை நாம் அதிகமாகப் பார்க்க முடிந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாய் பொதுஜன ஆதரவுதான் இப்படத்திற்கு அதிகம் ஏற்படவில்லை.

அதன் பின்னர் தேச முன்னேற்றத்தில் சொற்ப சந்தர்ப்பமே கிடைத்தது. பக்த குமணன் படத்திலோ அவருக்கு கதாநாயகி வேஷமே கிடைத்தது. பிறகு ஜெயபாரதி, தமிழ்த்தாய் ஆகிய படங்களிலும் நடித்தார் ருக்மணி. இந்தப் படங்களே பிரமாத வெற்றி பெறவில்லை. தவிர, படத்தைத் தயாரித்தவர்கள் ருக்மணிக்குப் பொருத்தமான வேஷத்தைக் கொடுத்து தகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ளவும் இல்லை. அவரது வேஷமும் நடிப்பும் சோபிக்காமல் போனதற்கு அவரது அப்போதைய "இரண்டுங் கெட்டான்." வயது ஒரு வேளை காரணமாய் இருக்குமோ என்று நினைக்க இடமிருக்கிறது.

பம்பாய் தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் ருக்மணி விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லையென்றாலும், அவரது திறமையை நேரில் பார்த்த ஸாகர் மூவிடோன்காரர்கள் ருக்மணிக்குத் தங்கள் படங்களில் இடமளிக்க முன்வந்தனர். கல்கத்தாவி லிருக்கும்போதே டைரெக்டர் பிரபுல்லா கோஷின் தூண்டுதலின் பேரில் ருக்மணி ஹிந்தி பாஷையைக் கற்றுக்கொண்டது இந்த சமயத்தில் வெகுவாகப் பயன்பட்டது. முதலில் 300 நாட்களுக்குப் பிறகு, அமாரா தேஷ், ஸ்வஸ்திகா ஆகிய மூன்று ஹிந்திப் படங்களில் அவர் நடித்தார். இப்படங்கள் மூலம் அவருக்கு அகில இந்தியப் புகழ் ஏற்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவரைப் பொறுத்த வரையில் சுச்சிதமாகப் பேசி, நடித்துள்ளதானது ஒவ்வொரு தமிழனும் பெருமை யடித்துக் கொள்ளவேண்டிய விஷயமாகும்.

தமிழ்த்தாய் படம் முடிந்தவுடன், (மூன்று வருஷ பம்பாய் வாசத்திற்குப் பிறகு) ருக்மணி குடும்பம் தமிழ் நாட்டுக்கே வந்து சேர்ந்தது. வந்ததும் வராததுமாய் சீதா

ஜனனம் படக்காரர்கள் அவரை தங்கள் படத்தில் இழுத்துப் போட்டுவிட்டனர். பிறகு **பூலோக ரம்பை, பரசுராமர், பாக்ய லீலா, ரிஷ்ய ஸ்ருங்கர், பக்த நாரதர்** ஆகிய படங்களிலெல்லாம் அவர் வரிசையாய் நடித்தார். இப்படங்களுள் **பூலோக ரம்பை**யிலும், **பாக்ய லீலா**விலும் அவருக்கு அதிக வேலை கொடுக்கப்பட்டது. **ரிஷ்ய ஸ்ருங்கர், பக்த நாரதர்** ஆகிய படங்களில் தோன்றிய "குமாரி ருக்மணியை" ரஸிகர்கள் உற்றுக் கவனிக்கத் தொடங்கினர்.

ரஸிகர்களைப் போலவே பிரகதி பிக்சர்ஸாரும் கொஞ்சம் உற்றுக் கவனித்தனர். பல வருஷங்களாக, பல படங்களில் அசிரத்தையுடன் விடப்பட்டிருந்த இந்த உபநடிகையிடம் முதல்தர நக்ஷத்திரமாவதற்கு அவசியமான எல்லா அம்சங்களும் பொருந்தி யிருப்பதை அவர்கள் கண்டனர். தைரியமாகத் தங்கள் **ஸ்ரீ வள்ளி** படத்தின் கதாநாயகி வேஷத்தை ருக்மணிக்கு அளித்து, அவர் தம் திறமை பூராவையும் காட்டும்படிச் செய்திருக்கின்றனர். பிரகதி பிக்சர்ஸார் எடுத்துக் கொண்ட பிரத்தியேக சிரத்தையின் விளைவாக, **ஸ்ரீ வள்ளி** படம் வெளிவந்த மறுகணமே ருக்மணி முன்னணி நக்ஷத்திரங்களின் வரிசைக்குத் தாவி விட்டார்.

**ஸ்ரீ வள்ளி**யில் ருக்மணியின் வெற்றிக்கு முக்கிய காரணம் வேஷப் பொருத்தமேயாகும். வேஷத்திற்குத் தகுந்த வயது; வயதிற்குத் தகுந்த அழகு! **ஸ்ரீ வள்ளி** சம்பந்தமான படங்கள் பத்திரிகைகளில் வெளி வந்ததும் ரஸிகர்களின் உள்ளங்களில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. "உண்மையில் அதே ருக்மணி தானா இவர்?" என்று அவர்கள் ஆச்சரியத்துடன் கேட்டனர். இயற்கை அவருக்குத் தகுந்த வயதில் அவ்வளவு வசீகரத்தை அளித்திருக்கிறது அந்த வசீகரத்தோடு, நல்ல நடிப்பும், அழகிய நாட்டியமும் ஒன்று சேர்ந்து, அவருக்கு அமோஹமான புகழைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றன.

**ஸ்ரீ வள்ளி** படத்திற்குப் பிறகு ருக்மணி **லவங்கி**யில் தோன்றினார். இப்படத்தில் அவருடைய பாட்டுகளை அவரே பாடியிருக்கிறார். ஆனால் **ஸ்ரீ வள்ளி** அவருக்களித்த அவ்வளவு புகழ் **லவங்கி** மூலம் ஏற்பட்டதாகச் சொல்லுவதற்கில்லை. ஆனால், பின்னர் அவர் **பங்கஜவல்லி** தமிழ்ப் படத்தில் ஒரு சிறிய பாகத்

தில் தோன்றினாலும் நல்ல பாராட்டுதல்களைச் சம்பாதித்துக் கொண்டார்.

ருக்மணி சுயமாகப் பாடும் திறமை உடையவர். முன்பே பல படங்களில் அவர் பாடியிருக்கிறார். வாலிபர் சங்கம், பக்த குமணன், பாக்ய லீலா, பக்த நாரதர் ஆகிய படங்களில் தாம் பாடிய பாட்டுகளை அவர் இசைத் தட்டுகளிலும் பாடியிருக்கிறார். அவரது தனிப்பட்ட பாட்டுகள் கொண்ட இசைத் தட்டுகள் வெளி வருவதற்கும் ஏற்பாடாகியிருக்கிறது. ஸ்ரீ வள்ளி படத்திலும் முதலில் ருக்மணி தம் பாட்டைத் தாமேதான் பாடினார். பிறகு என்ன காரணத்தாலோ அவருடைய பாட்டுகள் அகற்றப்பட்டு, பி. ஏ. பெரியநாயகியின் பாட்டுகள் பிணைக்கப் பட்டிருக்கின்றன. சிறு பிராயத்திலிருந்தே ருக்மணிக்கு லளித கலைகளில் பரிச்சயம் ஏற்பட்டு விட்டது. அவருடைய தாயாரே அவருக்கு முதலில் சங்கீதத்தைக் கற்றுக் கொடுத்தார். தாயாருக்கே நாட்டியம் தெரிந்திருந்ததால் ருக்மணிக்கும் நாட்டியம் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இயற்கையாகவே ஏற்பட்டதில் ஆச்சரியம் என்ன? கஜ்ஜை சந்தித்தது முதல் ருக்மணி வட நாட்டு நாட்டியத்தை தாமாகவே ஆடப் பழகிக்கொண்டார். பிறகு ராஜா தேசிங்கு படத்திற்காக பரத நாட்டியம் ஆடிய அடையாறு ருக்மணி தேவியை நேரில் பார்த்ததிலிருந்து அவருக்குப் பரத நாட்டியம் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. பிறகு தம் தாயாருடைய உதவியோடு அவர் பாவம் பிடிப்பதற்குப் பழகிக்கொண்டார்.

பால்யத்தில் ருக்மணிக்கு பரத நாட்டியத்தில் ஏற்பட்ட ஆசை அவரை விட்டுப்போக மறுத்துவிட்டது. படங்களில் நடித்த வண்ணமே அவர் காஞ்சீவரம் எல்லப்ப நட்டுவனிடம் சிக்ஷை சொல்லிக்கொண்டார். 1942-ம் வருஷம் சரஸ்வதி பூஜையன்று சென்னை ரஸிக ரஞ்சனி சபையில் அவருடைய பரத நாட்டியம் அரங்கேற்றப்பட்டது. அது முதல் சென்ற மூன்று வருஷ காலத்திற்குள் குமாரி ருக்மணி தென்னிந்தியா பூராவிலும் நாட்டியம் ஆடி அதிக பிரசித்தி பெற்றுவிட்டார். இலங்கைக்குச் சென்று யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு ஆகிய நகரங்களில் நாட்டியமாடி

அங்குள்ள ரஸிகர்களின் பேரபிமானத்தையும் அவர் சம்பாதித்துக் கொண்டு வந்திருக்கிறார். அவர் இக்கலையில் அபாரமான புகழை அடைந்ததைப் பார்த்த ரஸிகர்கள், அவர் ஒரு சினிமா நடிகை என்ற விஷயத்தை மறந்து வருவதுபோல் தோன்றியது. அதனால்தானோ என்னமோ ருக்மணி தம் பரத நாட்டியக் கச்சேரிகளைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு மீண்டும் படங்களில் நடிக்க ஆரம்பித்திருக்கிறார்.

நாட்டியத்தைப் போலவே சங்கீதத்திலும் தாம் பெற்ற ஆரம்ப சிக்ஷைகளை எட்டயாபுரம் ராஜகோபாலய்யர், களக்காடு ராமநாராயணய்யர், மாயவரம் கிருஷ்ணய்யர் ஆகிய வித்வான்கள் மூலம் ருக்மணி பலப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவர் கச்சேரிகள் செய்யும் நோக்கத்துடன் சங்கீதம் கற்றுக்கொள்ளவில்லை யென்றாலும், நன்றாகப் பாடக்கூடிய திறமையைப் பெற்றிருக்கிறார். அதோடு அவருக்கு இனிய சாரீரமும் பொருந்தி யிருக்கிறது.

சிவந்த மேனியும், நடுத்தர உயரமும், குறுகுறுப்பான விழிகளும் உடைய—ஐயர் ஜாதியைச் சேர்ந்த—குமாரி ருக்மணிக்கு எதைப் பார்த்தாலும் அப்படியே செய்து பார்த்து விட வேண்டுமென்ற ஆசை அதிகம் உண்டு. அதற்கு அவசியமான நுட்ப அறிவும் பொறுமையும் அவரிடம் உள்ளன. அவருக்கு நூல் பின்னல் வேலையும் மோட்டார் ஓட்டவும் தெரியுமாம். இரண்டாவது பாரத்துடன் அவர் தம் படிப்பை நிறுத்திவிட்டார் என்றாலும் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய பாஷைகளை எழுதவும் பேசவும் கற்றுக் கொண்டிருக்கிறார். குஜராத்தி, மராத்தி, உருது ஆகிய பாஷைகளைப் பேசமட்டும் அவருக்குத் தெரியுமாம். சுருக்கச் சொல்ல வேண்டுமானால், ருக்மணி தம் சொற்ப வயதிற்குள் ஏராளமான விஷயங்களைக் கற்றுக்கொண்டு அவற்றின் மூலம் புகழையும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார் என்பது ஆச்சரியப்படத்தக்க விஷயமாகும்.

தமிழ்ப் படவுலகில் ருக்மணி தோன்றுவதற்கு முன்பும், தோன்றிய பின்னரும் பல பால நக்ஷத்திரங்கள் திரைக்கு வந்திருக்கின்றனர். ஆனால் சில படங்களுக்குப் பிறகு

அவர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டனர். ருக்மணியோ சினிமா உலகிற்கு வந்த நாள் முதல் இடைவிடாமல் நடித்து வந்திருப்பதோடு, தற்போதைய முன்னணி நக்ஷத்திரங்களில் ஒருவராகவும் விளங்குகிறார்.

ஸ்ரீ வள்ளி படத்தில் சிறப்பாகத் திருமணம் செய்து கொண்ட குமாரி ருக்மணிக்கு வாழ்க்கையில் அந்த சந்தோஷ வைபவம் இன்னும் வாய்க்கவில்லை. பெற்றோர்களுக்கு ஒரே பெண்ணான ருக்மணியை அவர்கள் தம் கண்ணென மதித்து வருகின்றனர். லூயி டிரேபஸ் கம்பெனியைச் சேர்ந்த கலை அன்பர் ஸ்ரீ. கே. மஹாலிங்கய்யர் ஒரு தகப்பனுருக்கு இருக்கவேண்டிய அக்கரையுடன் பாடுபட்டு ருக்மணியை இவ்வளவு ஏற்றப் பதவிக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

ருக்மணி தற்போது ஸ்ரீ ஜெகதீஷ் பில்ம்ஸார் தயாரித்து வரும் ராமதாஸ் தமிழ்ப் படத்திலும், லவங்கி, ராமதாஸ் ஆகிய ஹிந்திப் படங்களிலும் ஏககாலத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். ருக்மணியை ஒரு உன்னத நக்ஷத்திரமாக்கி வைத்தே விடுவது என்று டைரக்டர் ஒய். வி. ராவ் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாராம். ஒரு திறமைமிக்க டைரக்டரும் ஒரு திறமை மிகுந்த நடிகையும் சேர்ந்து, ஒரு மனதுடன் உழைக்கும்போது கோரிய வெற்றி கிட்டாமலா போய்விடும்?

# எம் வி. ராஜம்மா

இரண்டு பாஷைகளுக்கு அதிகமான படங்களில் நடித்திருக்கும் நக்ஷத்திரங்கள் இந்தியா பூராவிலுமே நான்கைந்து பேர்கள்தான் இருப்பர் என்று நினைக்கிறேன். இத்தகைய அசாதாரணமான கௌரவத்தை தென்னாட்டில் எம். வி. ராஜம்மாவும், ஜெயம்மாவும் பெறுகின்றனர். எனினும் முதன் முதலில் இந்தப் பெருமையைக் கைப்பற்றிக் கொண்டவர் ராஜம்மாதான். அதுவும் முதன் முதலாக நடித்த மூன்று படங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாஷையைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

ராஜம்மா முதலில் நடித்தது **சம்சார நௌகா** கன்னடப் படத்தில். இரண்டாவதாக அவர் நடித்தது **கிருஷ்ண ஜராஸந்தா** தெலுக்குப் படத்தில். அடுத்தபடியாக நடித்தது **யயாதி** தமிழ்ப் படத்தில்! பிறகுகூட ராஜம்மா இந்த மூன்று பாஷைப் படங்களிலும் மாறி மாறி நடித்து வருகிறார். அவர் இதுவரை நடித்திருக்கும் 12 படங்களுள் 6 படங்கள் தமிழ்ப் படங்களாகும். பாக்கியில் மூன்று தெலுங்குப் படங்கள்; மற்ற மூன்றும் கன்னடப் படங்களாகும். கன்னடத்தைத் தாய்பாஷையாகக் கொண்டவரென்றாலும், முதலில் தோன்றியது கன்னடம், தெலுங்கு ஆகிய பாஷைப் படங்களில்தான் என்றாலும், ராஜம்மா தமிழ்ப் படங்களிலேயே அதிகமாய்த் தோன்றி வருவதால் அவரை "தமிழ்ப்பட நக்ஷத்திரம்" என்று சொல்லுவதுதான் பொருத்தமாகும்.

ராஜம்மாவை ஒரு தமிழ் நக்ஷத்திரமாகக் கருதுவதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. "மைசூர்" என்பதைக் குறிப்பிடுவதற்கு அறிகுறியாக "எம்" என்ற எழுத்தைத் தம் பெயருடன் சேர்த்துக்கொண்டு, பங்களூரில் குடியேறியிருக்க ராஜம்மாவின் பூர்விகம் சேலம் ஜில்லாவிலுள்ள சூலகிரி என்ற ஊராகும்.

ராஜம்மா 27 வருஷங்களுக்கு முன் லிங்காயத் (சைவ) ஜாதியைச் சேர்ந்த நஞ்சப்பா, சுப்பம்மா ஆகியவர்களின் புத்திரியாகப் பிறந்தார். அவருக்கு ஒரு தமையனும் தமக்கையும் கூடப் பிறந்தவர்களாக இருந்தனர். ராஜம்மா சிறு குழந்தையாக இருந்த போதே இந்த ஏழைக் குடும்பம் பங்களூருக்குச் சென்று குடியேறிவிட்டது.

சாதாரணமாக, ஒரு குடும்பத்தில் பெற்றோரோ அல்லது வேறு யாரோ பாடத் தெரிந்தவர்களா யிருந்தால் அக் குடும்பத்தில் வளரும் குழந்தைகளுக்கும் சங்கீதத்தில் ரஸிப்போ, பயிற்சியோ ஏற்படுவது ஆச்சரியப் படத்தக்க விஷயமல்ல. ஆனால், "சங்கீதம்" என்றால், "இதென்ன, இங்கிலாந்தில் உள்ள ஒரு ஊரின் பெயரா?" என்று கேட்கக் கூடியவர்கள் அடங்கிய குடும்பத்தில் பிறந்தவரான ராஜம்மா வுக்கு சங்கீதத்தில் பிரியமும், பயிற்சியும் ஏற்பட்டிருப்பது ஆச்சரியந்தானே!

குழந்தை ராஜம்மா பங்களூர் சிக்பெட்டிலுள்ள ஆரிய பாலிகா மிடில் ஸ்கூலில் சேர்க்கப்பட்டார். மூன்றாவது பாரம் வரையில் படித்துப் படிப்பை முடித்துக் கொண்டார். பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது பள்ளிக்கூட நாடகங்களில் ராஜம்மா பங்கெடுத்துக் கொள்ளுவது வழக்கம். அநேகமாக அவருக்கு கிருஷ்ணன் வேஷந்தான் கொடுக்கப் படுமாம். இந்த வேஷத்தை அவர் அதி திறமையுடன் நடிப் பாராம். ஒரு சமயம் மைசூர் யுவராணியே அவருடைய நடிப்பை மெச்சிப் பரிசு வழங்கி யிருக்கிறாராம்.

ராஜம்மா படித்த பள்ளிக்கூடத்தில் சுப்பராவ் என்று ஒரு உபாத்தியாயர் இருந்தார். அவருக்கு முறைப்படி பாடத் தெரியுமாம். ராஜம்மாவுக்கு நல்ல குரல் இருப்ப தைக் கண்ட அவர், தமக்குத் தெரிந்த சங்கீதத்தை இவ ருக்குப் போதித்து வைத்தார். கொஞ்சம் வழிகாட்டி விடப் பட்டபின் ராஜம்மா தாமாகவே, தம் சங்கீதத்தை விருத்தி செய்து கொண்டிருக்கிறார்.

பதினாறுவது வயது நடந்து கொண்டிருந்த போது ராஜம்மாவுக்கு திருமணம் நடந்தேறியது. அவர் மைசூரைச்

சேர்ந்த வீரப்பா என்பவரின் மனைவியானார். ஆனால் குழந்தைகள் கிடையாது. வீரப்பா ஒரு நாடக நடிகர். மைசூர் ஸ்ரீ சகுந்தலா நாடக மண்டலியில் அவர் நடித்து வந்தார். அந்தக் காலத்தில் நாடக நடிகர்களின் பொருளாதார விஷயந்தான் தெரிந்ததாயிற்றே — பெருமைக்காக நடித்துவிட்டு பொருள் விஷயத்தில் பொறுமையாக இருந்து விட வேண்டும் என்று. இதொரு புறமிருக்க ராஜம்மாவின் குடும்பத்தில் சில கலவரங்கள் ஏற்படலாயின. ஆதலால் வீட்டில் இருக்கப் பிடிக்காதவர்களாய் தம்பதிகள் வெளியேறினர். இதன் பின்னர், அவர்கள் பந்து போட்டுக் கொண்டு பல கஷ்டங்களை அனுபவித்து வந்தனர்.

இந்தச் சமயத்தில் (1935-ம் வருஷத்தில்) கலா சேவக நாடக மண்டலியினர் சென்னையில் "சம்சார நௌகா" கன்னட நாடகத்தை அதி விமரிசையாக நடத்தி அசாத்தியமான புகழைச் சம்பாதித்துக் கொண்டிருந்தனர். இந்த நாடகங்களில் பி. ஆர். பந்துலு கதாநாயகனாகத் தோன்றுவது வழக்கம். இந்த நாடகம் சென்னையில் பெற்ற அமிதமான ஆதரவின் காரணமாக சென்னை தேவி பில்ம்ஸார் இந்த நாடகத்தை, அதே நடிகர்களை நடிக்கச் செய்து படமாகத் தயாரிக்க முன்வந்தனர். மேற்படி நாடகத்தில் அசட்டு 'மாது'வின் வேஷத்தை நடிப்பதில் பெயர் பெற்ற மாதவராவும் மற்றும் சிலரும் சில நடிக நடிகைகளைப் பொறுக்குவதற்காக பங்களூருக்குச் சென்றிருந்தனர். பால்ய விதவை சரோஜாவின் பாகத்தை படத்தில் நடிப்பதற்காக ராஜம்மா ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். சென்னைக்கு வந்த பின் ராஜம்மாவிடம் சிறந்த நடிப்புத் திறமை இருப்பதைக் கண்ட பட முதலாளிகள் அவருக்கு கதாநாயகியின் வேஷத்தையே கொடுத்து நடிக்கச் செய்தனர்.

1936-ம் வருஷத்தில் வெளி வந்த ஸம்ஸார நௌகா படம் ராஜம்மாவுக்கு முதல் படமா யிருந்த போதிலும், அவரது நடிப்பு மிகப் போற்றத்தக்கதாக அமைந்து விட்டது. அவர் சிறந்த வெற்றியை அடைவதற்கு அவருடைய சங்கீதமும் உதவியா யிருந்தது.

மஹமதா பீர் என்ற காலஞ் சென்ற பிரபல நடிகரை சென்னை வாசிகள் நன்கு அறிவர். அவர் மேடையில் ஏறி

விட்டால் போதும், சபையோரை மெய்மறக்கச் செய்து விடுவார். அவர் துக்கத்தி லாழ்ந்தால் நாமும் துக்கத்தி லாழ்ந்து போவோம்; அவர் சிரித்தால் நாமும் சிரிக்க வேண்டும்; அவர் அழுதால் நாமும் அழுதே ஆகவேண்டும். இப்படியாக சபையோரைத் தம் நடிப்பு என்ற மந்திர சக்தியின் மூலம் ஆட்டி வைத்து, நாடகாபிமானிகளின் நன் மதிப்பைப் பெற்றிருந்தார் உன்னத நடிகர் மஹமது பீர்.

அவர் தம் சொந்தக் கம்பெனியை ஆரம்பித்து, சென்னையில் "சம்ஸார நௌகா" கன்னட நாடகத்தை நடிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். இந்த சமயத்தில்தான் "சம்ஸார நௌகா" கன்னடப் படம் வெளி வந்தது. அப்படத்தில் எம். வி. ராஜம்மா திறமையுடன் நடித்திருந்ததைக் கண்ட மஹமது பீர் அவரை தம் நாடகக் கம்பெனியில் ஒரு நிரந்தர நடிகையாக அமர்த்திக்கொண்டார்.

பால்யத்தில் பள்ளிக்கூட நாடகங்களில் நடித்ததைத் தவிர ராஜம்மா வேறு தொழில் நாடகங்களில் அதற்கு முன் நடித்தது கிடையாது. "சம்ஸார நௌகா" மேடைக்கு வந்தது. சென்னை வாசிகளின் அளவற்ற பாராட்டுதலைப் பெற்றது. அந்த நாடகத்தில் கதாநாயகியாகத் தோன்றி நடித்த ராஜம்மாவின் நடிப்புத் திறமையை நானே நேரில் பார்த்து அப்பொழுது மிகப் புகழ்ந்திருக்கிறேன்.

மஹமது பீர் கம்பெனியார் சென்னையிலேயே பல மாதங்கள் தங்கி, தொடர்ந்தாற்போல், "சம்ஸார நௌகா," "கௌதம புத்தர்" "ஷாஜஹான்," "கிருஷ்ண லீலா," "சதாரம்," "பிரேம லீலா" ஆகிய பிரபல நாடகங்களை யெல்லாம் நடித்து ஏராளமான பொருளையும், புகழையும் சம்பாதித்துக் கொண்டனர். இந்த நாடகங்களி லெல்லாம் ராஜம்மாதான் கதாநாயகியாக நடித்துவந்தார். அவருடைய புகழ் நாளுக்கு நாள் ஓங்கியது.

சென்னை ஜபா பில்ம்ஸார் 1937-ம் வருஷத்தில் கிருஷ்ண ஜராஸந்தா என்ற தெலுங்குப் படத்தைத் தயாரிக்கத் தொடங்கினர். கன்னடப் படத்தின் மூலம் சினிமாவுக்கு வந்திருந்த ராஜம்மாவை மேற்படி பட முதலாளிகள் தங்கள் தெலுங்குப்

படத்தில் பிரபல கங்கையாவுடன் கதா நாயகியாக நடிக்கச் செய்தனர். இந்தப் படத்திற்கு நல்ல வசூல் கிடைத்தது. ராஜம்மா தமக்கு சம்ஸார நௌகாவில் கிடைத்த புகழை இப் படத்தில் பக்குவமாய்க் காப்பாற்றிக் கொண்டார்.

ஜராஸந்தா முடிந்தவுடன், 1938 ம் வருஷத்திலேயே ராஜம்மா, மோஹன மூவிடோன் கம்பெனியார் கல்கத்தாவில் தயாரித்த யயாதி தமிழ்ப் படத்தில் நடிக்கச் சென்றார். எம். எல். டாண்டனல் டைரெக்ட் செய்யப்பட்ட இப்படத்தில் பி. யு. சின்னப்பா கதாநாயகனாக நடித்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். ராஜம்மா முதன் முதலில் நடித்த தமிழ்ப் படம் இதுதான். இப்படத்தில் அவருடைய பேச்சு சர்வ சுத்தமாக இருக்கவில்லையென்றாலும் அவர் இதர திறமைகள் மூலம் இப்படத்தில் பெயர் சம்பாதித்துக் கொண்டார்.

யயாதிக்குப் பிறகு மாடர்ன் தியேட்டர்ஸாரின் வெற்றிப் படமான உத்தம புத்திரனிலும், டி. கே. சகோதரர்கள் நடித்த குமாஸ்தாவின் பெண் படத்திலும் நடித்தார். இவ்விரு படங் களும் ராஜம்மாவுக்கு நிரம்ப புகழைக் கொடுத்தன. ஆனால் பிறகு அவர் நடித்த மதனகாமராஜன், அனந்தசயனம் ஆகிய படங் களில் அவருடைய நடிப்பு அவ்வளவு சோபிக்கவில்லை. அதனால்தானோ என்னமோ அவர் தமிழ்ப் படங்களில் நடிப் பதை கொஞ்சம் நிறுத்திக்கொண்டு, கன்னட தெலுங்குப் படங்களில் மீண்டும் நடிக்க ஆரம்பித்தார்.

ஸ்ரீ. கே. சுப்ரமண்யத்தின் கன்னட பிரஹலாதாவில் கயாது வின் பாத்திரம் அவருக்குக் கிடைத்தது. அதை நடித்து முடித்த பின்னர் 1943-ம் வருஷத்தில் ராஜம்மா "ஸ்ரீ விஜயா பில்ம்ஸ்" என்ற பேயருடைய சொந்த படத் தயாரிப்புக் கம்பெனியை ஸ்தாபித்தார். முதல் படமாக ராதா ரமண வை கன்னட பாஷையில தயாரிக்க ஏற்பாடு செய் தார். ஜோதிஷ் ஸின்ஹாவால் டைரெக்ட் செய்யப்பட்ட இப்படத்தில் பி. ஆர். பந்துலு உள்பட சம்ஸார நௌகா படத் தில் நடித்த நடிகர்களெல்லாம் நடித்தனர். இப்படத்தை ஆரம்பித்தவுடன் பல திக்குகளிலிருந்தும் அவருக்கு இடை யூறுகள் கிளம்பின. ஆனால் அவர் தைரியமாக எல்லாவற்

றையும் சமாளித்துக் கொண்டு படத்தை வெற்றிகரமாய் வெளிக் கொணர்ந்துவிட்டார்.

**ராதா ரமணு** படம் கன்னட தேசத்தில் பிரமாத வெற்றியைப் பெற்றதாகத் தெரிகிறது. தம் சொந்தப் படத்தில் வெற்றி பெற்ற ராஜம்மா, பின்னர் சாரதி பிலிம்ஸின் **மாயா லோகம்** தெலுங்குப் படத்திலும், கலைவாணியின் **அர்த்தநாரி** தமிழ்ப் படத்திலும் நடித்தார். இவ்விரு படங்களிலும் அவருக்கு சுமாரான பெயர் கிடைத்தது. கடைசியாக அவர் நடித்துள்ள படம் **விஜயலக்ஷ்மி**. இப்படத்தில் அவருடைய பாத்திரம் நன்கு சோபித்தது.

தற்போது ராஜம்மா வாஹினி பிக்சர்ஸின் **யோகி வேமன்று** தெலுங்குப் படத்தில் நடித்து முடித்திருக்கிறார். இப்படத்தில் அவருக்கு பிரமாதமான புகழ் ஏற்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இதே சமயத்தில் அவர் **ஞானசௌந்தரி**, **கோகுலதாஸி** ஆகிய படங்களுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

நடிப்பு, பாட்டு, நடுத்தர உயரம், பருமனில்லாத தேக அமைப்பு, கேமிரா கோணங்களுக்கு மிகத் தகுதியான வசீகரத் தோற்றம், புகழ் பெற வேண்டுமென்ற ஆசை இவையெல்லாம் ராஜம்மாவிடம் பொருந்தி யிருக்கின்றன. ஆதலால் அவர் எதிர் காலத்தில் மேலும் அதிகப் புகழ்பெறுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

# என். ஸி. வஸந்தகோகிலம்

வஸந்தகோகிலம் என்ற வெகு அழகான பெயர் யாரால் சிருஷ்டிக்கப் பட்டதோ எனக்குத் தெரியாது. ஆனல் கூர்ந்து கவனித்தால் இப்பெயரைச் சிருஷ்டித்தவருக்கு அசாத்தியமான கவிதா ஞானம் இருக்கவேண்டும் என்பதை அறியலாம். கவிதை ஒருபுற மிருக்கட்டும்; இப்பெயரின் உச்சரிப்பிலேயே சங்கீதம் நிரம்பி யிருப்பதைக் கவனியுங்கள்!

"காமாக்ஷி" என்ற சாதாரணப் பெயருக்குப் பதில் "வஸந்தகோகிலம்" என்ற கற்பனை நிறைந்த பெயரை அப் பாடகி சூட்டிக்கொண்டது, தாம் வஸந்தகால கோகிலமாக விளங்குகிறார் என்பதற்காகவா அல்லது விளங்கப்போகிறார் என்பதற்காகவா என்றெல்லாம் நாம் ஆராய்ச்சியி லிறங்க வேண்டாம். எப்படியாயினும், "வஸந்தகோகிலம்" என்ற பெயர் என். ஸி. வஸந்த கோகிலத்திற் கென்றே சிருஷ்டிக் கப்பட்டதுபோல இப்பொழுது தோன்றுகிறது. இந்தப் பெயர் அவருக்கு அவ்வளவு பரிபூரணமாய் பொருந்தி யிருக் கிறது.

தமிழ் நாட்டில் மூன்று பெண்மணிகள் சங்கீதத்தில் இணையற்ற புகழுடன் விளங்குகின்றனர். அவர்களுடைய கச்சேரிகளுக்கு அசாத்தியமான கூட்டம்; அபரிமிதமான வசூல். அவர்களுடைய இசைத் தட்டுகளுக்கு அபாரமான விற்பனை. ரேடியோ பெட்டிகளுள்ள இடங்களிலோ அவர் களுடைய பாட்டைக் கேட்பதற்காக தவிர்க்க முடியாத கூட் டம்! இவ்விதம் பொது ஜனங்களின் அமோஹமான ஆதர வைப் பெற்றிருக்கும் மும்மணிகளில் ஒருவர்தான் வஸந்த கோகிலம். சுமார் பத்து வருஷங்களுக்கு முன் அவரை அறிந்தவர்கள் சொற்பப் பேர்களே; ஆனல் இன்றைய தினமோ அவரை அறியாதவர்கள்தான் சொற்பப் பேர்களாக இருக்கின்றனர். இந்த சொற்ப காலத்திற்குள் அவர் விடா

முயற்சியுடன் பாடுபட்டு ஒரு முன்னணிப் பாடகியாகி யிருக்கிறார்.

வஸந்தகோகிலத்தின் பூர்வீகம் மலையாள தேசம். கொச்சிக்கு சமீபத்திலுள்ள இருஞாலக்குடாதான் அவருடைய சொந்த ஊர் ஆகும். ஆனால் அந்த ஊரைப் பற்றியோ, அல்லது அந்த தேசத்தைப் பற்றியோ அவருக்கு ஒன்றுமே தெரியாது. அவர் பிறந்து வளர்ந்த தெல்லாம் நாகப்பட்டினத்தில். ஆதலால் அதையே தம் சொந்த ஊராகக் கருதுகிறார் வஸந்த கோகிலம்.

இந்த ஊரில் ஸ்ரீ ஜாலரா கோபாலய்யர் என்ற சங்கீத வித்வான் ஒரு சங்கீதப் பள்ளிக்கூடத்தை நடத்திவந்தார். அவருக்குப் பிறகு இப் பள்ளிக்கூடத்தை அவருடைய மாப்பிள்ளையான ஜாலரா வெங்கட்டராமய்யர் இன்றையதினமும் நடத்தி வருகிறார். வஸந்தகோகிலத்தையும், புல்லாங்குழல் டி. ஆர். மஹாலிங்கத்தையும் ஏக காலத்தில் தமிழ் நாட்டிற்கு அளித்த பெருமை இப் பள்ளியையே சேரும்.

வஸந்தகோகிலம் இரண்டு மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோதே அவருடைய தாயார் இறந்துவிட்டார். ஆதலால் அவரையும், அவருடைய தமையன், தமக்கை ஆகிய மூவரையும் தகப்பனார் ஸ்ரீ கே. சந்திரசேகர ஐயர் செல்வமாக வளர்த்துவந்தார். வஸந்தகோகிலத்திற்கு அதி மதுரமான சாரீரம் இருந்ததனால் அவர் தம் பெண்ணை ஜாலரா கோபாலய்யரின் பள்ளிக்கூடத்தில் சேர்த்து சங்கீதம் கற்கச்செய்தார்.

சில வருஷ சிக்ஷைக்குப் பின்னர் வஸந்தகோகிலம் இசைத் தட்டுகளில் பாடவேண்டுமென்ற எண்ணத்துடன் 1936-ம் வருஷத்தில் சென்னைக்கு வந்தார். மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்பொரேஷன் கோஷ்டியினர் தங்கள் நவீன சதாரம் படத்திற்காக கல்கத்தாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயம் அது. அவர்கள் ஒரு சிற்றுண்டி விருந்தை நடத்தினர். அந்த விருந்தின் முடிவில் வஸந்த கோகிலம் தம் முதல் கச்சேரியை செய்தார்.

இந்தக் கச்சேரிக்குப் பிறகு வஸந்தகோகிலம் சென்னையிலேயே தங்கி தம் சங்கீதத் திறமையை அபிவிருத்தி செய்து

கொண்டார். 1938-ம் வருஷத்தில் சங்கீத வித்வத் சபையார் (மைசூர் யுவராஜா தலைமையில்) நடத்திய சங்கீதப் போட்டியில் அவர் கலந்துகொண்டார். வஸந்தகோகிலத்திற்கு இப் போட்டியில் முதற் பரிசு கிடைத்தது. இரண்டாவது பரிசு யாருக்குக் கிடைத்தது என்று நினைக்கிறீர்கள்? இப்பொழுது பிரபல நடிகையாக விளங்கி வரும் வஸுந்தரா தேவிக்குத் தான்!

சங்கீத வித்வத் சபைப் போட்டியில் அவர் பாடிப் பரிசு பெற்றது பலரது கவனத்தைக் கவர்ந்தது. "யூனைடெட் பில்ம்ஸ்" என்ற ஒரு படக் கம்பெனியை ஆரம்பித்திருந்த கோவிந்தராம் என்பவர் தம் "மோக்ஷம்" தமிழ்ப் படத்திற்காக வஸந்தகோகிலத்தையும், வஸுந்தராவையும் ஒப்பந்தம் செய்துகொண்டார். ஆனால் இந்தப் படம் தயாரிக்கப்படவே யில்லை. மைசூரிலுள்ள ஸ்டுடியோவில் படத்தைத் தயாரிப்பதற்காக நடிக கோஷ்டியினரை பங்களூருக்கு அழைத்துச் சென்றுவிட்டு, படமுதலாளி மாயமாய் மறைந்தார். திரும்ப ஊர்வந்து சேருவதற்கு நடிகைகள் கை வளையல்களையும், நடிகர்கள் இதரபொருள்களையும் விற்றுப் பணம் சேர்க்க வேண்டியதாயிற்று!

சங்கீதப் போட்டியில் பரிசு பெற்றதன் விளைவாக அவருடைய பாட்டுகளை இசைத்தட்டுகள் மூலம் வெளியிட "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கம்பெனியார் முன்வந்தனர். "எனக்குன்னிருபதம்" என்ற பாட்டுள்ள வஸந்தகோகிலத்தின் முதல் இசைத்தட்டு 1938-ம் வருஷத்தில் வெளிவந்தது. இந்த இசைத்தட்டு மிக இனிமையாக அமைந்துபோனது, அவரது எதிர்காலப் புகழிற்கு அஸ்திவாரக் கல் நாட்டியது போலாயிற்று.

வஸந்தகோகிலத்தின் இனிய சங்கீதத்தைக் கேட்டு மயங்கிப் போனவர்களில் டைரெக்டர் வி. கே. சாச்சியும் ஒருவராவர். இங்கிலாந்திலிருந்து அப்பொழுதே திரும்பியிருந்த அவர் **சந்திரகுப்த சாணக்யா** படத்தைத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். வஸந்தகோகிலத்தைத் தேடிப்பிடித்து நேரில் பார்த்தபோது, சாயாவின் வேஷத்தை நடிப்பதற்கு அவசியமான காத்திரமான தேக அமைப்பு

அவருக்கில்லாதது கண்டு ஸ்ரீ. சாச்சி ஏமாற்றமே அடைந்தாராம். எனினும் அவருடைய சங்கீதத்தை உத்தேசித்தே வஸந்தகோகிலத்தை ஸ்ரீ. சாச்சி அப்படத்திற்காக அமர்த்திக்கொண்டாராம்.

**சாணக்யா** படத்தில் வஸந்தகோகிலத்தின் நடிப்பு புகழக்கூடியதாக இருக்கவில்லை. ஆனால் ஸ்ரீ. சாச்சி எதிர்பார்த்த படியே அவர் சங்கீதத்தில் நல்ல பெயர் வாங்கிக்கொண்டார். "பந்தமற்றே" என்ற பாட்டை அவர் இனிமையாகப் பாடியிருக்கிறார்.

இரண்டாவது படமான **வேணுகானத்**திலும் வஸந்தகோகிலத்தின் நடிப்பில் அபிவிருத்தி ஏற்படவில்லை. ஆனால் அவர் இப்படத்தில் பாடியிருக்கும் பாட்டுகள் மட்டும் ரஸிகர்களின் கவனத்தைக் கவர்ந்தன. "எப்போ வருவாரோ" என்ற பாட்டு மிகப்பிரசித்தி பெற்றது.

அடுத்தபடியாக நடித்த **கங்காவதார்** படத்தில், பாட்டு விஷயத்தில் வஸந்தகோகிலம் மற்றுமோர் படி மேலேறினார். அவருடைய நடிப்பிலும் சிறிது அபிவிருத்தி காணப்பட்டது.

பின்னர் அவர் நடித்த **ஹரிதாஸ்** படத்தில் அவருடைய நடிப்பு அவரது மற்ற படங்களையெல்லாம்விட நன்கு அமைந்தது. பாடுவதற்கு அதிக சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லையென்றாலும் கொடுத்த பாட்டுகளை பாராட்டத்தக்க முறையில் பாடியிருக்கிறார். ஆனால் அதன் பிறகு அவர் தோன்றிய **வால்மீகி, குண்டலகேசி** ஆகிய இரு படங்களிலும் விஷயம் இதற்கு மாறாயிருந்தது. வால்மீகியில் அவர் நாரதர் வேஷத்தை ஏற்றுக் கொண்டிருந்தது சகிக்க முடியாமலிருந்தது. குண்டலகேசியிலோ அவருடைய நடிப்பு, பாட்டு, வேஷம் எல்லாமே மோசமாயிருந்தது. அடுத்த படியாக அவர் **ஆண்டாள், பக்த சபரி** ஆகிய படங்களில் நடிக்கப் போவதாகத் தெரிகிறது.

வஸந்தகோகிலம் சினிமாவில் நடித்து வருகிறார் என்ற போதிலும் ஒரு பெரிய சினிமா நக்ஷத்திரமாக வேண்டுமென்ற எண்ணம் அவருக்கில்லையாம். ஒரு இணையற்ற சங்கீதவிதுஷி ஆகிவிட வேண்டுமென்பதே அவருடைய வாழ்க்கை லக்ஷியமாம். அவருக்கு பாடமட்டுமல்லாது,

மிருதங்கம் உள்பட பல வாத்யங்களை வாசிக்கவும் தெரியுமாம். தற்போது அவருக்கு சினிமா உலகைவிட சங்கீத உலகிலேயே அதிக மதிப்பைப் பெற்றிருக்கிறார். இந்த மதிப்பு எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும் என்று தாராளமாய் எதிர்பார்க்கலாம்.

வஸந்தகோகிலத்தின் இசைத்தட்டுகள் ஏராளமாக விற்பனையாகி வருகின்றன. இவைகளுள் "ஆனந்த நடனம்" என்ற இசைத்தட்டு மற்றவைகளை விடப் பன்மடங்கு அதிக விற்பனையாகி யிருக்கிறதாம். சுவாமி சுத்தானந்த பாரதியாரின் சாஹித்யங்களில் வஸந்தகோகிலத்திற்கு அலாதியான விருப்பம். அதன் காரணமாகவே அவர் சுவாமிகளின் பல உருப்படிகளைப் பாடிப் பிராபல்யப்படுத்தி இருக்கிறார். கவி சுப்ரமண்ய பாரதியாரின் வாழ்க்கையையும், தியாகங்களையும் சித்திரிக்கும் (சுத்தானந்த பாரதியாரால் பிரத்தியேகமாய் தயாரிக்கப்பட்ட) பாட்டு, வஸந்தகோகிலத்தால் இசைத்தட்டில் பாடப்பட்டு சமீபத்தில் வெளிவந்திருக்கிறது.

வஸந்தகோகிலம் தாராள மனது உடையவர் என்று தெரிகிறது. அவர் பல ஸ்தாபனங்களுக்கும் கைங்கரியங்களுக்கும் கச்சேரிகள் செய்து உதவி யிருக்கிறார். இலங்கையில் சில மாதங்களுக்கு முன் தமிழர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பது அவர் செய்த உதவியின்பேரில் தான் என்பது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் மஹாத்மாஜி சென்னைக்கு விஜயம் செய்தபோது வஸந்தகோகிலம் அவரைத் தரிசித்து, கூடிய சீக்கிரத்தில் ரூ. 50,000 நன்கொடை அளிப்பதாக வாக்களித்திருக்கிறாராம்.

வஸந்தகோகிலம் இந்தியா பூராவிலும் சுற்றி கச்சேரிகள் செய்திருக்கிறார். அவர் 1945-ம் வருஷத்தில் இலங்கைக்குச் சென்று, பத்தே நாட்களில் ஐந்து கச்சேரிகளைச் செய்துவிட்டு பிரமாதமான புகழுடன் திரும்பியிருக்கிறார்.

கும்பகோணத்திலுள்ள தமிழ் நாடு கலை முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது ஆண்டுவிழா 28-9-1945-ந் தேதியன்று நடைபெற்றது. அந்த விழாவின்போது இக் கழகத்தின் சார்பாக சங்கீத வித்வான் டைகர் வரதாச்சாரியார்

வஸந்தகோகிலத்தின் சங்கீதத்தை பாராட்டி, "மதுரகீத வாணி" என்ற பட்டத்தை வழங்கினர்.

சுமார் ஐந்தடி உயரமும், மா நிறமும் உள்ள வஸந்த கோகிலம் 1921-ம் வருஷத்தில் பிறந்தவராவார். அவருக்கு பால்யத்திலேயே விவாஹம் ஆகிவிட்டது. ஆனல் குழந்தைகள் கிடையாது. தற்போது கோயமுத்தூரை அவர் தம் வாசஸ்தலமாக்கிக் கொண்டிருக்கிறார்.

வஸந்தகோகிலத்திற்கும் நாகரீக உலகிற்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்து வந்தபோதிலும், அவர் மிகுந்த கடவுள் பக்தியும், வைதீக வழக்கங்களும் உடையவராய் காணப்படுகிறார். படங்களில் வரும் அமிதமான காதல் காட்சிகளைப் பற்றிக் கேட்கும்போதே அவர் "சிவ சிவா!" என்று காதைப் பொத்திக் கொள்ளுகிறார். என்னைக் கேட்டால், இதுவரை அவருடைய எண்ணங்களுக்கும், குணத்திற்கும் ஏற்ற பாத்திரங்கள் அவருக்குக் கொடுக்கப்படாத காரணத்தினல்தான் அவருடைய நடிப்பு விசேஷமாக சோபிக்கவில்லை என்று கூறுவேன். அவருடைய சங்கீதத்தையும் சினிமா உலகம் இதுவரை பூராவாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பது என் குறை. அவர் அடுத்தாற்போல் நடிக்கப்போகும் "பக்த சபரி" மூலம் இவ்விரு குறைகளும் நீங்கிப்போகும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

# டி. வி. குமுதினி

இந்த உலகத்தில் பிறந்தபோது கொஞ்சம் பொறுமையுட னிருந்து, ஒரு மூனறு மணி நேரம் கழித்துப் பிறந்திருப் பாரானுல், இப்பொழுது ஒரு ராணியாக இருக்கவேண்டியவர் டி. வி. குமுதினி. இப்பொழுதுகூட ஒன்றும் குறைந்து போகவில்லை. சினிமாவில் அவருக்கு ராணியாக நடிக்கும் சந்தர்ப்பங்கள் முன்பே கிடைத்திருக்கின்றன. ஸ்ரீ முருகன் படத்திலோ அவர் ஒரு கடவுளாகவே தோன்றுகிறுர்!

நள வருஷம் புரட்டாசி மாதம் 27-ந் தேதி வெள்ளிக் கிழமையன்று கார்த்திகை நக்ஷத்திரத்தில், திருவாங்கூர் சமஸ்தானத்தில் பிறந்தவர் டி. வி. குமுதினி. அதே சமஸ் தானத்தில் அதே தினத்தில்தான் கார்த்திகை திருநாள் மஹா ராணியும் பிறந்தார். மஹாராணி காலையில் ஆறுமணிக்குப் பிறந்தார்; ஆனல் குமுதினியோ அதற்கு மூன்று மணி நேரம் முன்பாகவே இவ்வுலகில் ஜனித்துவிட்டார். ஆனுல் குமு தினியோ அதற்கு மூன்று மணி நேரம் முன்பாகவே இவ் வுலகில் ஜனித்துவிட்டார். சுமார் மூனறு மணி நேரம் முந்திக் கொண்டதற்காக மஹாராணிக்கும் குமுதினிக்கும் வாழ்க்கையில் எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது பாருங்கள்!

குமுதினியின் சொந்தப் பெயர் காந்திமதி என்பதாகும். மாத்ரு பூமி படத்தில் நடிக்க வந்தவுடன் டைரெக்டர் எச். எம். ரெட்டி இப்பெயரை மாற்றி "குமுதினி" என்ற அழகிய பெயரை அவருக்குக் கொடுத்தார். அப்படத்தில் குமுதினி நடித்திருக்கும் பாத்திரத்தின் பெயரும் அதுவே. குமுதினியின் சொந்த ஊர் திருவாங்கூர் சமஸ்தானத்தி லுள்ள ஆத்தங்கல் என்ற கிராமமாகும்.

வடம ஐயர் ஜாதியைச் சேர்ந்த குமுதினியின் தகப்பஞ ரான வீரமணி ஐயர் கோர்ட்டில் ஒரு சிறிய உத்தியோ கத்திலிருந்தார். குமுதினியுடன் பிறக்தவர் ஒரே ஒரு

தமையன் மட்டும்தான். தமையன் ஹரிஹர ஐயர் தற்போது சென்னையில் சங்கீத வாத்தியாராக இருந்து வருகிறார். குமுதினியின் தகப்பனார் சங்கீதத்தில் மிகுந்த பிரியம் உடையவர். அவரே பாட்டுகளை இயற்றுவதும் பாடுவதும் உண்டாம். அவர் குமுதினிக்கு நான்கு வயதானபோது காலமானார். அதன் பிறகு இக்குடும்பம் திருவனந்தபுரத்திற்குச் சென்று வசிக்கலாயிற்று.

குமுதினி சிறு வயதிலே திருவனந்தபுரப் பள்ளிக்கூடமொன்றில் சேர்ந்து மலையாள பாஷையில் ஐந்தாவது வகுப்பு வரையில் படித்தார். அவரது தாய் பாஷையும் மலையாளந்தான். பிறகு வயது வந்தபின் தான் தமிழ் பாஷையையும் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார்.

குமுதினிக்கு எட்டு வயது நிரம்பியதும் ஐயாச்சி பாகவதர் என்பவரிடம் வாய்ப்பாட்டு சொல்லிக்கொள்ள ஆரம்பித்தார். ஒன்றரை வருஷம் அவரிடம் சங்கீதம் கற்றுக்கொண்ட பின்னர், அனந்த பாகவதர் என்பவரிடம் இரண்டு வருஷ காலம் சிக்ஷை சொல்லிக்கொண்டார். பனிரண்டாவது வயதில் குமுதினி கச்சேரி செய்வதற்குப் புறப்பட்டார்.

ஒரு தடவை அவர் மதுரையில் சேர்ந்தாற்போல் நான்கைந்து கச்சேரிகளைச் செய்வதற்காக அந்நகரத்திற்குச் சென்றார். அதன் பின்னர் குமுதினி மதுரையை தம் வாசஸ்தலமாக்கிக் கொண்டு விட்டார்.

அவருடைய பதின்மூன்றாவது வயதில் குமுதினி எம்.வி. வெங்கடேஸ்வர ஐயரின் இரண்டாவது மனைவியாக ஆனார். அவர் அந்தச் சமயத்தில் மதுரைக்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் குடியேறி யிருந்தார். பிறகு ஸ்ரீ ஐயர் மதுரையில் (இப்பொழுது "தினமணி டாக்கிஸ்" என வழங்கப்படும்) மீனாக்ஷி சுந்தரம் டாக்கீஸின் மானேஜரானார். அப்போது அந்தத் தியேட்டரில் நடந்த கலாட்டாக்களை அடக்குவதற்காகவே ஆஜானுபாகுவான ஐயர் மானேஜராக்கப் பட்டாராம்! குமுதினுக்கு இதுவரை புத்திர பாக்யம் ஏற்படவில்லை.

மதுரையில் வசித்தபோது, குமுதினி இரண்டு வருஷ காலம் பெண்களுக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுத்து வந்தார்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கம்பெனியின் ஏஜெண்டான ஸ்ரீ. சாரங்கபாணி நாயுடு என்பவர், அவரை பங்களூருக்கு அழைத்துச் சென்று அவாது குரலை இசைத்தட்டில் பதிவு செய்தார். சரளி முதல் வர்ணம்வரை உள்ள சங்கீத ஆரம்ப பாடங்களை அவரும் நாகசாமி பாகவதரும் சேர்ந்து, குருவும் சிஷ்யையுமாகப் பாடிப் பதிப்பித்திருக்கின்றனர். பிறகு சில தனிப் பாட்டுகளையும் அவர் இசைத்தட்டுகளில் பாடியிருக்கிறார்.

குமுதினியின் சங்கீதத் திறமையை அறியவந்த மதுரை முருகன டாக்கீஸார் அப்போது தயாரித்து வந்த **துளஸிதாஸ், உஷா கல்யாணம்** ஆகிய இரு படங்களிலும் நடிக்கும்படிக் கேட்டுக் கொண்டனர். அப்போது குமுதினிக்கு சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கவில்லை யாதலால் தானுக அவரைத் தேடி வந்த ஒரு நல்ல சினிமா சந்தர்ப்பத்தை அவர் நழுவ விட்டுவிட்டார்.

ஆனால் பிறகு, குமுதினியின் குடும்பத்தில் பல சிக்கல்கள் ஏற்பட்டு விதா ஆரம்பித்தது. ஒரு கிரிமினல் வழக்கின் காரணமாக பல கஷ்டங்கள் ஏற்பட்டன. அதோடு பணக் கஷ்டங்களும் சேர்ந்து கொண்டனவாம். சினிமாவில் சேர்ந்தாவது சம்பாதித்துக் கடன்களைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் அவர் இத்தொழிலில் பிரவேசித்தார்.

1938-ம் வருஷம் நவம்பர் மாஸத்தில் டைரெக்டர் எச். எம். ரெட்டியும், ஏ. எல். ஆர். எம். கம்பெனியின் மானேஜராயிருந்த ராம்தாஸும் தங்கள் **மாத்ரு பூமி** படத்திற்கு கதாநாயகியைத் தேர்ந்தெடுப்பதற்காக மதுரைக்கு வந்திருந்தனர். இந்த வேஷத்தை ஏற்றுக் கொள்பவருக்கு சங்கீதத் திறமையோடு கூட வீரமாக நடிக்கக் கூடிய திறமையும் இருக்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்த்தனர். மதுரையில் பல நடிகைகளைப் பார்த்து நிராகரித்த பின்னர், அவர்கள் குமுதினியைப் பற்றிக் கேள்விப்பட்டனர். பிறகு அவரை நேரில் பார்த்துவிட்டு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

எச். எம். ரெட்டி தேர்ந்தெடுத்த நக்ஷத்திரம் அவருடைய நம்பிக்கையைப் பூர்த்தி செய்தது. தம் முதல் படமான "மாத்ரு பூமி" மூலமே குமுதினி ஒரு பிரபல நக்ஷத்

திரமாகி விட்டார். இப்படத்தில் குமுதினி ஏற்றுக்கொண்டிருக்கும் பாகத்தை சாதாரணமாக எல்லா நடிகைகளும் நடித்துவிட முடியாது. இதை சினிமா ரஸிகர்களும் உணர்ந்தேதான் அவருக்கு அமோஹமான வரவேற்பளித்தனர் போலும்.

மாத்ரு பூமியில் குமுதினி திறமையுடன் கத்திச்சண்டை போட்டிருக்கிறாரல்லவா? படத்தில் நடிக்க வந்தபோது அவர் அது போன்ற கத்தியை கையால் தொட்டது கூட கிடையாது. மலையாளத்திலிருந்து நாராயண நாயர் என்பவரை வரவழைத்து, கத்திச்சண்டை போடுவதற்கு அவரிடம் கற்றுக்கொண்டார்.

ஒரு நாள் அவரும் ஸ்ரீ. நாயரும் கத்திச்சண்டை போட்டுப் பழகிக் கொண்டிருந்தபோது, ஸ்ரீ நாயரின் கையிலிருந்த கத்தி கை நழுவி கீழே விழுந்து விட்டது. "அபஜெயத்தை அளித்த இந்தக் கத்தியை நான் இனிமேல் உபயோகிக்கப் போவதில்லை" என்று ஸ்ரீ. நாயர் தெரிவித்து, குமுதினியைப் பாராட்டி, அக்கத்தியை அவருக்கே ஞாபகார்த்தமாக அளித்து விட்டார். அக்கத்தியை குமுதினியின் வீட்டில் இப்பொழுதும் பார்க்கலாம்.

மாத்ரு பூமி படத்திற்காகவென்றே குமுதினி முதன் முதலாக குதிரை சவாரியும் கற்றுக்கொண்டார். ஆனால் எடுக்கப்பட்ட குதிரை சவாரிக் காட்சிகள் ஏனோ படத்தில் சேர்க்கப்படவில்லை.

வேஷத்திற்குப் பொருத்தமான ஒரு கதாநாயகியைத் தேர்ந்தெடுப்பதில் ஸ்ரீ. ரெட்டிக்கு இருந்த அக்கரை பின்னரும் நீடித்திருந்தது. அவர் எடுத்துக்கொண்ட அதிக சிரத்தையின் விளைவாக குமுதினிக்கு முதல் படத்திலேயே பொருமைப் படத்தக்க அவ்வளவு வெற்றி கிடைத்தது.

மாத்ரு பூமியில் குமுதினி பாடியிருக்கும் பாட்டுகளும் ரஸிகர்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தன. "நமது ஜென்ம பூமி," "அன்னையின் காலில் விலங்குகளோ" ஆகிய இரண்டு பாட்டுகளையும் அவர் இனிமையாகவும், உணர்ச்சி

கிருதியுடனும் பாடியிருக்கிறார். இந்தப் பாட்டுகள் இசைத் தட்டுகளிலும் வெளி வந்திருக்கின்றன.

மாத்ரு பூமி படம் வெளி வந்து பிரபலம் அடைய ஆரம்பித்ததும் குமுதினி பல ஊர்த் தியேட்டர்களில் நேரில் காட்சி அளிக்க வேண்டியதாயிற்று. திண்டுக்கல்லில் இப்படம் ஓடிக்கொண்டிருந்த போது குமுதினி மேடைமீது ஒரு நாள் தோன்றினர். அதைத் தொடர்ந்து அவர் பல தினங்கள் தினசரி நேரில் தோன்றிக் கொண்டிருக்கும்படி செய்து விட்டனர் அந்த ஊர் சினிமா ரஸிகர்கள்.

மாத்ரு பூமியைப் பார்த்த ரஸிகர்கள் குமுதினியின் அடுத்த படம் எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். முருகன் டாக்கீஸார் அவருக்கு தியாகராஜ பாகவதருடன் அசோக் குமாரில் கதாநாயகியாக நடிக்கும் சந்தர்ப்பத்தை அளித்தனர். இப்படத்தில் அவருடைய நடிப்பும், பாட்டும் கச்சிதமாக இருக்கின்றன. ஆனால் மாத்ரு பூமி யவ்வளவு இப்படத்தில் அவருக்கு சந்தர்ப்பம் அளிக்கப் படாததால் ரஸிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

அசோக் குமாரில் நடித்த பின்னர் குமுதினியை பக்ஷிராஜா பில்ம்ஸார் 1941ம் வருஷத்தில் தங்கள் சாயா தமிழ்ப்படத்தில் கதாநாயகியாக ஒப்பந்தம் செய்து கொண்டனர். இப்படத்தில் மீண்டும் அவருக்கு கத்திச்சண்டை குதிரை சவாரி முதலிய சாமர்த்தியங்களுக்கெல்லாம் நிறைய இடம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்படத்தில் மாத்ரு பூமியை விட அதிகமான புகழைச் சம்பாதித்துக் கொண்டு விடுவதென்று தீர்மானித்தார் குமுதினி. அதற்கான எல்லா முயற்சிகளையும் செய்தார். சென்னை பாடி கார்ட்ஸ் மைதானத்தில் தேர்ந்த காசாரி ஒருவரிடம் அவர் முப்பத்தொன் பது நாட்களுக்கு தினசரி காலையில், குதிரை சவாரி செய்வதில் பயிற்சி பெற்று வந்தார். கடைசி நாளன்று, மைதானத்திற்கு வெளியில் சவாரி செய்து பார்ப்பதற்காக குமுதினியை காசாரி வெளியே குதிரையுடன் அழைத்து வந்தார். குமுதினி ஏறிக்கொண்டிருந்த குதிரை திடீரென்று எதையோ பார்த்து மிரண்டு, கட்டுக்கடங்காமல் முரட்டுத்தனமாய் பாய்ந்தோட ஆரம்பித்ததாம். "சரி; இன்று நாம் செத்தோம்"

என்று குமுதினி தீர்மானித்துக்கொண்டு விட்டாராம். ஆனால் நல்ல வேளையாக அக் குதிரையை அந்தக் காசாரி வழி மறித்து நிறுத்தி அவரைக் காப்பாற்றினாராம்.

குமுதினி எடுத்துக்கொண்ட இவ்வளவு சிரமமும் சாயா படத்திற்குப் பயன் படாமற் போய்விட்டது வருந்தத்தக்கது. ஸென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டு வந்த இப் படம் கொஞ்சநாள் ஷூட்டிங் நடந்த பின்னர் டைரெக்டருக்கும் முதலாளிக்கும் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் காரணமாக நிறுத்தப்பட்டுவிட்டது.

இதன் பிறகு 1944-ம் வருஷத்தில் அவர் பக்த காளத்தி படத்திற்காக அமர்த்திக் கொள்ளப்பட்டார். இந்தப் படம் சமீபத்தில்தான் வெளிவந்திருக்கிறது. இப் படம் பல அம்சங்களில் மோசமாய் இருந்ததோடு குமுதினிக்கும நல்ல பெயர் கிடைக்கவில்லை. கொஞ்ச நஞ்சமாவது புகழ் அடைந்துவிடப் போகிறாரே என்று ஒளி, ஒலிப்பதிவுகள் சரியாக குறுக்கே நிற்கின்றன. இதன் பின்னர் அவர் ஸ்ரீ முருகன், சுலோசனா ஆகிய இரு படங்களில் சிறிய பாத்திரங் களில் தோன்றியிருக்கிறார். இவைகளைப் பற்றியும் பிரமாத மாகச் சொல்லுவதற்கில்லை.

அசோக் குமாரில் நடித்துக் கொண்டிருந்தபோது குமு தினிக்குத் தம் சங்கீதத்தை மேலும் விருத்தி செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் ஏற்படவே, அவர் ஆலத்தூர் சகோதரர்களில் மூத்தவரான ஸ்ரீ சுப்புவிடம் சில காலம் சங்கீத சிக்ஷை பெற்றார்.

குமுதினி அகில இந்திய ரேடியோவில் பல தடவைகள் பாடியிருக்கிறார். சமீப வருஷங்களாக அவர் சங்கீதக் கச் சேரிகள் செய்வதில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். அடிக்கடி அவர் கச்சேரிகள் செய்து பல மெடல்களையும், பாராட்டுதல்களையும் பெற்றிருக்கிறார். இப்பொழுது கூட அவருடைய கச்சேரிகளில் ரஸிகர்கள் "மாத்ரு பூமி" பாட்டுகளைக் கேட்டு வருகின்றனராம்.

சாதாரணமாக, படங்களில் நீந்த வேண்டிய காட்சி வரும்போது, முழங்கால் அளவுள்ள ஜலத்தில் நீந்தவைத்துப்

படம் பிடிக்கிறார்களல்லவா! ஆனால் இந்தமாதிரிக் காட்சிகளை, நிஜமான சமுத்திரத்திலேயே குமுதினியை நீந்தச் சொல்லி படம் பிடிக்கலாம். சமுத்திரக் கரையில் உள்ள ஊரைச் சேர்ந்தவராதலால் குமுதினிக்கு நன்றாக நீந்தத் தெரியுமாம்.

சிவந்த நிறமும், நடுத்தர உயரமும் உடைய குமுதினி நெஞ்சழுத்தம் உடையவர் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அவர் வீரம் நிறைந்த பாத்திரங்களை நடிப்பதில்தான் தமக்கு அதிக இஷ்டம் என்று கூறுகிறார். சென்னையில் வீட்டை வாங்கிக் கொண்டிருக்கும் நக்ஷத்திரங்களில் குமுதினியும் ஒருவராவார்.

குமுதினி தற்போது பிரகதி பிக்சர்ஸார் தயாரித்து வரும் மாளவிகா தமிழ்ப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். அவர் கற்றுக் கொண்டிருக்கும் வித்தைகள், கற்றுக்கொள்ள விரும்பும் வித்தைகள் ஆகிய எல்லாவற்றிற்கும் இந்தப் படத்திலாவது தகுந்த சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறதா என்று பார்ப்போம்.

# எஸ். பி. எல். தனலக்ஷ்மி

சினிமா உலகில் நடித்திருக்கும்—நடித்துக் கொண்டிருக்கும்—நடிகைகளுள், பிறருக்குத் தகுந்த மரியாதை கொடுத்து, திரும்ப அதைவிட அதிக மரியாதையை சம்பாதித்துக் கொள்ளுவதில் ஒருவருக்கு "நோபல் பரிசு" கொடுப்பதாயிருந்தால் அதைக் கட்டாயம் எஸ். பி. எல். தனலக்ஷ்மிக்கே கொடுத்தாக வேண்டும்.

சாதாரணமாக ஒரு தமிழ் நடிகைக்கு இரண்டு படங்களில் சேர்ந்தாற்போல் கதாநாயகி வேஷம் கிடைத்து விட்டாலே அவர்களுடைய கழுத்துக்கு ஒரு தினுசான வலிப்பு வந்துவிடும். அதுவும் இப்படங்களுக்கு நல்ல வசூலும் ஏற்பட்டுவிட்டாலோ அவர்களுடைய பேச்சு, நடத்தை இவை எல்லாவற்றிலுமே ஒரு "திடீர்" மாறுதலைக் காணலாம். மற்றும் இரண்டு படங்களில் நடித்து, சொந்தத்தில் ஒரு பங்களாவையோ மோட்டாரையோ வாங்கிக்கொண்டு விட்டாரென்றால் சொல்லவே சாத்தியமிராது. தினசரி பார்த்து, பழகி, உதவி செய்த நண்பர்களைக்கூட, "உங்களை எங்கோ பார்த்தமாதிரியிருக்கிறது. ஆனால், ஞாபகத்திற்கு வரவில்லையே" என்று சொல்லி அனுப்பி விடுவார்கள்!

இதுபோன்ற கர்விகள் நிரம்பிய நக்ஷத்திர மண்டலத்தில் தனலக்ஷ்மி ஒரு தனிப்பிறவி. அவரை எனக்கு சுமார் 10 வருஷகாலமாய்த் தெரியும். "இன்றொரு மாதிரி; நாளை ஒரு மாதிரி" என்று அவர் நடந்துகொண்டதில்லை. ஒரு பத்திரிகைக் காட்சி, ஷூட்டிங் ஆரம்பவிழா, நாடகக் கொட்டகை, அல்லது வேறு எந்த இடத்திலானாலும் சரி: தனலக்ஷ்மி தமக்குத் தெரிந்தவர்கள் யாரையேனும் பார்க்க வேண்டியதுதான் தாமதம்: அவருடைய கைகள், ஒரு மலர்ந்த புன்னகை பின்தொடர, தாமாக நமஸ்காரம் செய்யும். இதை நாம் வெறும் "கூழைக்குப்பிடு" என்று கருதுவது தவறு. அவர் எவ்வளவு மரியாதையோடும் அன்போடும் கும்பிடுவதாக நமக்குத் தோன்றுகிறதோ அவ்வளவுக்கு

அந்தக் குணங்கள் அவரிடம் படிந்திருப்பதை நாம் பழகும் போது தெரிந்துகொள்ளலாம்.

தனலக்ஷ்மி தஞ்சாவூரைச் சேர்ந்த செல்வாக்கு மிகுந்த ஒரு சங்கீதக் குடும்பத்தில் பிறந்தவர். சங்கீதம் குஜலாம்பாள் என்றால் அந்தக் காலத்தில் தெரியாதவர்களே இருக்கமாட்டார்கள். சங்கீதத்தில் அவர் மிகுந்த புகழ் பெற்றிருந்தார். அவருடைய ஐந்தாவது (கடைசிப்) புத்திரிதான் தனலக்ஷ்மி.

தனலக்ஷ்மியின் முதல் தமக்கை மகள்தான் சினிமா நடிகை டி. எஸ். தமயந்தி. இரண்டாவது தமக்கை மகள்தான் பிரபல டி. ஆர். ராஜகுமாரி.

தனலக்ஷ்மியுடன் பிறந்த சகோதரர்களும் ஐவராவர். இவர்களில் இருவர்தான் இப்பொழுது உயிருடனிருக்கின்றனர். சில மாதங்களுக்கு முன்புதான் இவருடைய மூத்த சகோதரரான பாலு காலமானார். அவர் தனலக்ஷ்மியின் குடும்பத்திற்கு ஒரு தூண்போல் இருந்துவந்தார். எனவே அவரது மரணம் தனலக்ஷ்மிக்கு மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணியிருப்பதில் ஆச்சரியமென்ன?

தாயார் சங்கீத விதுஷியாக இருந்தமையால் அவரது பெண்களுக்கு அதி பால்யத்திலேயே சங்கீத சிக்ஷை ஏற்படுத்தப்பட்டது. உமையாள்புரம் கல்யாணராமய்யரிடம் தனலக்ஷ்மி வாய்ப்பாட்டு கற்றுக்கொண்டார். 13 வயது நிரம்புவதற்குள்ளேயே பாட்டுக் கச்சேரி செய்யப் புறப்பட்டார். பிறகு சங்கீதத்தைக் கொஞ்ச நாளைக்கு நிறுத்திக்கொண்டு கதா காலக்ஷேபம் செய்வதி லிறங்கினர். அவருக்குக் கொஞ்சம் வீணையும் வாசிக்கத் தெரியும் என்பதை அறிய ஆச்சரியப்பட்டேன்.

சகோதரிகள் அனைவருக்குமே சங்கீதம், நாட்டியம், கதா காலக்ஷேபம் போன்ற கலைகளில் தேர்ச்சி இருந்த தென்றாலும், தனலக்ஷ்மிதான் அந்தக் குடும்பத்திலிருந்து முதன் முதலில் சினிமாவுக்கு வந்தவர். அவரைப் பின்பற்றியே தமயந்தியும், ராஜகுமாரியும் சினிமாவுக்கு வந்தனர்.

1935-ம் வருஷத்தில் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்ட நேஷனல் மூவிடோன் ஸ்டுடியோ தன் முதல் படமான "பார்

வதி கல்யாண"த்திற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தது. ஸ்டுடியோ சொந்தக்காரரான ஸ்ரீ. மாணிக்கம் செட்டியார் என்பவர் நடிகர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தஞ்சாவூருக்கு விஜயம் செய்திருந்தார். அப்பொழுது கச்சேரிகள் செய்து வந்த தனலக்ஷ்மியைப்பற்றி கேள்விப்பட்டு அவரை தம் படத்தில் பார்வதியாக நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டார் ஸ்ரீ. செட்டியார். மேற்படி படத்தில் தனலக்ஷ்மியின் நடிப்பு கூடிய வரையில் திருப்திகரமாய் அமைந்தது. அதன் பயனாக தொடர்ந்தாற்போல் "வஸந்தசேனா"வில் நடிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

சினிமாவுக்குப் புதியவரா யிருந்த தனலக்ஷ்மிக்கு ராஜா சாண்டோவுடன் மேற்படிப் படத்தில் நடித்தது மேலும் ஒரு புதிய அனுபவமாகவே இருந்திருக்கும். ராஜா சாண்டோ ஒரு உன்னத நடிகர் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அவரிடம் பொம்மையைக் கொடுத்தால்கூட அதை அற்புதமாய் நடிக்கச் செய்யும் திறமை அவருக்குண்டல்லவா? தனலக்ஷ்மியை அவர் இந்தப் படத்திற்காக கசக்கிப் பிழிந்து வேலை வாங்கி யிருக்கிறார் என்பது படத்தைப் பார்த்தாலே தெரியும். ஒரு குறிப்பிட்ட நடிப்போ முகபாவமோ சரியாக அமையா விட்டால் "போனால் போகிறது" என்று விட மாட்டாராம். அது சரிவர அமையும் வரை மேலே செல்லவே மாட்டார்!

"வஸந்தசேனா" படத்தில் தனலக்ஷ்மி ராஜா சாண்டோவை கையில் கடிப்பதாகக் காட்டப்படுகிற தல்லவா? இக்காட்சியைத் தயாரிக்கும் போது முதலில் தனலக்ஷ்மி ராஜாவைக் கடிப்பதுபோல பாவனை செய்து நடித்தாராம். ராஜாவுக்கு ரொம்ப கோபம் வந்து விட்டதாம். "ரத்தம் வரும்படி நிஜமாகவே கடிக்க வேண்டும்! இல்லை யென்றால் நான் வேணுமானால் கடித்துக் காட்டட்டுமா?" என்று பய்முறுத்தினாராம் அவர். பிறகு தனலக்ஷ்மி நிஜமாகவே 'வெடுக்'கென்று கடித்தாராம். ராஜா வலியைப் பொருட்படுத்தாமல் உத்ஸாகமாக நடித்தாராம்!

"வஸந்தசேனா" விற்குப் பிறகு தனலக்ஷ்மி "சௌபாக்யவதி" தமிழ்ப்படத்தில் கதா நாயகியாக நடித்தார். பிறகு

நாதஸ்வர வித்வான் திருவாவடுதுறை ராஜரத்னம் பிள்ளை நடித்த "காளமேக"த்தில் மோஹனங்கியாகவும், "தேச பக்தி" தமிழ்ப் படத்தில் கலாவதியாகவும் நடித்தார். இந்த இரண்டு படங்களும் பணவசூலிலும் சரி; இதர அம்சங்களி லும் சரி; சாதாரணமாகவே இருந்தன. அதனால் தனலக்ஷ் மிக்கும் அதிகப் புகழ் கிடைக்க வசதி ஏற்படவில்லை. இருந்த போதிலும் ஏதோ தம் வரையில் சாத்தியமான அளவு நடித்து தம் பெயர் மறைந்துபோகாமல் காப்பாற்றிக் கொண்டார்.

மனச் சோர்வுற்றிருந்த அவருக்கு "பிரபாவதி"யில் ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. இப்படத்தில் கதாநாயகியின் வேஷத்தை அவர் அநுபவித்து நடித்திருக்கிறார். ஆனால் அந்த வேஷம் அவருடைய வயதுக்குப் பொருத்தமான தல்ல வாதலால் நடிப்பு பூரண சோபையை அடையவில்லை என்ப தைக் குறிப்பிட வேண்டும். இப்படத்தில் அவருடைய பாட்டு இனிமையாக அமைந்திருக்கிறது. ஹிந்தி மெட்டில் அவரால் பாடப்பட்டிருக்கும் "ஜெகதாம்பிகையே" என்ற பாட்டை சாதாரணமாய் எல்லோர் வாயிலும் நாம் கேட்கி றோம்.

தனலக்ஷ்மி தற்போது கிருஷ்ணா பிக்சர்ஸின் "கிருஷ்ண பக்தி"யில் நடித்துக்கொண் டிருக்கிறார்.

சென்ற பத்து வருஷ காலமாய் சினிமாவிலுள்ள ஆர்வம் காரணமாக நிறுத்தியிருந்த சங்கீதக் கச்சேரிகளை தனலக்ஷ்மி இப்பொழுது மறுபடியும் தொடங்கி இருக்கிறார். சங்கீத வித்வான் குன்னக்குடி வெங்கட்டராமய்யரிடம் மீண்டும் சிக்ஷைபெற்று, முதல் கச்சேரியை சென்ற வருஷம் விஜயதசமி யன்று சென்னையை அடுத்த வடபழநி யாண்டவர் சந்நிதானத் தில் (தமயந்தியுடன் கூட) அரங்கேற்றினர். இந்த வைப வத்தை அவர் மிக சிறப்பாகக் கொண்டாடினர். இப்பொழுது தனலக்ஷ்மியும், தமயந்தியும் சேர்ந்து சங்கீதக் கச்சேரிகள் செய்து வருகின்றனர். காலக் கிரமத்தில் இவ்விருவரும் சங்கீத மேடையில் நல்ல புகழ் சம்பாதித்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தியாகராயநகரின் எல்லையில் தேனும்பேட்டையில் ஒரு சிறிய கோயில் இருக்கிறது. இக் கோயிலுள்ள தேவதை மிக சக்திவாய்ந்த தென்று தனலக்ஷ்மி நம்புகிறார். அதன் காரணமாகவே அவர், "அலையிலமர்ந்தாள்" என்ற மேற்படி அம்மனின் பெயரை தியாகராயநகரில் தாம் கட்டிக் கொண்டிருக்கும் பங்களாவுக்குச் சூட்டி யிருக்கிறார்.

தனலக்ஷ்மிக்கு இப்பொழுது வயது 32 ஆகிறது. 7வது வகுப்பு வரையில் பள்ளியில் படித்திருக்கிறார். ஆங்கிலம், தெலுங்கு ஆகிய பாஷைகளைப் பேசினால் புரிந்து கொண்டு விடுவாராம். மா நிறமும், சுமாரான முக வெட்டும் உடைய தனலக்ஷ்மிக்கு அவருடைய வயதுக்கும், தோற்றத்திற்கும் பொருத்தமான வேஷங்கள் கிடைத்தால் அவர் அதிகப் புகழை அடையக் கூடும்.

# டி. எஸ். தமயந்தி

'பிரஜோத்பத்தி' வருஷத்தில் பிறந்தவர்கள் மலடாய் இருக்க மாட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. 'சாதாரண' வருஷத்தில் பிறந்தவர்களெல்லாம் சாதாரணமாய்த் தான் இருப்பார்கள் என்று நினைப்பதும் தவறு. 'மன்மத' வருஷத்தில் பிறந்த கோர முகங்களை நானே பார்த்திருக்கிறேன். இதே போலத்தான் 'ராக்ஷஸ' வருஷத்தில் பிறந்த டி. எஸ். தமயந்தி மருண்ட பார்வையும், பயந்த சுபாவமும் உடையவராக இருக்கிறார்!

எஸ். பி. எல். தனலக்ஷ்மியின் அக்காவான சரஸ்வதி அம்மாளின் புத்திரிதான் தமயந்தி. சரஸ்வதி அம்மாள் வாய்ப் பாட்டு, வீணை, பரத நாட்டியம், கதா காலக்ஷேபம் ஆகிய அனைத்திலும் தேர்ந்தவரா யிருந்தார். ஆதலால் தமயந்திக்கு சிறு பெண்ணாக இருக்கையிலேயே சங்கீதத்துடன் தொடர்பு ஏற்பட்டது. பள்ளிக்கூடத்தில் படித்த படியே தம் ஒன்பதாவது வயதில் தஞ்சை ராமஸ்வாமி ஐயரிடம் வீணை வாசிக்கக் கற்றுக்கொண்டார். பிறகு உமையாள்புரம் கல்யாணராமய்யரிடம் வாய்ப் பாட்டில் சிக்ஷை பெற்றார். அதோடு தமயந்தி பரத நாட்டியம் ஆடவும் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். ஆனால் அக்கலையில் அவர் தொடர்ந்து அக்கரை செலுத்தாமல் விட்டுவிட்டார். இவ்விதமாக அவர் சங்கீத, நாட்டியப் பயிற்சிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டி யிருந்ததால் பள்ளிப் படிப்பை ஐந்தாவதோடு நிறுத்திக்கொண்டு விட்டார்.

தமயந்தி சிவந்த மேனியும், மெலிந்த தேகமும், இயற்கை அழகும் வாய்ந்தவர். அவரது முகத்தோற்றம் சினிமாப் படங்களுக்கும் ஏற்றதாயிருக்கிறது. ஆதலால் 1935-ம் வருஷத்தில், தனலக்ஷ்மியை "பார்வதி கல்யாண"த்திற்குத் தேர்ந்தெடுத்த மாணிக்கம் செட்டியார், தமயந்தியை அதே படத்தில் ரதியாக நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டார். அவருக்கு அப்பொழுது வயது பத்தொன்பது.

"பார்வதி கல்யாண"த்தில் அவருடைய நடிப்பு 'பரவா யில்லை' என்று சொல்லக்கூடிய மாதிரியில் இருந்தது. ஆதலால் மயூரா பில்ம்ஸார் தங்கள் சமூகப் படமான "அதிர்ஷ்ட"த்திற்கு அவரை ஒப்பந்தம் செய்துகொண்டனர். இப்படத்தில் அவர் நடிப்பு நன்றாய் அமைந்திருந்தது. கே. ஆர். செல்லமும் அவரும் மயிரைப் பிய்த்துக் கொண்டு சண்டை போடும் காட்சி தத்ரூபமாக இருந்தது!

பின்னர் தமயந்தி "மணிமேகலை" தமிழ்ப் படத்தில் மணிமேகலா தேவியாகவும், "தேச பக்தி" தமிழ்ப் படத்தில் ராணியாகவும் நடித்தார். இவ்விரண்டு படங்களிலும் அவரது பாகம் அதிகமாய் சோபிக்கவில்லை. பிறகு வந்தது "காலேஜ் குமாரி." இப் படத்தின் மூலம் அவர் பட ரஸிகர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்தார். பின்னர் நடித்த படம் "கங்கா வதாரம்." இப் படத்தில் அவர் பார்வதி வேஷத்தில் தோன்றி யிருக்கிறார். கடைசியாக அவர் நடித்துள்ள படம் "**விகடயோகி**" ஆகும். இப்படத்தில் அவருக்கு ஒரு நாகரீக வேஷம் அளிக் கப்பட்டிருக்கிறது. இவ்வேஷத்தின் மூலம் மீண்டும் அவருக்கு நல்ல பெயர் கிடைத்திருக்கிறது. தமயந்தி தற்போது கிருஷ்ணா பிக்சர்ஸாரின் "**கிருஷ்ண பக்தி**" யில் நடித்துக்கொண் டிருக்கிறார்.

தமயந்தி நடித்த படங்களையெல்லாம் ஆராய்ந்து பார்க் கும்போது, அவரது நடிப்பும் அழகும் புராணப் படங்களை விட சமூகப் படங்களிலேயே நன்கு சோபித்திருப்பதை அறிய லாம். நம் பட முதலாளிகள் நிறைய சமூகப் படங்களைத் தயாரித்து, தமயந்திக்கும் அவைகளில் நிறைய சந்தர்ப்பங்கள் கொடுத்தால் அவர் இன்னும் அதிகமான புகழைச் சம்பாதித் துக் கொள்ளமுடியும்.

தம் சின்னம்மா (தனலக்ஷ்மி)வுடன் சேர்ந்து சினிமா வுக்கு வந்தது போலவே அவருடன் சேர்ந்தே வசித்து வருகிறார். சமீபத்தில் இவர்கள் இருவரும் சேர்ந்தே குன்னக் குடி வெங்கட்டராமய்யரிடம் சிக்ஷை பெற்று, சேர்ந்தே இப் பொழுது கச்சேரி செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள்.

தமயந்தி தம் தாயாருக்கு ஒரே பெண். அதேபோல அவருக்கு 8 வயதுடைய ஒரே ஒரு பெண்தான் இருக்கிறாள்.

"மஹாமாயா" படத்தில் மாயாவின் புத்திரியாக சூடிகையாய் நடிக்கிறதே ஒரு சிறு பெண், அது தமயந்தியின் பெண் தான். பேபி குசலகுமாரிக்கு "கிருஷ்ண பக்தி"யில் நடிக்க இப்பொழுது சந்தர்ப்பமளிக்கப் பட்டிருக்கிறது.

தமயந்திக்கு தற்போது வயது 30 ஆகிறது. ஆனால் அவ்வளவு மதிப்பிட அவருடைய தோற்றம் இடமளிக்காது. நயமான சாரீரத்தை உடைய தமயந்தி மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டாரானல் சங்கீத மேடையில் நல்ல புகழ் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கிறேன்.

# எம். ஆர். சந்தானலக்ஷ்மி

தமிழ் சினிமா உலகில் சேர்ந்தாற்போல் ஒரு பத்து வருஷத்திற்கு பிரபலமாக இருக்கும் நடிகைகள் சொற்பப் பேர்களே. சில நடிகைகள் மளமள வென்று ஒன்றிரண்டு வருஷங்களில் புகழேணியின் உச்சியை அடைவார்கள். பிறகு அவர்கள் எத்தனை வேகத்தில் புகழ் அடைந்தார்களோ அதை விட அதிக வேகத்தில் அவர்களுடைய பெயர் மறைந்து போகும். ஆனால், எம். ஆர். சந்தானலக்ஷ்மியின் விஷயம் அப்படிப்பட்டதல்ல. அவர் 1934-ம் வருஷத்தில் சினிமா உலகில் பிரவேசித்தார். அதுமுதல் இடைவிடாது இன்று வரை சுமார் 20 படங்களில் நடித்திருக்கிறார். "அம்பிகாபதி" ஒன்றைத் தவிர மற்ற படங்களிலெல்லாம் அவர் சாதாரணமாகவேதான் நடித்திருக்கிறார் என்று சொல்லவேண்டும். இருந்தபோதிலும் அவர் இன்னும் பத்து வருஷங்கள் நடித்துக் கொண்டிருந்தாலும் அவரது நடிப்பிலோ பாட்டிலோ தமிழ்ப்பட ரஸிகர்கள் சலிப்புக் கொள்ளமாட்டார்கள் போலிருக்கிறது.

சந்தானலக்ஷ்மியுடன் சினிமாவுலகிற்கு வந்த பல நடிகைகளின் பெயர்கள் மறைந்து, மறக்கப்பட்டும் விட்டபோது, இவருக்கு மட்டும் ஸ்திரமான ஸ்தானம் இருந்து வருவதன் ரகஸியமென்ன என்ற கேள்வி உடனே பிறக்கத்தான் செய்யும். இந்தக் கேள்வியின் பதிலில்தான் ஒரு பெரிய தொழில் ரகஸியமும் அடங்கிக் கிடக்கிறது.

உப பாத்திரங்களாயிருந்து கதாநாயகிகளாக உயர்ந்தவர்களும் சரி; நேராக கதாநாயகி ஸ்தானத்தைப் பெற்றவர்களும் சரி; ஒரு படத்தில் கொஞ்சம் புகழ் கிடைத்தவுடன் "கதா நாயகிக்குக் குறைந்த எந்தப் பாத்திரத்தையும் இனி ஏற்றுக் கொள்ளுவதில்லை" என்று சபதம் செய்துகொண்டு விடுகிறார்கள். தம் உடற் கூறும், தோற்றமும், வயதும் தாம் ஏற்றுக்கொள்ள விரும்பும் பாத்திரத்திற்கு பொருந்துமா என்ற சிந்தனையே இவர்களுக்குக் கிடையாது. அதன் விளைவாகவே கிழவி — கிழவன் காதல் லீலைகளை யெல்லாம்

பார்க்கும் தலைவிதி நமக்கேற்பட்டிருக்கிறது. இந்த தகாத பிடிவாதத்தின் காரணமாகத்தான் பல நடிகைகள் சில படங்களில் நடிப்பதற்குள்ளாகவே புகழை இழந்து வெளியேற வேண்டியதாகி யிருக்கிறது.

சந்தானலக்ஷ்மியோ இந்த முக்கிய தவறைச் செய்யாததினால்தான் இன்றைய தினம் பட உலகில் பிரகாசித்து வருகிறார். இன்னமும் பிரகாசிக்க அருகதை உடையவராயும் இருக்கிறார். தம் ஆரம்பப் படங்களில் அவர் கதாநாயகியாகத்தான் தோன்றி வந்தார். அதே வேஷத்தில் "அம்பிகாபதி"யில் மிகுந்த புகழையும் பெற்றார். இருந்தபோதிலும் "கதாநாயகி வேஷத்தில் மட்டும்தான் தோன்றுவது" என்று அவர் சங்கல்பம் செய்துகொள்ள வில்லை. பிறகு வந்த படங்களில் அவர் தம் வயதுக்கும் தோற்றத்திறகும் ஏற்ற பாத்திரங்களை ஏற்று நடிக்கலானார். அதனால் அவர் ரஸிகர்களின் வெறுப்பிற்குப் பதில் நிரந்தர அபிமானத்தைப் பெற்றிருக்கிறார். மேல்நாட்டு நடிகர்கள் பலரைப்போல், உப பாத்திரங்களை நடித்த வண்ணமே புகழுடன் விளங்கமுடியும் என்று அவர் நிரூபித்துவிட்டார்.

ரஸிகர்களின் நிரந்தர ஆதரவைப் பெற்றிருப்பதைப் போலவே பட முதலாளிகளின் இடைவிடாத ஆதரவையும் சந்தானலக்ஷ்மி பெற்றிருக்கிறார். ஒரு படத்தில் தாயார் வேஷத்திற்கு ஒரு நடிகை தேவை என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே சந்தானலக்ஷ்மியின் பெயர்தான் முன்னால் நிற்கும். அதன் பிறகுதான் மற்ற பெயர்கள் யோசிக்கப் படும். இதன் காரணமாக அவர் பல படங்களில் தாயார் வேஷத்தில் தோன்றி யிருக்கிறார். தாயார் வேஷம் சந்தானலக்ஷ்மியைப்போல் வேறு யாருக்கும் பொருந்தவில்லை என்று கூடச் சொல்லிவிடலாம்.

படங்களில் தாயார் வேஷத்தில் அவர் நல்ல வெற்றி பெறுவதற்குக் காரணம் அவர் வாழ்க்கையிலும் ஒரு தாயாராய் இருப்பதுதான் என்று சொன்னாலும் பொருந்தும். சந்தானலக்ஷ்மிக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருக்கின்றனர். பதினான்கு வயதுடைய அவரது மூத்த பையன் ஐந்தாவது பாரத்தில் படித்து வருகிறான். ஒன்பது

வயதுடைய ஆண்டாளு என்ற அவருடைய புத்திரி அம்மாவைப்போலவே ஒரு பிரபல நடிகையாகிவிடக் கூடும். தற்போது அவள் சங்கீதத்திலும் நாட்டியத்திலும் சிக்ஷை பெற்றுவருகிறாள். மற்ற தாயார்களைப்போல் சினிமா நடிகைகளுக்கு தங்கள் குழந்தைகளிடம் அந்தரங்கமான அன்பு கிடையாது என்ற பொதுவான அபிப்பிராயம் இருந்து வருகிறது. ஆனால் மற்ற தாயார்களுக்கு தம் குழந்தைகளிடம், சந்தானலக்ஷ்மி யவ்வளவு அன்பு இருக்காது என்று தான் நான் சொல்லுவேன்.

பரிதாபி வருஷம் (1912) மாசி மாதம் 28-ந் தேதி யன்று பிறந்த சந்தானலக்ஷ்மிக்கு அவருடைய எட்டாவது வயதிலேயே திருமணம் நடந்துவிட்டது. சைவ பிராமண ஜாதியைச் சேர்ந்தவரான அவர் வைஷ்ணவ பிராமணரான எம். ஆர். துரைசாமி ஐயங்காரின் மனைவியானார். அவருடன் கூடப்பிறந்தவர் ஒரே ஒரு தமையன்தான். ஆனால், அவரும் பால்யத்திலேயே வீட்டைவிட்டு எங்கோ போய்விட்டாராம். இன்றுவரை அவரைப் பற்றிய தகவல் எதுவுமே கிடைக்கவில்லையாம்.

சந்தானலக்ஷ்மியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைவருக்குமே சங்கீதம் பரம்பரை ஞானமாகக் கிடைத்திருந்ததாம். அவருடைய தகப்பனாரான கல்கத்தா சுப்பய்யர் என்பவர் பிரபல சங்கீத வித்வான் பாலக்காடு அனந்தராம பாகவதருக்கு பின்பாட்டு பாடிக் கொண்டிருந்தாராம். எனவே, சந்தான லக்ஷ்மிக்கும் பால்யத்திலிருந்தே சங்கீதத்தில் பழக்கம் எற்பட்டதில் ஆச்சரிய மொன்றுமில்லை.

சொந்த ஊர் கும்பகோணம். இருந்தபோதிலும், சந்தானலக்ஷ்மிக்கு மூன்று வயது ஆனபோதே அவருடைய பெற்றோர்கள் குடும்பத்துடன் சென்னைக்கு வந்து குடியேறினர். சென்னையில் அவர் மூன்றாவது வகுப்பு வரையில் பள்ளியில் படித்தார். ஒரு வருஷ காலம் சாஸ்திரோக்தமான சங்கீதத்திலும் சிக்ஷை பெற்றார்.

அவரது கணவருக்கோ நாடகத்தில் அசாத்தியமான பைத்தியம். அதனால் எப்படியும் பனிரெண்டு வயதான தம்

மனைவியை நாடகத்தில் சேர்த்துவிட்டால், நல்ல புகழோடு பணமும் கிடைக்கும் என்று எண்ணலானார். இத்தகைய எண்ணங்கள் அவர் மனதில் உதயமான சமயத்தில் பக்கத்து வீட்டில் பபூன் சங்கரய்யர் குடியிருந்தார். சங்கரய்யருக்கு அப்பொழுது நாடக உலகில் இருந்த பெயரும் செல்வாக்கும் துரைசாமி ஐயங்காரின் எண்ணங்களுக்கு உரம் இட்டு உறுதிப் படுத்தின. கடைசியில், சங்கரய்யர் மூலமே தம் மனைவியை நாடகத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும்படிச் செய்தார்.

நாடக உலகில் பிரவேசித்த சந்தானலக்ஷ்மி முதன் முதலில் அல்லி நாடகத்தில் பாலபார்ட்டாக நடித்தார். பின்னர் அவருக்கும் நாடகமேடை பிடித்துப்போய் விட்டது; ஆதலால் ஸ்பெஷல் நாடகங்களில் அவர் அடிக்கடி நடித்து வரலானார். இலங்கை, ரங்கூன் முதலிய வெளி இடங்களுக்கும் சென்று நாடகங்களில் நடித்துப் புகழுடன் திரும்பி யிருக்கிறார்.

இப்படியாக சுமார் ஒன்பது வருஷகாலம் நாடகமேடையில் நடித்த பின்னர் சந்தானலக்ஷ்மி கிராமபோன் இசைத் தட்டுகளில் தம் குரலைப் பதிவு செய்ய முன்வந்தார். கொலம்பியா கம்பெனியார் தயாரித்து வெளியிட்ட "சத்தியவான் சாவித்திரி" நாடக 'செட்'டில் சாவித்திரியாகப் பேசிப் பாடியிருப்பவர் சந்தானலக்ஷ்மி தான். இது தவிர அவர் சில தர்க்கப் பாட்டுகளையும் இசைத் தட்டுகளில் பாடியிருக்கிறார்.

1934-ம் வருஷத்தில் சென்னையில் ஸ்ரீ மீனாக்ஷி வினிடோன் கம்பெனியார் "ராதா கல்யாணம்" என்ற தமிழ்ப் படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தனர். நாடக மேடையில் ஹார்மோனியம் வாசிப்பதில் நிகரற்றவர் என்று பெயர் பெற்றிருக்கும் ஸ்ரீ. கே. எஸ். தேவுடு அய்யர் மூலம் மேற்படி படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார். இப் படத்தில் கதாநாயகி ராதையின் வேஷம் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

**ராதா கல்யாணம்** படம் வெளிவந்தது ; ஆனால் ஜனங்களின் ஆதரவு அதற்கு அதிகம் கிடைக்கவில்லை. சந்தானலக்ஷ்மியின்

நடிப்பும் அப்படத்தில் சாதாரணமாய்த்தான் இருந்தது. ஆனால் நல்ல வேளையாக, மற்ற பல நடிகைகளைப்போல் முதல் படத்துடனேயே மறைந்துபோகும் துர்பாக்யம் அவருக்கு ஏற்படவில்லை. தொடர்ந்தாற்போல் **சந்திரஹாஸா, நவீரத்ன காளிதாஸ்** ஆகிய இரண்டு படங்களிலும் நடித்தார். இவ்விரண்டு படங்களிலும் அவருக்கு சுமாரான பெயர் கிடைத்தது. ஆனால், மேற்சொன்ன மூன்று படங்களிலுமே அவரது பேச்சில் ஒரு பொதுவான குறை காணப்பட்டு வந்தது. அதாவது அவர், நாடகமேடைப் பழக்கத்தின் காரணத்தாலோ என்னவோ, வார்த்தைகளைக் கொஞ்சம் அளவுக்கு அதிகமாகவே இழுத்துப் பேசிவந்தார்.

பின்னர் வந்தது **அம்பிகாபதி**, அவருக்கு அதிருஷ்டத்தையும், அமோஹமான புகழையும் சம்பாதித்துக் கொடுப்பதற்கு. இப்படத்தில் டைரெக்டரான எல்லிஸ் ஆர். டங்கன் தாமே அவரது 'மேக்'கப்பில் பிரத்தியேக கவனம் செலுத்தி, அவரை ஏழெட்டு வயது சிறியவராய் தோன்றும்படி செய்திருந்தார். அவரது சம்பாஷணையிலிருந்த குறையும் நீக்கப்பட்டிருந்தது. எம். கே. டி. பாகவதருடன் அவர் காதல் காட்சிகளில் ரொம்ப நன்றாய் நடித்துப் பெயர் பெற்றார். இப்படத்தில் அவர் பாடியிருக்கும் "ஆதிபராஞ்ஜோதி யெனை" என்ற பாட்டு இன்னமும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

**அம்பிகாபதி** படம் சந்தானலக்ஷ்மிக்கு அமைந்து போன படம் என்று சொல்லவேண்டும். அதைப் பார்த்த ரஸிகர்கள் அவர் மேன்மேலும் இதேபோல நடித்துப் புகழ்பெற வேண்டுமென்று விரும்பினர். ஆனால் அந்தப் படத்தில் அவருக்குக் கிடைத்த அவ்வளவு புகழ் இன்று வரை அவர் நடித்திருக்கும் வேறு எந்தப் படத்திலும் கிடைக்கவில்லை.

**அம்பிகாபதி**க்குப் பிறகு சந்தானலக்ஷ்மி **இன்பசாகரன்** தமிழ்ப் படத்தில் நடித்தார் அவர் சிரமப்பட்டதுதான் மிச்சம். இப்படம் துரதிருஷ்ட வசமாய் தீக்கிரையாகி விட்டது. பிறகு அவர் ஸென்ட்ரல் ஸ்டுடியோ தயாரித்த **பிரஹலாதா**வில் லீலாவதியாகத் தோன்றியது ரஸிகர்களுக்கு ஏமாற்றத்தையே அளித்தது. இதைவிட அதிகமான ஏமாற்றத்தையும்

வெறுப்பையும் தந்த ஒரு காரியத்தை அவர் **சதி முரளி** படத்திற்காகச் செய்தார். இப்படத்தில் அவர் (மற்ற பிரபல நடிகைகள் செய்தது போலவே) தாமும் கிருஷ்ணன் வேஷம் போட்டுக்கொண்டதை ரஸிகர்கள் மிக வெறுத்தனர்.

இவ்விரண்டு படங்களின் மூலமும் அவர் அடைந்த அபக்யாதியை **ஆர்யமாலா, பிருதிவிராஜன்** ஆகிய படங்கள் ஓரளவு சரிக்கட்டின. பின்னர் அவருக்கு **தமிழறியும் பெருமாளில்** நடிக்கவும், பாடவும் நிறைய சந்தர்ப்பம் கிடைத்தது. தாம் இழந்த புகழில் பெரும் பகுதியையும் அவர் இப்படத்தின் மூலம் திரும்பப் பெற்றுவிட்டார்.

**தமிழறியும் பெருமாளுக்குப்** பிறகு சந்தானலக்ஷ்மி **ஆராய்ச்சி மணி, தாசிப் பெண், அருந்ததி, ராஜ ராஜேஸ்வரி, ஜெகதலப் பிரதாபன், பக்தஹநுமான், சாலிவாஹனன், ஆரவல்லி, சுலோசன** ஆகிய ஒன்பது படங்களில் நடித்திருக்கிறார். இந்தப் படங்களிலெல்லாம் அவருடைய நடிப்பு பிரமாதமாய் புகழக்கூடியதாய் இல்லை என்றாலும், மோசம் என்று வெறுக்கக்கூடிய மாதிரியிலில்லை. அவர் தற்போது மாடர்ன் பிக்சர்ஸ் **மஞ்சுளாவிலும்** மீனாக்ஷி பிலிம்ஸ் **லக்ஷ்மி விஜயத்திலும்** நடித்துக் கொண்டிருக்கிறார்.

பொதுவாக, சந்தானலக்ஷ்மியின் நடிப்பைப் பற்றிக் கூறுகையில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். எந்தப் படத்திலும் அவர் ரஸிகர்களுக்கு வெறுப்பு ஏற்படாதபடி ஓரளவுக்கு நடித்து மார்க் வாங்கி விடுகிறார். அளவுக்கு அதிகமாகப் பாடி "சங்கீத விதுஷி" என்ற பட்டத்தைப் பெறவேண்டும் என்ற ஆசை அவருக்குக் கிடையாது. ஒரு படத்தில் ஒன்று அல்லது இரண்டு பாட்டுகளைப் பாடுவதையே அவர் வழக்கமாய்க் கொண்டிருக்கிறார். ஆனால் அந்த ஒன்று அல்லது இரண்டு பாட்டுகளை அதிக சிரத்தையுடன்—மிக இனிமையாகப் பாடிவிடுகிறார். இவ்விதமாக வேஷப் பொருத்தம், சுத்தமான பேச்சு, ஓரளவுக்குக் குறைவுபடாத நடிப்பு, இனிமையான பாட்டு ஆகியவை அவரிடம் ஒன்று சேர்ந்திருப்பதன் காரணமாகத்தான் அவர் நீடித்த புகழுடன் விளங்கி வருகிறார்.

அவருக்கு படமுதலாளிகள் இடைவிடாமல் நடிக்க சந்தர்ப்பம் அளித்து வருவதற்கு முக்கிய காரணமாக அவ

ருடைய சகஜமான குணத்தையும் குறிப்பிட வேண்டும். ஸ்டுடியோவில் உள்ள கூலி முதல் முதலாளிவரை யாவரிடமும் அவர் அதி சகஜமாய் பேசுவார்; பழகுவார். எண்ணி வார்த்தைகளைப் பேசும் சுபாவமுடையவர்களின் வாய்களைக் கூட பிடுங்கி, அவர்களை கலகலப்பாய் பேச வைத்து விடுவார். சந்தானலக்ஷ்மி ஸ்டுடியோவுக்குள் நுழைந்து விட்டால் அங்கு ஒரே கலகலப்பு ஏற்பட்டு விடும். வேலையின் கடுமை மறைந்து போகும்; தமாஷாக வேலை நடக்கும்.

தமாஷாகப் பேசுபவர்களிடமும், தமாஷாகப் பேசுவதிலும் சந்தானலக்ஷ்மிக்கு ரொம்ப இஷ்டம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், சேர்ந்தாற்போல் ஒரு மணி நேரம் அவரால் பேசாமல் இருக்கவே முடியாது. ஒரு சமயம், ஒரு கண்டிப்பான ஸ்டுடியோ முதலாளி சந்தானலக்ஷ்மியை உத்தேசித்து, "ஸ்டுடியோவில் யாரும் அநாவசியமாய்ப் பேசக் கூடாது" என்று பொதுவாக ஒரு உத்தரவைப் பிறப்பித்தாராம். முடிவில், இந்த உத்தரவை மீறிய குற்றத்திற்கு தாம் ஆளாவதற்குப் பதில், அந்த உத்தரவு பிறப்பித்தவரையே இக் குற்றத்திற்கு ஆளாகும்படி செய்து விட்டாராம் சந்தான லக்ஷ்மி!

நக்ஷத்திரப் புகழை அடைந்திருக்கும் சந்தானலக்ஷ்மியிடம் அகம்பாவத்தின் சாயையைக்கூடக் காண முடியாது. சிலரைப்போல "அண்டை வீட்டுக்காரி வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினி" கிடக்கும் குணம் அவரிடம் கிடையாது. தமக்குக் கிடைப்பதைக் கொண்டு திருப்தி யடைகிறார் அவர்.

மா நிறமும், நடுத்தர உயரமும் உடைய சந்தானலக்ஷ்மி சிக்கனமாக செலவு செய்யும் வழக்கமுடையவர். இந்த சிக்கனபுத்தி அவர் பால்யத்தில் பட்ட சிரமங்களின் பேரில் உருவானதாக இருக்கக்கூடும் என்று நினைக்கிறேன். தம் சம்பாத்தியத்தைக் கொண்டு அவர் கோயமுத்தூரில் ஒரு அழகிய பங்களாவைக் கட்டிக்கொண்டிருக்கிறார். சமீப வருஷங்கள் வரை சென்னை வாசியாக இருந்த அவர் தற்போது கோவை நகர் வாசியாக விளங்கி வருகிறார்.

# ஜி. சுப்புலக்ஷ்மி

டைரெக்டர் கே. சுப்ரமண்யம் தயாரித்த பக்த சேதா ஒரு புரட்சிகரமான படமாகும். ஒரு புதுமாதிரியான கதையை ஒரு புதிய நடிகையையும், இரண்டாந்தரமான இதர நடிக நடிகைகளேயும் நடிக்கச்செய்து படமாகத் தயாரிக்க, உண்மையில், ஒருவருக்கு எவ்வளவு தைரியம் இருக்கவேண்டும் என்று யோசித்துப் பாருங்கள். ஸ்ரீ. சுப்ரமண்யத்திற்கு அவ்வளவு தைரியம் இருக்கவே செய்தது. பக்த சேதா படம் ரஸிகர்களின் பேராதரவைப் பெற்றது. கே. சுப்ரமண்யத்தின் "மூன்றுவது(ஜி) சுப்புலக்ஷ்மி"யும் படத்தின் முதல் காட்சி முதலே ஒரு நக்ஷத்திரமாக மாறிவிட்டார். ஆஹா! அந்த அதிருஷ்டக் கையின் மஹிமையை என்னவென்று சொல்லுவது! சுப்ரமண்யத்திற்கு சேதா ஒரு தனிப்பட்ட வெற்றியை அளித்த படம்; அதே போலத்தான் ஜி. சுப்புலக்ஷ்மிக்கும்! சேதா வெளி வந்தவுடன் சுப்புலக்ஷ்மியின் பெயர் எங்கு பார்த்தாலும் அடிபட்டது. ரஸிகர்கள் சுப்புலக்ஷ்மியை வானளவாகப் புகழ ஆரம்பித்தனர்.

முதல் படத்தின் மூலமே மிகப் பிரபலமடைந்த ஜி. சுப்புலக்ஷ்மி அஷ்டசகஸ்ர ஐயர் ஜாதியைச் சேர்ந்தவர். சொந்த ஊர் கணபதி அக்ரஹாரம். இந்த ஊர் தஞ்சை ஜில்லாவில் திருவையாறுக்குச் சமீபத்திலிருக்கிறது. 1925ஆு ஜூன்மீ 6ஓ பிறந்த அவருக்கு ஒரு அண்ணனும், ஒரு அக்காவும் இருக்கின்றனர். சுப்புலக்ஷ்மிக்கு இன்னமும் விவாஹம் ஆகவில்லை. அவருடைய தகப்பனர் கணேசய்யர், புதுக்கோட்டை ஆதி திவான் அனந்தய்யருடைய கொள்ளுப் பேரனுவார். சுப்புலக்ஷ்மியின் நெருங்கிய சொந்தக்காரர்கள் பலர் இப்பொழுது சென்னையில் உயர்ந்த பதவிகளில் இருந்து வருகின்றனர்.

சுப்புலக்ஷ்மி சிறுவயதில் அந்த ஊர் போர்டு ஸ்கூலில் சேர்ந்து, மூன்றுவது பாரம் வரையில் படித்திருக்கிருர். அவருக்கு இயற்கையாகவே சங்கீதத்தில் அதிக பிரியம் ஏற்பட்டது. அந்தப் பிரியம்தான் அவரை இன்று ஒரு

பாடலியாக்கி யிருக்கிறது. அவருக்கு மூதன் முதலில் சங்கீதம் கற்றுக்கொடுத்த குரு யார் என்றால் ஸ்ரீ. கிராம போன் பெட்டியார்தான்! பிறகு, ஒன்பதாவது வயதில், ஆடு துறை பெருமாள் கோயிலைச் சேர்ந்த கைலாசம் பிள்ளை என்ற நாதஸ்வரக்காரரை வரவழைத்து, வீட்டிலேயே வசிக்கச் செய்து அவரிடம் சங்கீத சிக்ஷைபெற்று வந்தார்.

நான்கு வருஷ சிக்ஷைக்குப் பிறகு அவர் சாதாரணமாக கச்சேரி செய்யக்கூடிய அளவிற்கு சங்கீதம் கற்றுக்கொண்டு விட்டார். ஒரு விஜயதசமி தினத்தன்று தஞ்சாவூர் காமாக்ஷி அம்மன் சன்னிதானத்தில் அவருடைய சங்கீதம் அரங் கேற்றப்பட்டது.

இந்த சமயத்தில், சென்னையில் தீபம் பில்ம்ஸ் என்ற பெயருடைய ஒரு படக் கம்பெனியார் சித்ரா என்ற தமிழ் சமூகப் படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தனர். இக் கம்பெனியைச் சேர்ந்த நடராஜ பிள்ளை என்பவர் கும்ப கோணத்தில் வசித்துவந்த சுப்புலக்ஷ்மியைப் பற்றி அவர் கேள்விப்பட்டு, அவரைத் தம் படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொண்டு சென்னைக்கு அழைத்துவந்தார்.

சித்ரா படம் நியூடோன் ஸ்டுடியோவில் சில ஆயிரம் அடிகள் நீளம்தான் தயாரிக்கப் பட்டது. ஆனால் அதற்குள் அக் கம்பெனியே முறிந்து போய்விட்டது. சுப்புலக்ஷ்மி ஊருக்குத் திரும்புவதா அல்லது சென்னையிலேயே தங்கி வேறு கம்பெனிகளில் முயற்சிப்பதா என்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் பக்த சேதா படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்த ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் அவர்களின் தம்பியான ஸ்ரீ. கே. விஸ்வநாதன் சுப்புலக்ஷ்மியை பக்த சேதா படத்திற் காக ஒப்பந்தம் செய்துகொண்டார்.

சேதா படத்திற்கு ஒப்பந்தமானவுடன் மணக்கால் சகோதரர்களில் ஒருவரான ஸ்ரீ. சிவராஜ ஐயரிடம் சங்கீத சிக்ஷையை ஆரம்பித்து சுமார் இரண்டு வருஷ காலம் சொல்லிக்கொண்டார்.

சேதா படத்தில், சுப்புலக்ஷ்மி துரோணரின் பெண் சாந்தாவாக நன்கு நடித்திருக்கிறார். இப்படத்தில் அவர்

பாடியிருக்கும் "கண்டேன்," "தேவா தேவா," "ஏன் இன்னும்," "சேவா சேவா" ஆகிய பாட்டுகள் மிகப் பிரபல மாகி யிருக்கின்றன. இப் பாட்டுகளை அவர் இசைத்தட்டு களிலும் பாடியிருக்கிறார்.

சேதா படம் அதிக பிராபல்யம் அடைந்ததன் காரண மாக அப் படத்தின் கதையை சென்னை ரேடியோக்காரர்கள் ஒரு மணி நேர நாடகமாக நடிக்கச்செய்து ஒலிபரப்பினர். அந்த நாடகத்தில் சுப்புலக்ஷ்மி உள்பட மேற்படி படத்தில் நடித்த நடிகர்களனைவரும் பங்கெடுத்துக் கொண்டனர். தங்கள் சேதா நாடகத்தில் நடித்த சுப்புலக்ஷ்மியின் சங்கீதத் திறமையை அகில இந்திய ரேடியோக்காரர்கள் சரிவரக் கவனித்தனர். அது முதல் அவர்கள் சென்னை திருச்சி நிலை யங்களில் அடிக்கடி பாடுவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் அளித்து வருகின்றனர்.

சேதாவுக்குப் பிறகு சுப்புலக்ஷ்மி, பேபி சரோஜா தம் பெற்றோர்களுடன் கூட நடித்த காமதேனு சமூகப் படத்தில் நடித்தார். இப்படத்தில் அவருடைய பாட்டிற்கும், நடிப்புத் திறமைக்கும் துளிக்கூடப் பொருத்த மில்லாத ஒரு மட்ட மான உப பாத்திரம் அவருக்கு அளிக்கப்பட்டது.

அண்ணா சுப்ரமண்யம் சுப்புலக்ஷமியை புகழேணியில் ஏற்றிவிட்டார். ஆனால் தம்பி விஸ்வநாதனே அடுத்த படத்தி லேயே அவரை யதாஸ்தானத்திற்கு இறக்கி விட்டார். ஸ்ரீ. சுப்ரமண்யம் எடுத்துக்கொண்ட சிரமத்தை யெல்லாம் விழலுக்கிறைத்த நீராகும்படி செய்துவிட்டார் விஸ்வநாதன். அதோடு நின்றாலும் பாவாயில்லையே. சினிமா ரஸிகர்கள் சுப்புலக்ஷ்மி மீது காட்டிவந்த அபிமானம் குறைந்ததோடு வெறுப்பும் தோன்றலாயிற்று.

சுப்புலக்ஷ்மியின் துரதிருஷ்டம் இதோடு முடிவடைந்து விடவில்லை. பாரத் பிக்சர்ஸின் "சுபத்ரா அர்ஜுனா"விலும் (சுபத்திரையாக) அவர் நடிக்கும்படி நேர்ந்தது. இந்தப் படத்திற்கு ஏற்பட்ட தோல்வியில் அவருக்கும் பங்கு கிடைத் தது. சுப்புலக்ஷ்மி நடித்து வெளிவந்த் கடைசிப் படம் இது தான்.

இதன் பிறகு "நாரதர் கல்யாணம்" என்ற ஒரு தமிழ்ப் படத்தில் நாகர்கோயில் மஹாதேவனுடன் நடித்தார். ஆனால் படம் ஓரளவு தயாரானதோடு நிறுத்தப்பட்டுவிட்டது. மாடர்ன் தியேட்டர்ஸாரின் "அருந்ததி" படத்தில் சுப்பு லக்ஷ்மிதான் முதலில் நடிப்பதாயிருந்தது; ஆனால் நடிக்க வில்லை.

சினிமா உலகில் தொடர்ச்சியாய் தமக்கு ஏற்பட்ட துரதிருஷ்டம் காரணமாக, சுப்புலக்ஷ்மிக்கு சினிமாமீதே ஒரு வெறுப்புத் தோன்றியது. "இனிமேல் நல்ல 'சான்ஸாக'க் கிடைத்தால் நடிப்பது. இல்லையென்றால் சினிமாவே வேண்டாம்" என்று அவர் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்.

சினிமா விஷயத்தில் சுப்புலக்ஷ்மிக்கு ஏற்பட்ட வெறுப் பானது சங்கீதத் துறையில் அவருக்கு நன்மையாக மாறியது. ஸ்ரீ. ம்ருத்துவக்குடி ராஜகோபாலனிடம் கொஞ்சகாலம் சங்கீதம் சொல்லிக்கொண்டு கச்சேரி செய்யக் கிளம்பினர். **சேதா** மூலம் அவர் முன்பே ரஸிகர்களுக்கு அறிமுகமாகி யிருப்பதால் சங்கீதத் துறையில் அவருக்கு தாராளமான வரவேற்பு கிடைத்து வருகிறது. தமிழ்நாடு பூராவிலும் அவர் நூற்றுக் கணக்கான கச்சேரிகளைச் செய்து கீர்த்தியை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். அதோடு இலங்கை, ஹைதராபாத், செகந்தராபாத் ஆகிய இடங்களுக்கும் சென்று தம் சங்கீதத் திறமையைக் காட்டிவிட்டு வந்திருக்கிறார். இக் கச்சேரிகள் மூலம் அவர், **காமதேனு, சுபத்ரா அர்ஜுனு** ஆகிய படங்களால் ஏற்பட்ட அபஜயத்தை ரஸிகர்கள் மறக்கும்படி செய்து, மீண்டும் தம்மீது நல்ல அபிப்பிராயம் நிலவும்படி செய்து கொண்டிருக்கிறார். இதன் காரணமாகத்தான் தற் போது நம் படமுதலாளிகள் சிலரின் கவனம் அவர்மீது மீண்டும் விழ ஆரம்பித்திருக்கிறது போலும். கூடிய விரை வில் ஒன்றிரண்டு படங்களில் அவர் நடிப்பதற்கு ஒப்பந்தம் ஆகக்கூடும் என்று தெரிகிறது.

ஐந்தேகால் அடி உயரமும், சிவந்த மேனியும், சினிமா வுக்கேற்ற முகவெட்டும், கலகலப்பான பேச்சும் உள்ள சுப்பு லக்ஷ்மி சினிமாப் படங்களில் பயன்படுத்துவதற்கென்றே தற் போது பரதநாட்டியத்தையும் பயின்று வருகிறார். அவர்

நடிக்கவும், பாடவும் கூடும் என்பதைத்தான் நாம் முன்பே தெரிந்து கொண்டிருக்கிறோமே. அவருக்குப் பொருத்தமான வேஷத்தையும் கொடுத்து, தகுந்த சிரத்தையும் எடுத்துக் கொள்ளப்பட்டால் சேதா மூலம் அவர் நமக்களித்த நம்பிக்கை வீணானதல்ல என்று அவர் நிரூபிக்கக்கூடும்.

# எம். எஸ். தேவசேனு

சாதாரணமாக நம் ஸ்திரீகள் தங்கள் நடையுடை பாவனைகளுக்கு சினிமா நக்ஷத்திரங்களை ஒரு ஆதர்சமாகக் கொண்டு அவர்களை பின்பற்றி வருகின்றனர். புதுப்புது ரகமான புடவைகள், பல தினுசான கைகளுடைய ஜாக்கெட்டுகள், நவீனம் நிறைந்த நானுவித லோலக்குகள்! அடேயப்பா இப்படி நம் குடும்ப ஸ்திரீகளின் 'பாஷன்' தலைகால் தெரியாத வேகத்தில் போய்க்கொண்டிருக்கும்போது, ஒரு சினிமா நக்ஷத்திரம் நம் குடும்ப ஸ்திரீகளின் நடையுடை பாவனைகளை நாடிச்செல்லுகிறுர் என்ருல் ஆச்சரியப் படுவீர்களல்லவா?

நடிகை எம். எஸ். தேவசேனுவைப் பாருங்கள். தலையில் புஷ்ப ஆர்ச் இல்லை; காதிலோ வெறும் தோடுதான்; சாதாரணமான ஜாக்கெட்; படாடோப மில்லாத புடவை. இருந்த போதிலும் அவருடைய அலங்காரத்திலோ, தோற்றத்திலோ எதுவும் குறைவாகத் தோன்றுவதில்லை. விஞ்ஞானமும், நாகரீகமும் ரொம்பவும் முதிர முதிர, சாமானியத்தன்மையில் ஒரு தனி அழகு காணப்படுவது சகஜந்தானே? அதுவும் இந்த சாமானியத் தன்மை பிரபல மடைந்தவர்களிடம் காணப்படும்போது அது விசேஷ மஹத்துவம் பெறுகிறது. ஆங்கிலத்தில் 'ஸிம்ப்ளிஸிடி' என்று குறிப்பிடப்படும் இந்த சாமானியத் தன்மையை விரும்பிக் கொண்டாடும் கோஷ்டியினர் எல்லா நாட்டிலும் இருக்கவே செய்கின்றனர்.

ஆடை ஆபரண அலங்காரத்தைப் போலவே தேவசேனுவின் நடத்தையிலும், பேச்சிலும்கூட படாடோபத்தைக் காண முடியாது. அவருடைய பேச்சில் கருணையும், இரக்கமும் நிரம்பியிருக்கும். மணிக்கணக்கில் அவருடன் பேசிக்கொண்டிருந்தால்கூட சலிப்பு ஏற்படாது. அவருடைய சுபாவத்தைக் கவனிக்கையில், அவருக்கு ஆயுளில் ஒரு தடவையாவது கோபம் வந்திருக்குமோ என்று நமக்குத் தோன்றும்.

தேவசேனுவின் பூர்வீகம் தஞ்சாவூர். ஆனல் அவர் பிறந்து வளர்ந்ததெல்லாம் சென்னையில்தான். அதனல் அவர்

சென்னையையே தம் சொந்த ஊராக எண்ணி, தம் பெயருடன் 'எம்' என்ற எழுத்தைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்.

விரோதிகிருது (1912-ம்) வருஷம் ஆவணி மாதம் 26-ந் தேதியன்று மீராபாய் என்பவரின் புத்திரியாகப் பிறந்தார் தேவசேனா. அன்று கிருஷ்ண ஜயந்தி; ஆதலால் அவருக்கு கிருஷ்ணவேணி என்று பெயரிடப்பட்டது. அவரது தாயாரால் இடப்பட்ட இப்பெயரை **சத்திய சீலனில்** நடிக்க வந்த போது எம். கே. டி. பாகவதர் "தேவசேனா" என்று மாற்றி வைத்தார்.

தேவசேனாவின் தாய்பாஷை மஹாராஷ்டிரம். எனினும் அவர் சென்னை கன்னிகா பரமேஸ்வரி பள்ளிக்கூடத்தில் சேர்ந்து (ஐந்தாவது வரையில்) படிக்க நேர்ந்ததால் தெலுங்கு பாஷையில் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. பின்னர் அவர் தமிழ் பாஷையைத் தாமாகவே கற்றுக்கொண்டார். ஹிந்துஸ்தானி பாஷையும் அவருக்கு ஓரளவு தெரியுமாம்.

பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கும்போது தம் ஏழாவது வயதிலேயே தேவசேனா சங்கீதம் கற்கத்தொடங்கினார். தற்போது அடையாறு கலாக்ஷேத்திரத்திலிருந்துவரும் (சங்கீத வித்வான் டைகர் வரதாச்சாரியாரின் சகோதரரான) வீணை கிருஷ்ணமாச்சாரியார் முதன் முதலில் அவருக்கு வாய்ப்பாட்டு சங்கீதத்தைப் போதித்தார். பிறகு வீணை ஸ்ரீ. வி. சுப்பண்ணாவிடம் சிக்ஷை சொல்லிக் கொண்டு, அதி பால்ய வயதிலேயே அவர் வாய்ப்பாட்டுக் கச்சேரிகளைச் செய்யத் தொடங்கிவிட்டார். பிடில், வீணை ஆகிய இரண்டு வாத்தியங்களையும் அவருக்கு வாசிக்கத் தெரியுமாம்.

தேவசேனாவுக்கு பரத நாட்டியம் நன்றாகத் தெரியுமாம். பரத நாட்டியக் கச்சேரிகளும் செய்துவந்தார் என்பதை அறிந்தபோது நானே மிக ஆச்சரியம் அடைந்தேனென்றால் நீங்கள் ஆச்சரியம் அடையமாட்டீர்களா என்ன? சங்கீத சிக்ஷை பெற்றுவந்த அதே சமயத்தில், முதலில், கோவிந்தசாமி நட்டுவனாரிடமும், பிறகு "நெல்லூர் நட்டுவனார்" என்று அழைக்கப்பட்டு வந்தவரிடமும் அவர் இக் கலையில் நல்ல பயிற்சி பெற்றார். அவருடன் கூடப் பிறந்தவரான ஒரே

சகோதரி துரையம்மாவும் தேவசேனுவுடன் கூடவே பரத சாஸ்திரத்தைப் பயின்றுகொண்டார். பின்னர் இருவரும் சேர்ந்தே நாட்டியக் கச்சேரிகள் செய்துவந்தனர். ஆனல் துரையம்மா தம் 16-வது வயதிலேயே இவ்வுலகை விட்டேகினுர். அப்பொழுது தேவசேனுவுக்கு வயது பதினன்கு.

அவருக்கு வயது 16 ஆனவுடன், தம் குலாசாரப்படி, சென்னை தங்கசாலைத் தெருவிலுள்ள சுப்ரமண்ய ஸ்வாமி கோயிலே தேவதாசியாகப் பொட்டுக் கட்டிக்கொண்டார். இதன் பிறகு அவர் ஐந்தாறு வருஷங்கள் சங்கீத நாட்டியக் கச்சேரிகளை அவ்வப்போது செய்துகொண்டிருந்தார்.

சினிமாவில் சேர்ந்து நடிக்க வேண்டுமென்ற எண்ணம் தேவசேனுவின் மனதில் எதிர்பாராத விதமாய் உதயமாயிற்று. 1935-ம் வருஷத்தில் ராயப்பேட்டையிலுள்ள பழைய காங்கிரஸ் மண்டபத்தில் கண்காட்சி நடந்துகொண்டிருந்தது. ஒருநாள் பிரபல பாலசரஸ்வதியின் பரத நாட்டியக் கச்சேரி; இக்கச்சேரிக்கு இக் கலையில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த தேவசேனு சென்றிருந்தார். அந்த சமயத்தில் பிரபலமாயிருந்த பி. எஸ். ரத்னுபாய் சகோதரிகளும் மற்றும் பல சினிமா நக்ஷத்திரங்களும் இக்கச்சேரிக்கு விஜயம் செய்திருந்தனர். அவர்கள் இன்னின்னுர் என்பதை நண்பரொருவர் தேவசேனுவுக்குச் சொன்னுர். அந்த நக்ஷத்திரங்களின் ஜ்வலிப்பைக் கண்டு தேவசேனு பிரமித்துப் போனுர். சாதாரணமாக பெண்களுக்கு ஏற்படும் ஆசை அவருக்கும் ஏற்பட்டது. அதற்கேற்றுர்போல் மேற்படி நண்பர், "நீங்களும் ஏன் அவர்களைப்போல ஒரு நக்ஷத்திரமாகி விடக்கூடாது? அதற்கு அவசியமான திறமைதான் உங்களிடம் நிறைய இருக்கிறதே" என்று தூபம் போட்டார்.

தேவசேனுவின் மனதில் இத்தூண்டுதல் மொழிகள் ஆழப் பதிந்து போயின. அவர் வீடு திரும்பினுர்; ஆனல் சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற எண்ணம் மட்டும் அவரை விட்டுத் திரும்பிச் செல்லவேயில்லை.

இந்த சமயத்தில் திருச்சி தியாகராஜா பில்ம்ஸார் சத்தியசீலன் என்ற தமிழ்ப் படத்திற்கான முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். தேவசேனுவின் சிநேகிதை ஒரு

வர் தியாகராஜா பில்ம்ஸாரை வரவழைத்து தேவசேனாவை மேற்படிப் படத்தின் கதாநாயகி வேஷத்திற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளும்படிச் செய்தார்.

**சத்திய சீலன்** படம் பம்பாய் வாடியா மூவிடோன் ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டு, 1936ம் வருஷம் வெளிவந்தது. எஸ். டி. சுப்புலக்ஷ்மியுடன் இரண்டு படங்களில் சேர்ந்து நடித்த எம். கே. தியாகராஜ பாகவதரின் இரண்டாவது கதாநாயகியாக நடிக்கும் அரிய சந்தர்ப்பம் தேவசேனாவுக்கு முதல் படத்திலேயே கிடைத்தது.

**சத்திய சீலன்** படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது தேவசேனாவுக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. பிரதாபருத்ரன் பிரேமாவதியை ரதத்தில் வைத்து அதிக வேகமாய்க் ஓட்டிக் கொண்டுவரும் காட்சி தயாரிக்கப்பட்ட போது, குதிரையின் கால் இடறிவிடவே அவர் கீழே தூக்கி எறியப்பட்டார். இதனால் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக அவருக்கு டைபாய்ட் ஜுரம் வந்து 2 மாதங்கள் மிகக் கஷ்டப்பட்டார்.

**சத்திய சீலன்** படத்தில் அவருக்கு நல்ல பெயர் கிடைத்தது என்றே சொல்ல வேண்டும். 1937-ம் வருஷத்தில் அவரை வேல் பிக்சர்ஸார் தங்கள் **வல்லாள மகா ராஜா** படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இப்படத்தின் மூலம் தேவசேனாவுக்கு புகழ் அதிகரிக்கவில்லை. இருந்த போதிலும் அவர் இப்படத்தை ஒருக்காலும் மறக்க முடியாது. இந்தப் படத்தில் தானே அவர் எம். எம். தண்டபாணி தேசிகருடன் முதன் முதலில் சேர்ந்து நடித்தார்!

தேசிகரின் சங்கீதத்தில் இருந்த கவர்ச்சி தேவசேனாவைக் கவர்ந்துவிட்டது. தேசிகருடன் மற்றும் பல படங்களில் சேர்ந்து நடிக்க வேண்டும் என்று அவர் அப்பொழுதே தீர்மானித்துக் கொண்டார். அதன் பின்னர் அந்த சங்கீதத்தில் இருந்த 'கவர்ச்சி' நாளுக்கு நாள் அதிகரித்துப் போகவும், தேவசேனா தனித்துப் போகும் எண்ணத்தையே விட்டுவிட வேண்டியதாயிற்று. அன்று முதல் இன்றுவரை இந்தக் கலா ஊழியர்கள் சேர்ந்தே வசித்து வருகின்றனர்.

**வல்லாளா**வுக்குப் பிறகு தேசிகர் நடித்த **தாயுமானவர், மாணிக்க வாசகர்** ஆகிய இரண்டு படங்களிலும் தேவசேனா நடித்தார்.

இந்தப் படம் ஜெயபாரத் பிலிம் கம்பெனி, மாடர்ன் தியேட்டர்ஸ், தேசிகர், தேவசேனு ஆகியவர்களின் கூட்டுத் தயாரிப்புகள் ஆகும்.

இவ்விரண்டு படங்களிலும் ஈடுபடுவதற்கு முன்பே ராஜா சாண்டோவால் தயாரிக்கப்பட்ட **விஷ்ணு லீலாவிலும்** தேவசேனு நடித்திருக்கிறார். இப்படத்திற்கு பண வசூலில் வெற்றி கிடைக்கவில்லை யென்றாலும் லீலாவதி, தேவகி ஆகிய இரு வேஷங்களிலும் அவரது நடிப்பு வெற்றிகரமானதாய் இருந்தது.

**மாணிக்க வாசக**ருக்குப் பிறகு தேவசேனு உமா பிக்சர் ஸாரின் **தமிழறியும் பெருமாளி**லும், மாடர்ன் தியேட்டர்ஸாரின் **ராஜ ராஜேஸ்வரி**யிலும் நடித்திருக்கிறார். இந்த இரு படங்களிலும் அவரது பாகம் அவ்வளவாக திருப்தி அளிக்கவில்லை. தற்போது அவர் ஜெமினி ஸ்டுடியோ தயாரித்து வரும் **சந்திர லேகா**விலும் கண்ணு பிலிம்ஸாரின் **திருமழிசை ஆழ்வாரி**லும் நடித்துவருகிறார்.

தேவசேனுவுக்கு சங்கீதத் திறமை இருந்தும் தற்காலம் கச்சேரி செய்வதை அடியோடு நிறுத்தி விட்டார். ரேடியோவில் மட்டும் அவ்வப்போது பாடிவருகிறார். "தேசிகர் கச்சேரி செய்யும்போது என் சங்கீதம் எந்த மூலே?" என்று ஒரு சமயம் தேவசேனு என்னிடம் சொன்னது இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது.

தேவசேனுவுக்கு, இயற்கையாகவே, பெரிய மனக் கோட்டைகளுக்குத் தாம் அதிபதியாக வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. புகழுக்காகவோ, பணத்திற்காகவோ அவர் தம் கௌரவத்தை அர்ப்பணம் செய்யத் தயாராயில்லே. தமக்கு அளிக்கப்படும் எந்தப் பாத்திரமானாலும் சரி; அதைத் தம்மாலியன்றவரை திருப்திகரமாய் நடித்து முடிப்பதோடு அவர் திருப்தி அடைகிறார்.

# எம். எம். தண்டபாணி தேசிகர்

வட இந்தியாவில் விஷ்ணுபந்த் பக்னிஸின் பெயரைச் சொன்ன மாத்திரத்தில் துகாராம், துளசிதாஸ் போன்ற மஹான்களின் உருவங்கள்தான் நம் கண்முன் வந்து நிற்கும். இதேபோல் தென்னிந்தியாவில் எம். எம். தண்டபாணி தேசிகரின் பெயரைச் சொன்னவுடன் பட்டினத்தார், நந்தனர் போன்ற மஹான்களெல்லாம் நம் கண்முன் தோன்றுவர்.

பக்னிஸுக்கு தாம் சினிமாவில் நடிக்கப்போகிறோம் என்ற எண்ணம் சொப்பனத்தில் கூடக் கிடையாதாம். சினிமா உலகம் அவரைத் தேடிச்சென்று இழுத்துவந்து பிரபலப்படுத்தியது தண்டபாணி தேசிகர் விஷயமும் அப்படித்தான். மதுரை தேவாரப் பாடசாலையின் உபாத்தியாயராய் அமைதியாகக் காலந்தள்ளிவந்த தம் "பக்தரை", திடீரென்று ஒருநாள், "சினிமாத் தெய்வ" மொன்று தூக்கத்தினின்றும் தட்டி எழுப்பி ஆட்கொண்டது!

அன்று முதல் தேசிகரின் வாழ்வில் நேர்மாறான மாறுதல். அவர் தம் முன் ஒரு புது உலகத்தைக் கண்டார். இருள் சூழ்ந்த தம் பழைய வாழ்க்கையை விட்டுதறிவிட்டு இந்த ஜோதி உலகத்தில் பிரவேசித்தார். பக்னிஸைப் போலவே தம் முதல் படத்தின் (பட்டினத்தார்) மூலமேயே தேசிகர் ஒரு நக்ஷத்திரமாகி பிரகாசிக்கத் தொடங்கிவிட்டார்.

பக்னிஸ், தேசிகர் இவர்கள் இருவரது வாழ்க்கையிலும் முக்கிய ஒற்றுமை இருப்பதனல், தேசிகரை "தென்னிந்திய பக்னிஸ்" என்றே, பக்னிஸை "வட இந்திய தேசிகர்" என்றே குறிப்பிடுவது மிகப் பொருத்தமேயாகும். ஹிந்திப் படங்களில் பக்னிஸும், தமிழ்ப் படங்களில் தேசிகரும் மஹான்களின் வேஷத்தை நடிப்பதில் தனிப் புகழ்பெற்றுள்ளனர். வேறு எவ்வளவோ பேர்கள் பக்திமான்களின் வேஷங்களை நடித்திருக்கின்றனர். இருந்தாலும் இந்த இருவரை மட்டும்தான் இவ்வேஷத்திற்காகப் பிறந்தவர்கள் என்று பொது ஜனங்கள் கருதி வருகின்றனர்.

தேசிகர் இன்றையதினம் சங்கீத உலகிலும், சினிமா உலகிலும் மிகப் புகழுடன் விளங்குகிறார். படங்களுக்கும், கச்சேரிகளுக்கும் ஆயிரக்கணக்கில் பணம் வாங்குகிறார். ஆனால் சுமார் 28 வருஷங்களுக்குமுன் அவர் முதன் முதலில் சில தேவாரப் பாட்டுகளைப் பாடி, "முதல் கச்சேரி" செய்ததற்கு ஐந்தே ரூபாய்தான் சன்மானம் கிடைத்தது. தேசிகருக்கு இந்த ஐந்து ரூபாய் அப்பொழுது ஐயாயிரம் ரூபாயாகத் தோன்றி யிருக்கும். இல்லை யென்றால், வெகுநாள்வரை தகப்பனார் சில்லரைக்காசு கொடுக்க மறுக்கும்போதெல்லாம், இந்த ரூபாயைத் திருப்பித் தரும்படி கேட்டுக்கொண்டே யிருப்பாரா?

தேசிகரின் "முதல் கச்சேரி" நடந்தது தஞ்சை ஜில்லாவிலுள்ள திருமருகல் என்ற ஊரில். இந்த க்ஷேத்திரத்தில்தான் சிவலிங்கம் சாக்ஷி சொன்னதாக ஐதீகம். இந்த ஊருக்கு ஒரு மைல் தூரத்திலுள்ள பூவனூரில்தான் தேசிகர் பால்யத்தில் வளர்ந்து வந்தார். அதனால் அவர் தேவாரம் திருப்புகழ் பாடுவதில் பிரசித்தம் அடைய ஆரம்பித்ததும் அவரை ஜனங்கள் "திருப்புகழ் தண்டபாணி," என்றும் "பூவனூர்ப் பையன்" என்றும் குறிப்பிடலாயினர்.

ஆனால், உண்மையில் இந்தப் "பூவனூர்ப் பையனின்" சொந்த ஊர் (தஞ்சை ஜில்லா) நன்னிலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு ஆறு மைல்கள் தூரத்திலுள்ள திருச்செங்காட்டங்குடியாகும். தேசிகர் ஒன்றரை வயதுக் குழந்தையாக இருந்தபோதே அவரது தாயார் இறந்துபோய் விட்டார். அதன் பிறகு அவரது தகப்பனார் முத்தய்யா தேசிகர் தம் குழந்தையுடன் பூவனூருக்கு வந்து வசிக்கலானார்.

தேசிகர் அந்த ஊர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். தமிழை நன்றாக எழுதப் படிக்கவும், ஸம்ஸ்கிருதத்தில் சொற்பமும் கற்றுக் கொண்டார். அதோடு படிப்பு முற்றுப் பெற்றது. தேவாரம், திருப்புகழ் முதலியவைகளைப் பாடுவதும், கதா காலக்ஷேபம் செய்வதும் தான் தேசிகரின் குடும்பத்தொழில். தேவாரப் பாடசாலை உபாத்தியாயரா யிருந்த அவருடைய சிறிய தகப்பனாரான மாணிக்க தேசிகர் அவருக்கு இந்தக் குடும்பத் தொழிலை

கற்பித்து வைத்தார். பிறகு சட்டயப்பப் பிள்ளை என்ற நாதஸ்வரக்காரர் அவருக்கு ஆரம்ப சிக்ஷையை சொல்லி வைத்தார்.

தேசிகருக்கு அப்போது மணியோசை போன்ற ஆறு கட்டை சாரீரம் இருந்ததால் முதல் கச்சேரிக்குப் பிறகு அவர் மளமளவென்று பிரசித்தியடைய ஆரம்பித்தார். அக்கம் பக்கத்து ஊர்களுக்கெல்லாம் அவரை வரவழைத்துப் பாடச் செய்துவந்தனர். "பூவனூர் பையன் பாடுகிறான்" என்றால் கூட்டத்திற்கு குறைவேயிராது. பல ஊர்களில் அவர் பாடிப் புகழ்பெற்றதோடு ஏராளமான பரிசுகளையும் பெற்றார். திருவாவடுதுறை ராஜரத்னம் பிள்ளை, மன்னார்குடி ராஜகோபால் பிள்ளை, கொனக்கோல் பக்கிரியா பிள்ளை, பங்களூர் தாயம்மாள் போன்ற வித்வான்கள் தேசிகரின் சங்கீதத் திறமையை மெச்சி உத்ஸாகப் படுத்தினர்.

இதற்கிடையில் தேசிகரின் தகப்பனார் கதா காலக்ஷேபம் செய்வதற்காக சிங்கப்பூருக்குச் சென்று அங்கேயே காலமானார். அவரை அன்போடு வளர்த்துவந்த சிறிய தகப்பனாரும் காலமாகிவிடவே, தேசிகர் கும்பகோணத்திற்குச் சென்று தம் தமக்கையின் வீட்டில் வசிக்கலானார். அங்கிருந்தபோது பிடில் வித்வான் ராஜமாணிக்கம் பிள்ளையிடம் தேசிகர் நான்கு வருஷ காலம் வாய்ப்பாட்டில் சிக்ஷை சொல்லிக் கொண்டார். பிறகு தம் 19-வது வயதில் மதுரைக்குச் சென்று, அங்குள்ள ஒக்கூர் சி. கரு. சி. லெ. லக்ஷ்மணன் செட்டியாரவர்களின் தேவாரப் பாடசாலையில் உபாத்தியாயராக அமர்ந்தார். மதுரையில் அவர் ராஜராஜேஸ்வரி அம்பாள் சந்நிதியில் முதன் முதலாக மேடைமீது அமர்ந்து கச்சேரி செய்தார். அந்தக் கச்சேரிக்கு விஜயம் செய்திருந்த நாதஸ்வர வித்வான் (மதுரை) பொன்னுசாமி பிள்ளை அவருடைய பாட்டைப் பாராட்டி ஆசீர்வதித்தார்.

1931-ம் வருஷத்தில் தேசிகர் "கொலம்பியா" கம்பெனியாரின் இசைத் தட்டுகளில் தேவாரம், அருட்பா முதலியவைகளைப் பாடிப் பதிய வைத்தார். பிரசித்திபெற்ற இந்த இசைத் தட்டுகளே சினிமாவுலகிற்கு அவருக்கு வழி காட்டியாக இருந்தன.

ஒருநாள் பிற்பகல் தேசிகர் தம் தேவாரப் பாடசாலையில் நிம்மதியாகத் தூங்கிக்கொண் டிருந்தார். அந்த சமயத்தில், சென்னை வேல் பிக்சர்ஸ் ஸ்டுடியோ முதலாளி ஒருவரும், டைரக்டர் டி. வி. வடிவேல் நாயக்கரும் தங்கள் பட்டினத்தார் படத்திற்கு அவரை ஒப்பந்தம் செய்வதற்காகப் போய்ச் சேர்ந்தனர். தேசிகர் கண்ணை விழித்துப் பார்த்தார். அதிர்ஷ்டம் தம் முன் நின்றதை அவர் பார்த்தாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் செய்த தீர்மானம் என்னமோ ரொம்ப சரியானது என்று சொல்ல வேண்டியதில்லை.

தேசிகருக்கு பாடுவதோடுகூட நடிக்கவும் வேண்டுமென்ற ஆசை சிறு வயது முதலே உண்டு. அந்த ஆசையில் அவருடைய மனம் செல்லாமல் செய்து வந்தார் அவரது சிறிய தகப்பனார். ஆதலால் நடிப்பதற்கு—அதுவும் நூதனமே உருவான சினிமாப் படங்களில் நடிப்பதற்கு—அழைக்கப்பட்டதை அவர் அதிக சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார். பட்டினத்தாரில் நடிப்பதற்காக தேசிகர் 1934-ம் வருஷத்தில் பட்டணத்துக்கு வந்து சேர்ந்தார்.

சினிமாவுக்கு புதியவரா யிருந்தால், ஸ்ரீ. வடிவேல் நாயக்கர் தேசிகர் விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தினார். தேசிகர் பெற்ற வெற்றியில் பெரும் பங்கு ஸ்ரீ. நாய்க்கருக்கே சேரும்.

வேல் பிக்சர்ஸின் பட்டினத்தார் 1937-ம் வருஷத்தில் வெளி வந்தது. இப்படம் தயாரிக்கப்பட்ட அதே சமயத்தில்தான் லோடஸ் பிக்சர்ஸின் ஒரிஜினல் பட்டினத்தாரும் தயாராகியது. ஆனால் அந்தப்படம் திரைக்கு முதலில் வந்து விட்டது. சில மாதங்களுக்குப் பிறகே வெளிவந்தது தேசிகர் நடித்த பட்டினத்தார். இருந்தபோதிலும் பொது ஜனங்களின் அமோஹ ஆதரவு தேசிகர் நடித்த பட்டினத்தாருக்கே கிடைத்தது. அது மட்டுமல்ல; அந்தக் காலத்தில் அதிக வாரங்கள் ஓடி, நிறையப் பணவசூலைக் கொடுத்த படம் இதுதான் என்பதையும் குறிப்பிட வேண்டும். பட்டினத்தார் படத்தில் தேசிகருக்குக் கிடைத்த புகழை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. அவருடைய பாட்டுகளை படம் பார்த்தவர்கள் ரொம்பவும்

ரஸித்துத் தாங்களே பாடவும் தொடங்கினர். "ஒரு மட மாது" என்ற பாட்டு, படத்தின் மூலமும் இசைத்தட்டு மூல மும் அதிக பிரசித்தி அடைந்தது. சமீப வருஷங்கள் வரை, தேசிகர் தம் கச்சேரிகளில் இந்தப் பாட்டைப் பாடினல்தான் விடுவார்கள் ரஸிகர்கள். அவரது நடிப்பும் ஜனங்களை மிகக் கவர்ந்தது. ஆடையைக் கிழித்தெறிந்துவிட்டு துறவறம் பூணும் காட்சியில் உள்ள அவரது நடிப்பை ரஸிகர்கள் மிகப் பாராட்டுகின்றனர்.

தேசிகருக்கு சினிமாவுக்கு வருமுன் நாடகமேடை அனு பவம் கிடையாது. ஆனல் பட்டினத்தார் படத்தில் நடித்தபின் அந்த அனுபவத்தையும் அடைந்துவிட வேண்டுமென்ற எண் ணத்துடன், அவர், திண்டுக்கல், திருநெல்வேலி, திருச்சி ஆகிய ஊர்களில் நந்தனராகத் தோன்றி நடித்தார். ஆனல் அத்துறையில் அவர் தொடர்ந்து ஈடுபடாததிலிருந்து, அத் துறை அவருக்குப் பிடிக்கவில்லை என்றே தீர்மானிக்க வேண்டி யிருக்கிறது.

பட்டினத்தார் நல்ல வசூலைக் கொடுக்கவே வேல் பிக்சர்ஸார் தேசிகரை தங்கள் வல்லாள மஹாராஜன் படத்தில் நடிக்கச் செய்த னர். தேசிகருக்கு ராஜா வேஷம் அமையாததாலும், படத் தின் கதைப்போக்கு தாறுமாருய் இருந்ததாலும் படம் வெற்றி பெறவில்லை.

வேல் பிக்சர்ஸுக்கு வல்லாள நிறைய லாபத்தைக் கொடுக்கவில்லையென்ருலும், தேசிகருக்கு அப்படம் 'பெரிய லாப'த்தைக் கொடுத்தது. தேவசேனவை சந்தித்தது முதல் அவரது வாழ்க்கையிலும் தொழிலிலும் பல அபிவிருத்திகள் ஏற்படலாயின. தேவசேன ஏராளமான தெலுங்குக் கீர்த் தனைகளைப் பாடம் பண்ணி வைத்திருந்தது தேசிகருக்குப் பேருதவியாயிருந்தது. உண்மையில், தேசிகர் இடைவிடாது உழைத்து தம் சங்கீத வித்வத்தைப் பலப்படுத்திக் கொண்ட தற்கு தேவசேனவே தூண்டுகோலாக இருந்திருக்கிருர். மதுரை வாசியாயிருந்த தேசிகர் மதருஸ் வாசியாக மாறிப் போனதும் தேவசேனவால்தான் என்று சொல்லவேண்டுமா?

வல்லாளவுக்குப் பிறகு, தேசிகர், தேவசேன, ஜெயபாரத் பில்ம் கம்பெனியார், மாடர்ன் தியேட்டர்ஸார் ஆகியோர்

ஒன்று சேர்ந்து மாணிக்க வாசகர், தாயுமானவர் ஆகிய படங்களைத் தயாரித்தனர். இவ்விரு படங்களும் தேசிகருக்கு அசாத்திய மான புகழைச் சம்பாதித்துக் கொடுக்கவில்லை யென்றாலும் சுமாரான வெற்றியைப் பெற்றன.

1941-ம் வருஷத்தில் தேசிகரை நந்தனார் படத்தில் நடிப்பதற்காக ஜெமினி ஸ்டுடியோ ஒப்பந்தம் செய்து கொண்டது. தாம் எடுக்கப்போவது மூன்றாவது நந்தனார் என்பது ஸ்ரீ. எஸ். எஸ். வாஸனுக்குத் தெரியும். ஆதலால் இப்படத் தயாரிப்பு விஷயத்தில் அவரே ஆரம்பம் முதல் கடைசி வரையில் கூட இருந்து கண்காணித்திருக்கிறார். அதுவும் தேசிகரின் சங்கீத விஷயத்தில் ஸ்ரீ. வாஸன் காட்டிய அக்கறை கொஞ்ச நஞ்சமல்ல. அவர் மட்டுமன்றி டைரக்டர் முருகதாஸாவும், பாபநாசம் சிவனும் அலாதியான உத்ஸாகத்துடன் உழைத்தார்கள். இவர்களுடைய உத்ஸாகமும், உழைப்பும் வீண் போகவில்லை. ஜெமினி நந்தனார் முந்தின இரண்டு நந்தனார்களையும்விட கலை அம்சத்தில் சிறந்த படமாக அமைந்துவிட்டது.

நந்தனார் படத்தின் சங்கீத விஷயத்தில் ஜெமினி செய்திருந்த ஆராய்ச்சி போற்றத்தக்கது. நடிப்பும் பாட்டும் இணைபிரியாத நண்பர்களாக்கப் பட்டிருந்தன. “சினிமாவுக்கு ஏற்றது வட இந்திய சங்கீதந்தான். கரடு முரடான கர்நாடக சங்கீதம் நடிப்பை விழுங்கிவிடும்” என்று சில ஆத்மாக்கள் சொல்லி வருவது வழக்கம். அது எவ்வளவு பொய் என்பதை இப்படம் நிரூபித்துவிட்டது. ‘உண்மையில், உணர்ச்சியுடன் நடிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டதே இந்தப் படத்தில்தான்’ என்று கூறுகிறார் பாடகரான தேசிகர்!

சங்கீத விஷயத்தில் தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை ஜனங்கள் நன்கு கவனிக்கவேண்டும் என்பதற்காகவும், அதை அவர்கள் எவ்வளவு தூரம் பாராட்டுகிறார்கள் என்பதை அறிவதற்காகவும் ஜெமினி ஒரு 10,000 ரூபாய்ப் பரிசை ஏற்படுத்தியது. “வழி மறைந்திருக்குதே”, “எனக்கும் இரங்கினான்”, “தில்லையம்பலம்” ஆகிய மூன்று பாட்டுகளைத் தேர்ந்தெடுத்து, 20 பேர்களுக்கு இந்தப் பரிசைப் பகிர்ந்து கொடுத்தனர்.

நந்தனர் படம் தேசிகரைப் புகழேணியின் உச்சியில் கொண்டுபோய் விட்டது. அதுமுதல் இன்றுவரை அவரை வீட்டில் பார்ப்பது அபூர்வமாகி விட்டது; அப்படிப் பிரயாண மும், கச்சேரிகளும்! தமிழ்நாடு பூராவிலும் அவர் அடிக்கடி கச்சேரி செய்து வருகிறார். இலங்கை பம்பாய், செகந்தரா பாத், ஹைதராபாத் முதலிய இடங்களுக்குச் சென்று கச்சேரிகள் செய்து புகழ்மாலைகளுடன் திரும்பி யிருக்கிறார். சுருங்கச் சொல்ல வேண்டுமானல், சென்ற 25 வருஷ உழைப் பின் பலனையும், புகழையும், தேசிகர் சென்ற மூன்று வருஷ காலமாக வட்டியும் முதலுமாக பெற்றுவருகிறார் என்று சொல்ல வேண்டும்.

தேசிகரின் பாட்டை ஜனங்கள் விரும்புவதற்கு பல காரணங்கள் உண்டு. இனிய கனத்த சாரீரம்; ஸ்பஷ்டமான உச்சரிப்பு: பதச் சிதைவு இல்லாமல் சங்கதிகளை அடுக்குவது இவற்ருேடு சேர்ந்த சங்கீத ஞானம்—இவைதான் முக்கிய அம்சங்கள். தேசிகர் தமிழில் பாட்டுகளைப் பாடுவதில் பேர் போனவர். தமிழ் இசை இயக்கம் தோன்றுவதற்கு பல வருஷங்கள் முன்பிருந்தே அவர் தமிழில் பாட்டுகளைப் பாடி வந்திருக்கிறார். சொல்லப் போனல், அவர் சங்கீதம் ஆரம் பித்ததே தமிழில்தானே? எல்லோரும் தெலுங்குப் பாட்டு களைப் பாடிக்கொண்டிருந்த காலத்தில் தேசிகர் சுத்தத் தமிழ்க் கச்சேரிகளைச் செய்து வந்தார். இதன் காரணமாக அவரை சங்கீதக்காரர்கள் வெகுகாலம்வரை ஒரு 'ஹரிஜன'வே நடத்திவந்தனர்!

தேசிகர் தமிழ்ப் பாட்டுகளை பெரிதும் விரும்பிப் பாடுகிரு ரென்ருலும் தெலுங்குக் கீர்த்தனைகளில் உள்ள அழகையும், உயர்வையும் குறைவாக மதிப்பிடவில்லை. அவைகளைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, தமிழ்ச் சங்கீதந்தான் உயர்ந்தது என்று கண்மூடித்தனமாக வீண்வாதம் செய்வதை அவர் விரும்பவில்லை. 'துரதிருஷ்ட வசமாக கர்நாடக சங்கீதம் தெலுங்கு பாஷையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, நாம் அதை நிராகரிப்பது சாத்தியமில்லை' என்பதே அவர் கட்சி. தேசிகர் சமீபகாலமாக தம் கச்சேரி களில் தெலுங்குக் கீர்த்தனங்களைப் பாடிவருவதைவிட இதற்கு வேறு நிரூபணம் வேண்டுமோ?

தேசிகர் தமக்கு அவகாசம் இருக்கும்போதெல்லாம் சங்கீத ஆராய்ச்சிகள் செய்துவருகிறார். அழகு மிகுந்த பழைய தமிழ்க் கீர்த்தனங்களைத் தோண்டி எடுத்து, அவைகளுக்கு வெளிக்கிளம்பாக ராகங்களில் மெட்டுகளை அமைத்துப் பிராபல்யப்படுத்தி வருகிறார். தற்போது எங்கு திரும்பினாலும் 'ஜகஜ்ஜனனீ'யாக இருக்கிறதல்லவா? இப்பாட்டைத் தேடிப் பிடித்து, மெட்டமைத்து, பாடிப் பிராபல்யப் படுத்தியவர் தேசிகர்தான்.

இப்பொழுதெல்லாம் தேசிகர் சங்கீத உலகில் 'ஹரிஜனக்' கருதப்படுவதில்லை. தற்போது அவர் முன்னணி சங்கீத வித்வான்களில் ஒருவராக விளங்கிவருகிறார். அவருடைய சங்கீதத்தை ரஸிகர்கள் அதிக ஆவலோடு கேட்டு வருகின்றனர். ரஸிகர்களும், பிரபலஸ்தர்களும் அவரை முன்பே கௌரவிக்க ஆரம்பித்து விட்டனர்.

1939-ம் வருஷத்தில் சென்னை கோகலே ஹாலில் ஸர். ஏ. டி. பன்னீர்செல்வம் முன்னிலையில் தேசிகர் ஒரு சுத்த தமிழ்க்கச்சேரி செய்தார். அவ்வமயம் தேசிகருக்கு 'இசையரசு' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

1942-ம் வருஷத்தில் பாண்டிச்சேரியில் ஒரு கச்சேரி செய்தபோது, பிரெஞ்சிந்திய கவர்னரின் அந்தரங்கக் காரியதரிசியால் 'தேவாரமணி' என்ற பட்டம் தேசிகருக்கு வழங்கப்பட்டது.

பின்னர் 1943-ம் வருஷத்தில் தருமபுரம் பண்டார சந்நிதி அவர்கள் தேசிகருக்கு 'தருமபுர ஆதீன இசைப் புலவர்' என்ற பட்டத்தை வழங்கி, அவரைத் தம் ஆதீன வித்வானாக்கிக் கொண்டார். பிறகு அதே வருஷத்தில் தேசிகர் எட்டையாபுரம் சமஸ்தான வித்வானாகவும் ஆக்கப்பட்டார். இவை தவிர அவர் பல மெடல்களையும், சங்கிலி, கோப்பை, சாதாக்கள் முதலியவைகளையும் பரிசாகப் பெற்றிருக்கிறார். அண்ணாமலை சர்வகலாசாலையின் சங்கீத போர்டில் அவர் சிறிது காலம் அங்கத்தினராகவும் பரீக்ஷகராகவும் இருந்திருக்கிறார்.

தாயுமானவர் படத்திற்கு பாபநாசம் சிவன் பாட்டமைத்துக் கொடுத்தபோது தேசிகர் அவருடன் கூடவே இருந்தார்.

சிவன் மெட்டுகள் அமைக்கும் அழகை நேரில் பார்த்த பின்னர்தான் தாமும் சொந்தத்திலேயே புதிய மெட்டுகளை அமைக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டதாம். அதற்கேற்ப தேசிகர் புதிய மெட்டுகளை மட்டுமல்லாமல், புதிய சாஹித்தியங்களையும் அமைத்திருக்கிறார். அண்ணாமலை சர்வ கலா சாலையினர் கூடிய சீக்கிரத்தில் தேசிகரால் ஸ்வரப்படுத்தப் பட்ட 50 தமிழ்க் கீர்த்தனைகளடங்கிய புஸ்தகமொன்றை வெளியிடப் போகின்றனர். அதில் தேசிகர் சொந்தமாக இயற்றிய 10 கீர்த்தனைகளும் அடங்கி யிருக்கின்றனவாம்.

தேசிகர் சைவ வேளாளர் வகுப்பில், கீலக வருஷம் (1908) ஆவணி மாதம், 11-ந் தேதி பிறந்தார். 'தேசிகர்' என்பது ஜாதிப் பட்டம். அவருக்கு 24-வது வயதில் திருமணம் நடந்தேறியது. கூடப்பிறந்த சகோதரர்கள் கிடையாது. தமக்கை ஒருவர் மட்டும் இருக்கிறார்.

தொழில், கலை விஷயங்களில் அவர் சந்தோஷப்படத் தக்க முன்னேற்றம் அடைந்திருக்கிறார் என்றாலும், அவரது குடும்ப விஷயம் துக்கத்தை அளிப்பதாயிருக்கிறது. 12 வயதான தங்கள் ஏகபுத்திரனை இரண்டு வருஷங்களுக்குள் பறி கொடுத்துவிட்ட தேசிகர் தம்பதிகளும், தேவசேனாவும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றனர்.

கறுப்பு நிறமும், கலகலப்பான சிரிப்பும், குதூகலமான சுபாவமும், பிறரிடம் விநயமும், விரோதிகளிடம் கூட வெறுப்பை வெளியிடாத சுபாவமும் பொருந்திய தேசிகர், தற்போது **திருமழிசை ஆழ்வார்** படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். இவ்வளவு நாள் சிவபக்தர்களின் வேஷங்களிலேயே தோன்றிவந்த தேசிகர், (முதலில் சிவபக்தராக இருந்து பிறகு வைஷ்ணவ ஆழ்வாராக மாறிய) திருமழிசை ஆழ்வாராகத் தோன்றுவதில் என்ன பொருத்தம் பாருங்கள்! நாமெல்லோரும் இதை மிக வரவேற்கிறோம். ஆனால் லியோ பிலிம்ஸ் ஸ்ரீ. ஜகந்நாத ஐயங்காருக்கு மட்டும் தேசிகர் வைஷ்ணவ மதத்திற்கு மாறுவது பிடிக்கவில்லை போலும்! ஆதலால் அவரை மீண்டும் ஒரு **சிவயோகி** யாக்கிக்கொண்டிருக்கிறார். தேசிகர் அடுத்தபடியாக **நக்கீரர், சாருகதாஸர்** ஆகிய படங்களில் நடிக்கப்போகிறார். இப்படங்கள் அவருக்கு அழியாப் புகழை அளிக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

# ஸி. ஹொன்னப்ப பாகவதர்

ஒரு குழந்தை பிறந்துள்ள குடும்பம்; அந்தக் குடும்பத்திற்கு ஏற்பட்ட பரம்பரைத் தொழில்; அக் குடும்பத்தின் ஏழ்மை நிலை முதலிய சூழ் நிலைகளை மனதில் வைத்துக்கொண்டு, அந்தக் குழந்தை எதிர்காலத்தில் இன்ன தொழில்தான் செய்யும் என்று சொல்லப்படும் "ஜோஸ்யம்" சாதாரணமாய் பலிக்கக்கூடியதுதான். ஆனால், ஹொன்னப்ப பாகவதர் விஷயத்தில் இந்தமாதிரி யாராவது "ஜோஸ்யம்" சொல்லியிருந்தாரானால், இன்றைய தினம் அவர் மூக்கில் விரலை வைத்து ஆச்சரியப்படவே செய்வார்.

நெசவு வேலையை பாரம்பரைத் தொழிலாகக் கொண்ட தேவாங்க ஜாதியில் பிறந்த ஹொன்னப்பாவின் குடும்பம் அந்த நாளில் பரம தரித்திர நிலைமையில் இருந்தது. அன்றாடம் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. ஐந்தாவது வயதிலேயே அவரது தகப்பனாரான சிக்கலிங்கப்பா இறந்துவிட்டதால், அவருடைய தாயார், வீடுகளில் வேலைசெய்து, அதன் மூலம் கிடைத்த சொற்ப வருவாயைக் கொண்டு ஹொன்னப்பாவையும், அவருடைய தமையனையும், இரண்டு சகோதரிகளையும் காப்பாற்றி வந்தார். தன் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு தாயார் பட்டிருக்கும் பாடு கொஞ்ச நஞ்சமல்லவாம்.

மற்ற பிள்ளைகளைப் போல் ஹொன்னப்பா பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படவில்லை. குடும்பத்தின் தாங்கமுடியாத தரித்திர நிலைமை அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆதலால் ஒரு தனவந்தரின் வீட்டில் வேலை செய்வதற்காக மாதத்திற்கு இரண்டே ரூபாய் சம்பளத்தில் அமர்த்தப்பட்டார் ஹொன்னப்பா. அந்த தனவந்தரின் வீட்டில் வேலை செய்த வண்ணமே, அவர் இரவுப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து, நான்கு வருஷ காலம் படித்து, தம் தாய்பாஷையான கன்னடத்தை எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார்.

இவ்விதமாக சுமார் ஐந்து வருஷங்கள் கடந்தபின், ஒரு நாள் அந்த தனவந்தர் அவரை ஏதோ தாறுமாறாய்ப் பேசி

விட்டாராம். ரோஷம் மிகுந்த ஹொன்னப்பா, "இனிமேல் இதுபோன்ற வேலை செய்வதில்லை" என்ற வைராக்கியத்துடன் வெளியேறி விட்டார். அவர் வேலையைவிட்ட சிறிது காலத்திற்கெல்லாம், பங்களூரிலிருந்து வந்த அவருடைய குடும்பம், அருகாமையிலிருந்த சௌடஸந்த்ரம் என்ற அவருடைய சொந்த கிராமத்திற்குச் சென்று வசிக்கலாயிற்று. கிராமத்திற்குச் சென்ற ஹொன்னப்பா தம் சகோதரருடன்கூட நெசவுத் தொழிலில் ஈடுபட்டார். அவருக்கு அப்போது வயது சுமார் 16 இருக்கும்.

ஹொன்னப்பாவுக்கு சிறு வயதிலிருந்தே சங்கீதத்தில் ஆசை இருந்து வந்தது. அவர் அடிக்கடி பஜனைகளில் சேர்ந்துகொண்டு பாடுவது வழக்கம். ஆனால், சங்கீதத்தை முறைப்படி கற்றுக்கொள்ளுவதற்கு அவருக்கு கொஞ்சமும் வசதி இல்லாமலிருந்தது. பிறகோ அந்த சங்கீதம் அவரை வலுக் கட்டாயமாய் வந்தடைந்தது எதிர்பாராத சம்பவங்களின் மூலமாகும்.

ஒரு சமயம், ஹொன்னப்பா தம் நண்பரொருவரின் கலியாணத்திற்காக பங்களூருக்கு வந்தார். அங்கு அவருடைய நண்பர்கள் தமாஷுக்காக அவருக்குப் பெண் வேஷத்தைப் போட்டு, மணப்பெண்ணின் தோழியாக நிறுத்தி குஷிப்படுத்தி விட்டனர். ஹொன்னப்பா, அங்கு சாத்வீகமாய் அமர்ந்திருந்த ஒரு மனிதரிடம் சென்று, தம் பெண் வேஷத்திற்கேற்றபடி காதல் நாடகத்தை தொடங்கினர். சிரிப்பும் குதூகலமும் அளவு கடந்து போயின. பாவம், அந்த மனிதர் பாடு திண்டாட்டமாகி விட்டது. பாட்டுக்கச்சேரி செய்ய வந்த இடத்தில் இந்த மாதிரி காதல் கச்சேரியில் ஈடுபட வேண்டி யிருக்கும் என்று அம்மனிதர் எதிர்பார்த்திருப்பாரா?

ஹொன்னப்பா சில நிமிஷங்களுக்குப் பிறகு, அந்த மனிதர்தான் அன்றைய தினம் கச்சேரி செய்ய வந்திருந்த சங்கீத வித்வான் ஸ்ரீ.என்.சம்பந்தம் பாகவதர் என்பதை அறிந்ததும் அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. தம்சிறுபிள்ளைத் தனத்தால் பெரியதோர் தவறைச் செய்துவிட்டதாக அவருக்குப்பட்டது. உடனே அந்த பாகவதர்முன் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, தம்மை மன்னிக்கும்படி வேண்டினர்.

முதலில் கோபமடைந்திருந்த சம்பந்தம் பாகவதருக்கு, மன்னிப்புக்கோரிய ஹொன்னப்பா மீது இரக்கமும், நிரந்தர மான பிரியமும் ஏற்பட்டு விட்டது. சங்கீதத்தில் ஹொன்னப் பாவுக்கு அளவுகடந்த ஆசை இருந்ததையும், அவருடைய குடும்ப நிலைமை அதை வளரவிடாமல் செய்து வந்ததையும் அறிந்த பாகவதர், எப்படியும் அவரை சங்கீதத்தில் தேர்ச்சி பெறச் செய்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்.

இந்த சம்பவம் நடந்த சிறிது காலத்திற் கெல்லாம் ஹொன்னப்பாவின் குடும்பம் மீண்டும் பங்களூருக்கே வந்து சேர்ந்தது. ஹொன்னப்பாவுக்கு சங்கீதம் சொல்லிக்கொடுக்க விரும்புவதாக அவருடைய தாயாரிடம் சம்பந்தம் பாகவதர் தெரிவித்தார். முதலில் தாயாருக்கு அதில் இஷ்டமேயில்லை. ஆனால் பாகவதரின் வற்புறுத்தலை அவரால் தட்டிக்கழிக்க முடியவில்லை.

சாதாரணமாக, சங்கீத சிக்ஷையை ஆரம்பித்துக் கொள்ளுபவர்கள்தான் வெற்றிலை பாக்கு பழம் முதலியவை களை வாங்கிக்கொண்டு வருவதும், குருவுக்கு தக்ஷிணை வைத்துக் கொடுப்பதும் வழக்கம். ஆனால் ஹொன்னப்பா விஷயத்திலோ என்றால் குருதான் இவைகளனைத்தையும் வாங்கிக் கொண்டு வந்தார்! ஹொன்னப்பா தம் குருவுக்கு அளித்த முதற் காணிக்கையோ தம் மனப்பூர்வமான அன்புதான்.

பழம் தேங்காய்களுடன் சம்பந்தம் பாகவதர் தம் சிஷ்யனை அழைத்துக்கொண்டு தம் வீட்டை அடைந்தார். அங்கு ஒரே அழுகையாக இருந்தது. அந்த வீட்டில் கூடக் குடி இருந்தவர்களின் குழந்தை ஒன்று அப்பொழுதுதான் இறந்து போயிருந்தது. இந்த சம்பவம் தாம் ஆரம்பிக்க விருக்கும் நல்ல காரியத்திற்கு சகுனத்தடையாக மட்டுமல்லாமல் சௌகரியத் தடையாகவும் இருந்ததற்காக பாகவதர் மனம் உடைந்துவிடவில்லை. எப்படியும் அந்த நல்ல நாளை நழுவவிடக் கூடாது என்ற எண்ணத்துடன் அவர் ஹொன்னப்பாவை (பங்களூர்) மாஜிஸ்ரேட் கோர்ட்டின் மைதானத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு வெட்ட வெளியில் உட்கார்ந்து கொண்டு, அவருக்கு சிக்ஷையை ஆரம்பித்துவைத்தார்!

ஹொன்னப்பாவுக்கு அப்பொழுது வயது சுமார் பதினெட்டு இருக்கும். அதுமுதல் அவர் பகல் வேளையில் நெசவுத் தொழிலையும், இரவு வேளையில் சங்கீதப் பாடங்களையும் கவனித்து வந்தார். 'ஆரம்ப விழா'வுக்கு தம் கையிலிருந்து செலவழித்தது போலவே பிறகும், சம்பந்தம் பாகவதர் தம் கைப் பணத்தைச் செலவழித்தே ஹொன்னப்பாவுக்கு சங்கீதம் சொல்லிக் கொடுத்து வந்தார். அவருக்குத் தம் சிஷ்யன்மீது விவரிக்க இயலாத அவ்வளவு அன்பு ஏற்பட்டிருந்தது.

இவ்விதம் நான்கு வருஷ சிக்ஷைக்குப் பின்னர், சம்பந்தம் பாகவதர் பங்களூரை விட்டுச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் ஹொன்னப்பாவுக்கு சிக்ஷை நிறுத்தப்பட்டது. இதன் பிறகு, தம் குருவின் குருவான பார்த்தசாரதி பாகவதரின் கதாகாலக்ஷேபங்களில் ஹொன்னப்பா கொஞ்ச காலம் பின்பாட்டு பாடிவந்தார்.

மைசூர் சமஸ்தானத்தில் பிரபலமாயிருந்த ஹார்மோனிஸ்ட் அருணாசலப்பா என்பவர் ஹொன்னப்பாவின் பாட்டால் கவரப்பட்டார். அதன் விளைவாக அவர் ஹொன்னப்பாவுக்கு சிக்ஷை சொல்லிக் கொடுக்க தாமாகவே முன் வந்தார். அவரிடம் கொஞ்ச காலம் நல்ல சிக்ஷை பெற்றபின் ஹொன்னப்பா கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தார்.

முதலில் கலியாண வீடுகளிலேயே கச்சேரிகள் செய்து வந்த ஹொன்னப்பாவை, சேலத்திலுள்ள சுகுண கான சங்கீத சபாக்காரர்கள் 1937-ம் வருஷத்தில் தியாக பிரம்ம உத்ஸவத்தில் கச்சேரி செய்ய அழைத்தனர். ஹொன்னப்பா அதன்படியே கச்சேரி செய்து அனைவரின் நன்மதிப்பையும் பெற்றார்.

இந்த சமயத்தில்தான் சேலம் சங்கர் பில்ம்ஸார் அம்பிகாபதி படத்தைத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தனர். இக் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ. அண்ணாமலை ஹொன்னப்பாவின் சங்கீதத்தைக் கேட்டுவிட்டு, அவரை மேற்படி படத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டார். அந்த சமயத்தில் ஹொன்னப்பாவுக்கு அதிகமாகத் தமிழ் பேச

வராதென்றாலும் சங்கீதம் ஒன்றின் காரணமாகத்தான் அவர் அமர்த்தப்பட்டார் என்பது கவனிக்கத்தக்கது.

அம்பிகாபதியில் உச்சிக் குடுமியுடன் ஒரு பாகவதர் கச்சேரி செய்கிறார் அல்லவா? அவர்தான் ஹொன்னப்ப பாகவதர். இதைத் தவிர, அதே படத்தில் அவர் மற்றும் இரு வேஷங்களில் தோன்றியிருக்கிறார். கச்சேரியில் அவர் பாடியிருக்கும் பாட்டும், பின்னணியில் பாடியிருக்கும் 'தேவ தேவன்' என்ற பாட்டும் பாராட்டக் கூடியவையா யிருந்த போதிலும், அப் படத்தில் அவருக்கு ஒரு தனிப் பெயர் கிடைக்கவில்லை.

ஹொன்னப்பாவின் பெயரைப்பற்றி ஒன்று சொல்ல வேண்டும். தமிழ் நாட்டிற்கு புதிதான இந்தப் பெயரை அம்பிகாபதி பட விளம்பரங்களில் பார்த்த ரஸிகர்களுக்கு வேடிக்கையா யிருந்தது. விசித்திரமா யிருந்த இந்தப் பெயர் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது உண்மைதான். ஆனால் தமிழ் நாட்டிற்குப் பழக்கமான வேறொரு பெயரை அவர் வைத்துக் கொண்டிருந்தால் அவர் இதைவிட சீக்கிரமாய் தமிழ் ரஸிகர்களின் ஆதரவைப் பெற்றிருக்க முடியும் என்று நினைக்கிறேன்.

அம்பிகாபதியில் நடித்துவிட்டு வந்த பின்னர், 1938-ம் வருஷத்தில், பங்களூரில் உள்ள எம்பயர் போட்டோ ஸ்டுடியோக்காரர்கள் ஹொன்னப்பாவின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தனர். அந்தக் கச்சேரியில் ஹொன்னப்பா பிரமாதமாய் பாடினாராம். கச்சேரிக்கு வந்திருந்த குப்பி நாடகக் கம்பெனி நடிகர்கள் ஹொன்னப்பாவைப் பாராட்டி, தங்கள் கம்பெனியில் சேர்ந்து நடிக்க வேண்டுமென்று அவரை வேண்டினர். அவருடைய குருவான அருணாசலப்பாவும் சிபார்சு செய்ததால், ஹொன்னப்பா குப்பி கம்பெனியில் சேர்ந்து, முதன் முறையாக நாடக மேடையில் தோன்றலானார். சுமார் பத்து மாத காலம் அவர் இக்கம்பெனியின் நாடகங்களில் அர்ஜுனன், கிருஷ்ணன், நாரதர் போன்ற வேஷங்களை நடித்து வந்தார்.

இந்த சமயத்தில்தான் ஹொன்னப்பாவுக்கு திருமணம் நடந்தேறியது. கலியாணத்திற்குப் பிறகு இரண்டு வருஷ

காலம் ஹொன்னப்பா தம் வழக்கமான தொழிலை நடத்திக் கொண்டு ஊரோடு இருந்துவிட்டார்.

1940-ம் வருஷத்தில் சேலம் சாதனா பிலிம்ஸார் **கிருஷ்ண குமார்** தமிழ்ப் படத்தைத் தயாரிக்க முற்பட்டனர். அவர்கள் இப்படத்தின் கதாநாயகன் வேஷத்தையே ஹொன்னப்பாவுக்கு தைரியமாகக் கொடுத்தனர். இப்படம் 1942-ம் வருஷத்தில் வெளிவந்தது. இதற்கிடையில் **சுபத்ரா** கன்னடப் படத்திலும் ஹொன்னப்பா நடித்தார். இந்தப் படம் 1941-ம் வருஷத்திலேயே வெளிவந்து விட்டது. ஆனால் இந்த இரண்டு படங்களும் அதிக வெற்றி பெறவில்லை. அதேபோல் ஹொன்னப்பாவின் உழைப்பும் போற்றக்கூடியதாய் இருக்கவில்லை.

ஹொன்னப்பாவை சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார் (1942-ல் வெளிவந்த) **சதி சுகன்யா** படத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டனர். எப்படியும் ஹொன்னப்பாவை ஒரு பிரபல நக்ஷத்திரமாக்கி விடுவதென்று டைரக்டர் டி. ஆர். சுந்தரம் கங்கணம் கட்டிக்கொண்டார். அவர் நினைத்தபடியே செய்தும் முடித்தார். முந்தின படங்கள் எல்லாவற்றையும் விட ஹொன்னப்பாவுக்கு இந்தப் படத்தில் நிறையப் புகழ் கிடைத்தது. பின்னர் ஹொன்னப்பா நடித்த **தேவகன்யா, அருந்ததி** ஆகிய படங்கள் அவரை மேலும் ஒரு படி உயர்த்தின. **பிரபாவதியில்** அவர் ஸ்திரீ வேஷத்தைப் போட்டுக்கொண்டு வெளுத்து வாங்கியிருப்பதை ரஸிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

பிறகு **ராஜராஜேஸ்வரி, பர்மா ராணி, பக்த காளத்தி** ஆகிய படங்களிலும் அவர் நடித்திருக்கிறார். **ராஜராஜேஸ்வரியில்** அவருடைய நடிப்பும், பாட்டும் புகழக்கூடியபடி கச்சிதமாய் அமைந்திருந்தன. ஹொன்னப்பா நடித்த ஒரே சமூகப் படம் **பர்மா ராணி** யாகும். ஆனால் அதில் அவருக்கு அந்த வேஷம் துளிக்கூடப் பொருந்தாமலிருந்தது. **பக்த காளத்தி** படம் பல அம்சங்களிலும் படுமோசமாய் இருந்தது. ஹொன்னப்பாவுக்கும் இப்படத்தில் வெற்றி கிடைக்கவில்லை. பின்னர் அவர் குப்பி கம்பெனியாரின் **மல்லம்மா** கன்னடப்

படத்திலும், மாடர்ன் தியேட்டர்ஸின் **சுபத்ராவிலும்,** ஜூபிடர் பிக்சர்ஸின் **ஸ்ரீ முருகனிலும்** நடித்திருக்கிறார்.

ஹொன்னப்பாவுக்கு இப்பொழுது சுமார் 29 வயதாகிறது. அவர் பிருகா பொருந்திய இனிய சாரீரத்தைப் பெற்றிருக்கிறார். அவர் **அம்பிகாபதிக்குப்** பிறகு தமிழ் பாஷையை எழுதவும், படிக்கவும் கற்றுக் கொண்டிருக்கிறார். அவர் வசனங்களைப் பேசுவது ஸ்பஷ்டமாக இல்லை என்ற குறை, படத்திற்குப் படம் குறைந்து, இப்பொழுது அநேகமாக மறைந்துவிட்டது. தற்போதைய முன்னணி நக்ஷத்திரங்களில் ஒருவராக விளங்கும் ஹொன்னப்பா எதிர்காலத்தில் மேலும் அதிகப் புகழை அடைவார் என்று தாராளமாய்க் கூறுகிறேன். அவர் கடைசியாய் நடித்துள்ள **வால்மீகி, குண்டலகேசி** ஆகிய படங்களில் அவருடைய பாட்டும், நடிப்பும் இதற்கு அத்தாட்சியாய் அமைந்திருக்கின்றன. இவ்விரு படங்களிலும் அவருடைய பாட்டில் ஒரு புது சோபை காணப்படுகிறது; நடிப்பிலும் மிக அபிவிருத்தி யடைந்திருக்கிறார். தற்போது அவர் **புல் புல்ரம்பா, வனயாபதி, கோகுலதாஸி** ஆகிய தமிழ்ப் படங்களிலும், **பக்த கும்பரா** என்ற தம் சொந்தப் படத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறார்.

# எம். கே. தியாகராஜ பாகவதர்

அதிருஷ்டம், விதி-இவைகளில் யாருக்காவது நம்பிக்கை இல்லையென்றால், அவர் தியாகராஜ பாகவதரின் வாழ்க்கையைப் படித்த பின்னர் தம் அபிப்பிராயத்தை பேசாமல் மாற்றிக்கொள்ள வேண்டியதாயிருக்கும். அதிருஷ்ட தேவதை ஒரு மனிதனை சொற்ப காலத்திற்குள் எவ்வளவு உன்னத பதவிக்கு உயர்த்த முடியும், எவ்வளவு செல்வத்தை அவனுக்கு குவிக்க முடியும் என்பதை பாகவதரின் வாழ்க்கையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அதே சமயத்தில், "விதி வலிது" என்பதையும் அவருடைய வாழ்க்கை மறுக்க முடியாதபடி வற்புறுத்திக் காட்டுகிறது.

தாம் இவ்வளவு புகழையும், பணத்தையும் சம்பாதிப்போம் என்று பாகவதரே தம் வாழ்க்கையாரம்பத்தில் கனவு கண்டிருக்கமாட்டார். மற்றவர்கள் அடைந்திராத உன்னத ஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொண்டு "சினிமாச் சக்ரவர்த்தி" யாக விளங்கிவந்த சமயத்தில் அவரை இவ்வளவு துரதிருஷ்டமும் துக்ககரமான சம்பவங்களும் பற்றிக்கொள்ளும் என்று ஜோஸிய நிபுணர்கள் கூட எதிர்பார்க்கவில்லை. "பால் பொங்கி வந்த சமயத்தில் பானை உடைந்தமாதிரி" ஆகியது அவரது வாழ்க்கை. "அவர் வாழ்ந்த வாழ்வெல்லாம் வெறும் மாயையோ" என்று நினைக்கவேண்டியதாகி யிருந்தது ஒரு சமயம்.

தியாகராஜ பாகவதரின் பூர்வீகம் மாயவரம் என்று தெரிகிறது. அவர் பிறந்ததோ தம் தாயாரின் சொந்த ஊராகிய தஞ்சாவூரில். ஆனால் அவர் சிறு பிள்ளையாக இருந்த சமயத்திலேயே அவரது பெற்றோர்கள் திருச்சிக்குச் சென்று குடியேறிவிட்டனர்.

பாகவதர் 1910-ம் வருஷம் மார்ச் மாதம் 1-ந் தேதியன்று தஞ்சை ஷராப்கடை ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின் மூத்த புதல்வராகப் பிறந்தார். பாகவதருடன் பிறந்தவர்

கள் இரண்டு சகோதரர்களும், மூன்று சகோதரிகளுமாவர். சகோதரர்களில் ஒருவரான ஸ்ரீ. கோவிந்தராஜ பாகவதரும் சங்கீதத்தில் தேர்ச்சிபெற்று, கச்சேரிகள் செய்து வருகிறார். மற்றொரு சகோதரரான ஸ்ரீ. ஷண்முகம் தற்போது தொழிற் கல்வி கற்று வருகிறார்.

பாகவதரை அவருடைய தந்தை மிகச் செல்வமாக வளர்த்துவந்தார். வழக்கம்போல பாகவதர் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். ஆனால் பாகவதருக்கோ படிப்பில் ஊக்கம் ஏற்படவில்லை. அதற்கு மாறாக அவருக்கு சங்கீதத்தில் அதிக ஆசை ஏற்பட்டது. ஆதலால் தகப்பனார் அவரை சங்கீத வழியிலேயே திருப்பிவிடத் தீர்மானித்தார். அவரே சங்கீதஞானம் உடையவரா யிருந்ததால், பாகவதருக்குத் தாமே சாதாரணத் தமிழ்ப் பாட்டுகளைச் சொல்லிக் கொடுக்கலானார்.

இவ்விதம் பாடம் கற்றுக்கொண்ட பாகவதருக்கு சங்கீதத்திலிருந்த ருசி மேலும் அதிகரித்து ஸ்திரப்படலாயிற்று. அடிக்கடி பெரிய வித்வான்களின் கச்சேரிகளைக் கேட்டு வந்ததால், தாமும் முறைப்படி சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையும் அவருக்கு ஏற்பட்டது.

ஒரு சமயம், திருச்சி மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில், காலஞ்சென்ற பிரபல வித்வான் ஸ்ரீ. நயினா பிள்ளையின் கச்சேரியொன்று நடந்தது. திருச்சி கோவிந்தசாமி பிள்ளை பிடிலும், புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்தி பிள்ளை கஞ்சிராவும், கும்பகோணம் அழகநம்பி பிள்ளை மிருதங்கமும், மன்னார்குடி பக்கிரியா பிள்ளை கொனக்கோலும், உமையாள்புரம் சுந்தரம் ஐயர் கடமும் வாசித்தனர். பெரிய வித்வான்கள் அடங்கிய இந்தக் கச்சேரியைக் கேட்டபின்தான், "நிச்சியமாய் சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானம் பாகவதரின் மனதில் வேர் ஊன்றியதாம்.

பாகவதர் தம் விருப்பத்தைத் தம் தகப்பனாரிடம் தெரிவித்தார். அவர் இஷ்டப்படியே விட்டுவிட தகப்பனாரும் இசைந்தார். தம் நண்பரான பிடில் சின்னய்யா பிள்ளையிடம் முறைப்படி சங்கீதம் கற்க ஏற்பாடு செய்தார். அப்பொழுது

பாகவதருக்கு பனிரெண்டு வயதுதானிருக்குமாம். அவர் சங்கீத ஆரம்ப சிக்ஷைகளை மேற்படி வாத்தியாரிடம் சிலகாலம் கற்றுக்கொண்டார்.

இந்த சமயத்தில், ஒருநாள், அவரும் அவரது தகப்பனுரும், தகப்பனுரின் நண்பரான ஸ்ரீ. வரதராஜுலு நாயுடு என்பவரும் திருச்சி ரஸிக ரஞ்சனி சபையாரின் நாடகம் ஒன்றிற்குச் சென்றிருந்தனர். நாடகம் ரொம்ப நன்றாக நடத்தப்பட்டது பாகவதரின் மனதில் புது எண்ணங்களை உண்டு பண்ணியது. தாமும் அவர்களைப்போல ஒரு உயர்ந்த நடிகராக வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. ஆனால் தமது விருப்பத்தைத் தந்தையாரிடம் தெரிவிக்க போதிய தைரியம் இருக்கவில்லை அவருக்கு. ஆதலால் ஸ்ரீ. நாயுடுவிடம் மெதுவாகத் தம் மனதிலுள்ளதை வெளியிட்டார் பாகவதர்.

ஸ்ரீ. நாயுடு ரஸிக ரஞ்சனி சபையில் ஒரு அங்கத்தினராக இருந்ததால் பாகவதரை நாடகமேடையிலேற்றுவது அவருக்கு சுலபமாயிருந்தது. அவர் பாகவதரை அந்த சபைத் தலைவரான ஸ்ரீ. எப். ஜி. நடேசய்யரிடம் அழைத்துச் சென்று பாடச் செய்தார். எதிர்காலத்தில் பாகவதர் நல்ல புகழை அடையக்கூடும் என்பதை அறிந்த ஸ்ரீ. ஐயர் அவரைத் தம் சபையில் ஒரு நடிகராகச் சேர்த்துக்கொண்டு பயிற்சி அளித்தார்.

இந்த சபையாரின் ஹரிச்சந்திரா நாடகத்தில் பாகவதருக்கு முதன் முதலாக லோகிதாஸன் வேஷம் கொடுக்கப் பட்டது. அந்த வேஷத்தை பாகவதர் திருப்திகரமாய் நடித்துப் பாடவே, அவர் அந்த சபையின் நிரந்தர 'பால பார்ட்' டாக ஆகிவிட்டார்.

இப்படி சிலகாலம் நடித்த பின்னர், நாடகப் பாட்டுகளைக் கற்றுக் கொள்வதற்காக பாகவதர் திருவையாற்றுக்குச் சென்றார். அங்கு பின்பாட்டு பாடிவந்த ஸ்ரீ. ராமசாமி பத்தர் என்பவரிடம் சுமார் ஒரு வருஷகாலம் நாடகப் பாட்டுகளைக் கற்றுக்கொண்டார்.

திருவையாற்றில் இருந்தபோது அவர் தியாகய்யர் உத்ஸவத்தில் நடந்த கச்சேரிகளை ஒன்று விடாது கேட்டு வந்தார்.

அதன் காரணமாக, அவருக்கு கச்சேரி செய்ய வேண்டு மென்ற ஆசை உதயமாயிற்றும். திருவையாற்றிலிருந்து பாகவதர் திருச்சிக்குத் திரும்பிச் சென்றார். அங்கு வசித்து வந்த திருநெல்வேலி ஸ்ரீ. பொன்னுவையங்காரிடம் சிஷைக்கு அமர்ந்தார். ஸ்ரீ. ஐயங்கார் பாகவதருக்கு கச்சேரி செய்யும் அளவிற்கு சங்கீதத்தைப் போதித்தார். பாகவதர் சாதாரண கச்சேரிகளை செய்யத் தொடங்கினார். இந்தக் கச்சேரிகளுக்கு ஸ்ரீ. ஐயங்காரே பிடில் வாசிப்பது வழக்கமாம்.

கொஞ்சகாலம் பாகவதர் கச்சேரிகள் செய்துகொண் டிருந்தாரென்றாலும் அவருடைய நாட்டமெல்லாம் நாடகத் தின மீதே இருந்தது. ஸ்ரீ. நரசிம்ம ஐயர் என்பவர் பாகவத ருக்கு **பாமா விஜயம், சாரங்கதாா, வள்ளித் திருமணம், நந்தனர், பவழக் கொடி, கோவலன்** போன்ற பிரபல நாடகங்களை ஆறே மாதங் களில் சொல்லிக் கொடுத்து, அவரை நாடகமேடையில் நடிக்கவும் செய்துவைத்தார்.

பாகவதர் தமிழ்நாடெங்கும் ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். சினிமாவைப்போலவே அவர் நாடக மேடையிலும் நடிப்பைவிட சங்கீதத்தில்தான் அதிகப் பெயர் பெற்று விளங்கினார். "சிவபெருமான் கிருபை வேண்டும்" என்ற பாட்டு அந்தக் காலத்தில் அவருடைய "மாஸ்டர் பீஸா"க விளங்கி வந்தது. அவருடைய பாட்டின் காரணமாக அவருடைய நாடகங்களுக்கு நிறைய வசூல் ஏற்பட்டு வந்தது.

தமிழ் நாட்டில் நல்ல புகழ் பெற்றபின், பாகவதர் இலங்கைக்குச் சென்று நாடகம் ஆடிக்கொண்டிருந்தார். அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் கூடவே சென்று, கண்ணை இமை காப்பதுபோல் அவருடைய நலன்களைக் கவனித்துவந்த அவரது தகப்பனார் இலங்கையில் காலமானார். தகப்பனாரின் செல்வப் பிள்ளையாக விளங்கிவந்த பாகவதரை இச்சம்பவம் மிகவும் கலங்கச் செய்து விட்டது.

பாகவதருக்கு சினிமாவுக்கு வருவதற்கு இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பே திருமணம் நடந்தேறிவிட்டது. அவருக்கு முறையே சுமார் 12, 10 வயது நிரம்பிய இரு பெண் குழந்தைகளும், சுமார் 6 வயதுடைய (ரவீந்திரன் என்ற பெயருடைய) ஒரு புத்திரனும் பிறந்திருக்கின்றனர்.

பாகவதரை சினிமா உலகிற்கு அழைத்து வந்து அவரை ஒரு பிரபல நடிகராக்கிய பெருமை, தமிழ் நாட்டிற்குப் பல பிரபல நக்ஷத்திரங்களை அளித்திருக்கும் டைரக்டர் கே. சுப்ரமண்யத்தையே சேரும். காரைக்குடியில் பாகவதரின் நாடகமொன்றை ஸ்ரீ. சுப்ரமண்யம் பார்க்க நேர்ந்தது. அந்த சமயம் அவர் மீனாக்ஷி பில்ம்ஸாரின் **பவழக்கொடி** தமிழ்ப் படத்தை டைரக்ட் செய்வதற்கு ஏற்பாடாகி யிருந்தது. பாகவதரை சினிமாப் படங்களில் நடிக்கச் செய்தால் அவருடைய பாட்டிற்காக படத்திற்கு நல்ல வசூல் ஏற்படும் என்பதை கண்டுகொண்டார் சுப்ரமண்யம். பாகவதரை அவர் முதன் முதலாக (1934-ம் வருஷத்தில்) **பவழக்கொடி** படத்தில் அர்ஜுனனாக நடிக்கச் செய்தார். சுப்ரமண்யத்தின் தீர்க்க தரிசனம் தவறுகவில்லை. இப்படத்தில் பாகவதரின் நடிப்பு நாடகதோரணையி லிருந்தபோதிலும், பாட்டு பட ரஸிகர்களின் மனதைக் கவர்ந்தது.

**பவழக்கொடி**யில் பாகவதருடன் எஸ். டி. சுப்புலக்ஷ்மி கதாநாயகியாக நடித்தார். நாடகமேடையில் பிரசித்தமாய் விளங்கிய இந்த ஜோடி சினிமாவிலும் பிரபலமடையத் தொடங்கியது. தங்கள் முதல் படத்தின் மூலமே இவ்விருவரும் நக்ஷத்திரங்களாகி விட்டனர்.

அடுத்தபடியாக முருகன் டாக்கீஸாருக்காக கே. சுப்ரமண்யம் **நவீன சாரங்கதரா**வைத் தயாரிக்கலானார். அவர் இப்படத்திலும் பாகவதர் - சுப்புலக்ஷ்மி ஜோடியை பிரதம பாகத்தில் நடிக்கச் செய்தார். **பவழக்கொடி**யில் அவர்களுக்குக் கிடைத்த புகழ் **சாரங்கதரா** மூலம் பன்மடங்காகப் பெருகியது. பாட்டிற்காக பாகவதரையும் நடிப்பிற்காக எஸ். டி. எஸ்.ஸையும் ரஸிகர்கள் பிரமாதமாய் புகழ்ந்தனர்.

1935-ம் வருஷத்தில் சென்னை பில்ம் வீகால் நடத்தப்பட்ட சினிமாத் தேர்தலில் படரஸிகர்கள் **நவீன சாரங்கதரா**வுக்கு மூன்றுவது ஸ்தானமே அளித்தனர் என்றாலும், இந்த ஜோடிக்குமட்டும் முதல் ஸ்தானங்களை அளித்தனர். எப்பொழுதுமே இந்த ஜோடி பிரியாமல் நடித்துவர வேண்டும் என்று ஆசை கொண்டனர். ஆனால் ரஸிகர்கள் எதிர்பார்த்தபடி நடைபெறவில்லை. **சாரங்கதரா** படம் முடிவதற்குள்ளாகவே,

பாகவதர், எஸ். டி. எஸ்., சுப்ரமண்யம் இவர்களிடையே ஏதோ மனஸ்தாபம் ஏற்பட்டதால், பாகவதர் - சுப்புலக்ஷ்மி ஜோடி பிரிந்து போய்விட்டது.

தியாகராஜ பாகவதர் தனியாகப் பிரிந்து சென்று, திருச்சி தியாகராஜா பில்ம்ஸார் தயாரித்த **சத்திய சீலன்** படத்தில் (1936-ம் வருஷத்தில்) எம். எஸ். தேவசேனாவுடன் நடித்தார். இந்தப் படம் அவ்வளவாக வெற்றிபெறவில்லை. சினிமாத் தேர்தலில் மூன்றுவது ஸ்தானம்கூட இப்படத்திற்குக் கிடைக்கவில்லை. பாகவதருக்கோ இந்தத் தேர்தலில் முதல் ஸ்தானத்திற்குப் பதில் இரண்டாவது ஸ்தானம்தான் கிடைத்தது. எஸ். டி. சுப்புலக்ஷ்மி கூட நடிக்காததால்தான் இந்தப் படமும், அதில் பாகவதரும் வெற்றிபெறவில்லை என்று ஒரு பகுதியினர் சொல்லி வந்தனர். ஆனால் இது எவ்வளவு தவறான அபிப்பிராயம் என்பதை நிரூபிப்பதற்காகத் தானே என்னமோ பாகவதர் அதன்பிறகு நடித்த படங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு புதுக் கதாநாயகியுடன் தோன்றி வெற்றி பெற்றிருக்கிறார்.

**சத்திய சீலன்** படத்திற்குப் பிறகு பாகவதர், ஓட்டத்திலும் வசூலிலும் தமிழ் நாட்டில் ஒரு புரட்சியை உண்டுபண்ணிய **சிந்தாமணி** படத்தில் நடித்தார். இந்தப் படத்தில் காலஞ் சென்ற அஸ்வத்தம்மா அவருடன் கதாநாயகியாக நடித்தார். இருவரும் அதி இனிமையாகப் பாடி நடித்திருந்தபோதிலும், இருவருடைய பாட்டுகளும் ஜனங்களிடையே மிக பிரசித்தமாயிற் றென்றாலும், **சிந்தாமணி** படத்திற்கு மட்டுமன்றி அதில் நடித்த இவர்கள் இருவருக்கும் சினிமாத் தேர்தலில் முதல் ஸ்தானங்கள் கிடைத்ததென்றாலும், ஏதோ சில காரணங்களினால் பாகவதரைவிட அஸ்வத்தம்மாவுக்கு ஓரளவு அதிகப் புகழ் ஏற்பட்டது என்பது உண்மை.

பாகவதர் மிக நுட்ப அறிவுடையவர். பொது ஜனங்களின் மனப்போக்கை நன்கு அறிந்துகொண்டார். இந்த மாதிரி தர்ம சங்கடமான நிலைமையில் இனியும் தாம் மாட்டிக் கொண்டால், தம் புகழ் மேலோங்குவதற்குத் தடை ஏற்படும் என்பதை உணர்ந்தார். ஆதலால், அதன் பிறகு நடித்த படம் எதிலும் இதுபோன்ற தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டு

விடாதபடி பாகவதர் தம் கதாநாயகிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார். பிறகு நடித்த படங்களிலெல்லாம், பாட்டிலும், படத்தின் வெற்றியிலும் பாகவதருக்கே முதல் பங்கு கிடைத்து வந்திருக்கிறது.

**சிந்தாமணி**க்குப் பிறகு பாகவதர் **அம்பிகாபதி**யில் நடித்தார். அதிக காலம் ஓடி அபரிமிதமான ஆதரவைப் பெற்ற படங்களில் **அம்பிகாபதி**யும் ஒன்றாகும். இப்படத்திற்கு வெற்றி அளித்த பல அம்சங்களில் பாகவதரின் பாட்டு முக்கியமானதா யிருந்தது.

பாகவதர் நடித்த **சிந்தாமணி**யும் **அம்பிகாபதி**யும் 1937-ம் வருஷத்திலேயே வெளிவந்தன. இந்த இரண்டு படங்களும் தமிழ்நாட்டில் சக்கைபோடு போட்டுக் கொண்டிருந்த சமயத்தில், பாகவதர் கொஞ்சகாலம் ஓய்வெடுத்துக் கொண்டுவிட்டு, தியாகராஜா பில்ம்ஸாரின் **திருநீலகண்டர்** படத்தில் நடித்தார். இந்தக் கம்பெனியில் பாகவதர் ஒரு முக்கிய பங்குதாரர் என்று தெரிகிறது.

**திருநீலகண்டர்** படத்தை காலஞ்சென்ற ராஜா சாண்டோ டைரக்ட் செய்தார். இதற்கு முந்தின படங்களிலெல்லாம் பாகவதரின் பாட்டு மிகப் போற்றப்பட்டு வந்தாலும், அவருடைய நடிப்பு சாதாரணமாகவே இருந்துவந்தது. ஆனால் ராஜா சாண்டோ எப்பேற்பட்டவரையும் சிறந்த நடிகராக்கி விடும் சக்தி உடையவரல்லவா? அவர் தம் டைரக்ஷனுக்கு உட்பட்ட பாகவதரையும் இப்படத்தில் திறம்பட நடிக்கச் செய்துவிட்டார். பாகவதர் நடித்திருக்கும் எல்லாப் படங்களிலும், **திருநீலகண்டரி**ல்தான் அவருடைய நடிப்பும், பாட்டும் உச்சஸ்தானத்தை அடைந்திருக்கின்றன என்பது என் அபிப்பிராயம். 1939-ம் வருஷத்திய சினிமாத் தேர்தலில் **திருநீலகண்டரு**க்கும் பாகவதருக்கும் முதல் ஸ்தானம் கிடைத்தது.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, பாகவதர் நடித்த **அசோக் குமார்** வெளிவந்தது. அவருடைய பாட்டுகள் வழக்கம் போலவே பிரபலமடைந்தன. ஆனால் கண்ணாம்பாவும், நாகய்யாவும் நடிப்பு விஷயத்தில் புகழைத் தட்டிக்கொண்டு போய் விட்டனர்.

**சிவகவி** படம் 1943-ம் வருஷத்தில் வெளிவந்தது. இப் படத்தின் தயாரிப்பு அம்சங்களில் பல குறைகள் காணப் பட்டன. ஆனால் இக்குறைகளை யெல்லாம் ஜனங்கள் பொருட் படுத்தாதவாறு செய்துவிட்டன — பாகவதரின் பாட்டுகள். 'வள்ளலைப் பாடும் வாயால்,' 'சொப்பன வாழ்வு' ஆகிய இரண்டு பாட்டுகளும் மிகப் பிரசித்தி யடைந்தன.

பாகவதர் கடைசியாக நடித்திருக்கும் படமான **ஹரிதாஸ்** 1944-ம் வருஷம் தீபாவளியின்போது வெளிவந்தது. சென்னையில் இப்படம் பிராட்வே டாக்கீஸிலும், இதர தியேட்டர்களிலும் இடைவிடாமல் 142 வாரங்கள் ஓடி, "அதிக வாரங்கள் ஓடிய படம்" என்று புகழ்பெற்றுள்ளது. பொதுஜனங்கள் வேறு எந்தத் தமிழ்ப் படத்திற்குமே இவ்வளவு அபரிமிதமான ஆதரவு காட்டியதேயில்லை.

**ஹரிதாஸில்** பாகவதரின் நடிப்பு வழக்கத்திற்கு மாறான ஒரு புது மோஸ்தரில் இருக்கிறது. தூய்மையை விரும்பும் கலாரஸிகர்களுக்கு அவரது புதுப்போக்கு ஏமாற்றத்தையே அளித்திருக்கிறது. ஆனால் இப்படத்தில் பாகவதரின் பாட்டு களோ குறிப்பிடத் தக்கபடி அதி இனிமையாக அமைந்திருக் கின்றன.

பாகவதர் பிராபல்யம் அடைந்ததற்கும் அவருடைய பாட்டிற்கு அதிக மௌசு ஏற்பட்டதற்கும் முக்கிய கார ணம அவருடைய குரலிலுள்ள இனிமைதான். பாட்டில் புகழ்பெற்ற பாகவதர், அப்புகழை சரிவர காப்பாற்றிக் கொண்டு நாளுக்கு நாள் அது பன்மடங்காய் வளர்வதற் காக மிகுந்த பாடுபட்டு வந்திருக்கிறார். தமக்கும், தம் குர லுக்கும் ஏற்றதான மெட்டுகளில், தகுந்தவர்களைக் கொண்டு பாட்டுகளை அமைக்கச் செய்வது; அவைகளைத் திருப்தி ஏற்படும் வரையில் ஒத்திகை செய்து கொள்ளுவது; பாட்டுப் புஸ்தகத்தின் உதவி யில்லாமலே சாகித்யங்களைப் புரிந்து கொள்ளக் கூடியபடி ஸ்பஷ்டமாக உச்சரித்துப் பாடுவது; இவைகளிலெல்லாம் அவர் பிரமாதமான சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

பாட்டு விஷயத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு ஏராளமான புகழைப் பெற்றிருக்கும் பாகவதர்

நடிப்பு விஷயத்தில் கவலையே கொள்ளவில்லை. தமக்குப் புகழையும், பொருளையும் சம்பாதித்துக் கொடுப்பதற்கு பாட்டு ஒன்றே போதும் என்று அவர் திருப்தியடைந்து விட்டார். தாம் ஒரு சிறந்த நடிகராக முடியாது என்பதை அவர் உணர்ந்திருந்தார் போலும். ஆதலால் அவர் தாம் நடித்த பாத்திரங்களுக்கு ஏற்ற முறையில் தம் வேஷத்தை மாற்றிக் கொள்ளுவதற்குப் பதில், தமக்கேற்ற பாத்திரங்களைத் தேர்ந் தெடுத்துக் கொண்டு, அவைகளைத் தம் சௌகரியத்திற் கேற்றபடி மாற்றிக்கொண்டு வந்திருக்கிறார். சுப்பையா பாக வதரின் பிரசித்தி பெற்ற சிகையலங்காரம் நாடகக்காரர்க ளுக்கு ஒரு முத்திரையாக விளங்கி வந்தது. அதுபோல பாகவதரின் சிகையலங்காரம் இப்பொழுது சினிமாக்காரர் களுக்கு ஒரு முத்திரையாகி யிருக்கிறது.

மேலே சொன்ன காரணங்களினால், பாகவதரின் நடிப்பும் தோற்றமும் எல்லாப் படங்களிலும் ஏறக்குறைய ஒரே மாதிரி யாயிருக்கிறது. ஆனால் ஒன்று சொல்லவேண்டும். அவர் தம் சாத்தியத்திற்கு மீறிய விஷயங்களில் முயற்சித்துத் தோல்வி பெறவில்லை. அதோடு திரையில் தோன்றும்போதும், நடிக் கும்போது, பேசும்போதும் வெறுப்பு ஏற்படக்கூடியபடி அவர் நடந்துகொண்டதில்லை. ஒருவரைச் சிறந்த நடிகர் என்று சொல்லுவதற்கு இவை போதாதென்றாலும், பண வசூலையே முக்கியமாகக் கருதி வந்த முதலாளிகள் பாகவதருக்குப் புதுப்புது வேஷங்களைக் கொடுக்க வேண்டுமென்றோ அவரை ஒரு உன்னத நடிகராக்க வேண்டுமென்றோ கவலை கொள்ளா மல், அவருடைய போக்குப்படியே விட்டுவிட்டனர். பாகவதர் தங்கள் படத்தில் நடிக்கச் சம்மதித்து விட்டால், அதையே ஒரு பாக்யமாகக் கருதி வந்தனர் பட முதலாளிகள். அவரது பெயரைப் போட்டு விளம்பரப்படுத்திய மறுகணமே விநியோ கஸ்தர்கள் போட்டி போட்டுக்கொண்டு முன் பணத்தைக் கொட்டி வரலாயினர். பாகவதர் நடித்த படங்களுக்கு பிரமாத மான வசூல் ஏற்பட்டு வந்ததுதான் இதற்குக் காரணம் என்று சொல்ல வேண்டுமா?

1944-ம் வருஷத்தில் பாகவதரின் புகழும், செல்வாக்கும் உச்சஸ்தானத்தை அடைந்தன. பாகவதரைத் தம் படங் களில் நடிக்கச் செய்வதற்கு பட முதலாளிகள் போட்ட

போட்டி கொஞ்ச நஞ்சமல்ல. பூராத் தொகையையுமே முன் பணமாகக் கொடுத்துவிடக்கூட அவர்கள் முற்பட்டனர். பாகவதரின் சம்பளம் ஒரு படத்திற்கு ஒரு லக்ஷ ரூபாயாக உயர்ந்தது. ஒரு லக்ஷ ரூபாயென்ன; இரண்டு லக்ஷம் கேட்டாலும் கொடுக்கத் தயாராயிருந்தனர் பட முதலாளிகள். அதுவரை ஒரு படத்தில் நடிப்பதற்கு இரண்டு வருஷங்கள் எடுத்துக்கொண்ட பாகவதர், பத்துப் படங்களில் ஏககாலத்தில் நடிப்பதற்கு ஒப்புக்கொண்டார். **ஹரிதாஸ், ராஜயோகி, ஸ்ரீ முருகன், வால்மீகி, உதயணன், பக்த மேதா, பில்ஹணன், ஜீவகன், காளிதாஸ், நம்பியாண்டார் நம்பி** ஆகியவை பாகவதர் நடிக்க ஒப்புக்கொண்ட படங்களாகும். இதுபோல பத்துப் படங்களில் ஏககாலத்தில் ஒரு நடிகர் நடிக்க ஒப்புக்கொண்டதும், ஒரு நடிகர் லக்ஷம் ரூபாய் வாங்கியதும் தமிழ்ப்பட உலகில் அதற்கு முன் நிகழாத நிகழ்ச்சியாகும். எனவே இந்த நிகழ்ச்சி தமிழ்ப்பட உலகில் பெரிய பரபரப்பை உண்டுபண்ணியது.

பாகவதரின் புகழ் உச்ச நிலையை அடைந்த அதே வருஷத்தில் அவருக்கு ஒரு பரம விரோதியும் ஏற்பட்டான். ஸி. என். லக்ஷ்மீகாந்தன் தம் 'சினிமா தூது', 'இந்து நேசன்' ஆகிய பத்திரிகைகளில் பாகவதரின் "அந்தரங்க வாழ்க்கை"யைப்பற்றி வரையறையற்ற முறையில் எழுதி தாக்க ஆரம்பித்தார். இத் தாக்குதல்கள் வலுத்த சமயத்தில்தான் பாகவதர் மேற்சொன்ன பத்துப் படங்களில் நடிப்பதற்கு ஒப்புக்கொண்டார். உலகம் ஒரு நாடகம்; நாளை நடப்பதை யாரறிவார்? புகழின் உச்சியை அடைந்த பாகவதரின் காலடியில் ஒரு அதளபாதாளம் இருந்ததை யாரும் சொப்பனங்கூடக் காணவில்லை.

லக்ஷ்மீகாந்தன் 1944ஆு நவம்பர்மீ 8-ந் தேதியன்று கத்தியால் குத்தப்பட்டு மாண்டார். 'திருவாழ்த்தான் இருந்தும் கெடுத்தான்; செத்தும் கெடுத்தான்' என்று சொல்லுவார்கள். அதுபோல லக்ஷ்மீகாந்தன் உயிருடன் இருந்ததைவிட இறந்து போனது பாகவதரை மாபெருங் கஷ்டத்தில் மாட்டிவிட்டது. டிஸம்பர் மாதம் 27-ம் தேதியன்று பாகவதர் கைது செய்யப்பட்ட செய்தி பொது ஜனங்களைத் திடுக்கிடச் செய்தது. பாகவதர் முதலில் ஜாமீனில் விடப்

பட்டார். பிறகு 1945-ம் வருடம் பிப்ரவரி மீ 12௳ ஜாமீன் ரத்து செய்யப்பட்டு, அவர் காவலில் வைக்கப்பட்டார்.

தென்னாட்டிலேயே மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணிய வழக்குகளில் இதற்குத்தான் முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். பம்பாயிலிருந்து இதற்காகவே வந்திருந்த ஸ்ரீ. கே. எம். முன்ஷியும், தென்னிந்தியாவின் பிரபல வக்கீல்களும் இவ்வழக்கின் எதிர்த்தரப்பில் வாதித்தனர். மே மாதம் 3-ந் தேதியன்று இவ்வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டதும், பாகவதருக்கு தீவாந்தர தண்டனை விதிக்கப்பட்டதும் நேயர்களுக்குத் தெரியும்.

இத் தண்டனைக்குப் பிறகு பாகவதரும் மற்ற எதிரிகளும் அப்பீல் செய்து கொண்டனர். அப்பீல் வழக்கை பிரதம நீதிபதி ஸர். லயனல் லீச்சும், நீதிபதி லக்ஷ்மணராவும் விசாரணை செய்து, இந்த அப்பீலை தள்ளிவிட்டு, தண்டனையை ஊர்ஜிதம் செய்தனர்.

பாகவதருக்கு இவ்விதம் எதிர்பாராத விதமாய் கஷ்டங்கள் ஏற்பட்டதற்காக சினிமா ரஸிகர்கள் மனம் வெதும்பினர். அவரை கருணையுடன் விடுதலை செய்ய வேண்டுமென்று கூட்டங்கள் கூட்டிக் கேட்டுக் கொண்டனர். பாகவதரின் திடீர் மறைவு படத்தொழிலில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. நிச்சியமான பணக்குவியலை அளித்து வந்த ஒரு பிரபல நக்ஷத்திரத்தை இழந்து விட்டதனால் பட முதலாளிகள் தவித்து வந்தனர்.

இதன் பின்னர், பாகவதர் பகீரதப் பிரயத்தனம் செய்து பிரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்து கொண்டார். இவ்வழக்கு 1947-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 24-ந் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. பாகவதர் சார்பாக பிரபல ஆங்கில சட்டநிபுணர் ஸ்ரீ. டி. என். ப்ரிட் வாதாடினார். கடைசியில், மார்ச் மாதம் 27-ந் தேதியன்று, இவ்வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது. இவ்வழக்கை மீண்டும் விசாரணை செய்யும்படி சென்னை ஹைக்கோர்ட்டிற்கு பிரிவி கௌன்ஸில் உத்தரவிட்டது.

இதற்கிணங்க, 1947-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 21-ந் தேதியன்று சென்னை ஹைக்கோர்ட் இவ் வழக்கை புனர்

விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. நீதிபதிகளான ஹாப் பலும், ஷஹபுதீனும் மூன்று நாட்கள் இவ்வழக்கை விசா ரணை செய்து விட்டு, ஏப்ரல் 25-ந் தேதியன்று பாகவதரை விடுதலை செய்யும் படி உத்தரவிட்டனர்.

மேற்படி விடுதலைச் செய்தி சென்னை நகரெங்கும் கண நேரத்தில் பரவி விட்டது. ஜெயில் வாயிலில் ஏராளமான பொது ஜனங்களும், சினிமாக்காரர்களும் கையில் மாலை களுடன் குழுமி விட்டனர். இரண்டு வருஷம் இரண்டு மாதம் பதின்மூன்று நாள் சிறை வசத்திற்குப் பிறகு பிற்பகல் 1 மணிக்கு பாகவதர் சிறையினின்றும் வெளிவந்தார். வெளி யில் கூடியிருந்தவர்கள் பிரமாதமாக ஆரவாரம் செய்து அவரை வரவேற்றனர். அவர்களுக் கெல்லாம் நமஸ்காரத்தின் மூலம் தம் நன்றியைத் தெரிவித்து விட்டு, பாகவதர் வட பழனியாண்டவனைத் தரிசிக்கச் சென்றார். பிறகு அன்றிரவே பாகவதர் திருச்சிக்குப் பிரயாணமானார்.

இப் புத்தகத்தின் முதற் பதிப்பில் எழுதி யிருந்தது போலவே, பாகவதர் விடுதலையடைந்ததனால் சினிமா உலகம் சந்தோஷத்தில் மூழ்கியிருக்கிறது. ஜனங்களோ அவருடைய அடுத்த படம் எப்பொழுது வரும் என்று காத்துக்கொண் டிருக்கிறார்கள்.

பாகவதர் அடுத்தபடியாக நடிக்கப் போகும் படங்களைப் பற்றி பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இருந்த போதிலும், அவர் மதறாஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார் பொரேஷனின் **பக்த மேதா** தமிழ்ப் படத்தில்தான் முதன் முதலில் நடிக்கப் போகிறார் என்று ஆதாரமான செய்தி கிடைக்கிறது. இந்த முதல் படம் எதுவானாலும் சரி; "அதற்கு ஏராளமான வசூல் ஏற்படப் போகிறது" என்று நான் ஜோஸியம் சொல்ல வேண்டுமா என்ன ?

# கிருஷ்ணன் - மதுரம்

வட இந்தியர் நமக்கு முன்பே சினிமாப் படத் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். நம்மைவிட நிறையப் படங்களை யும் தயாரித்திருக்கிறார்கள். சில அம்சங்களில் அவர்கள் நம்மைக் காட்டிலும் எவ்வளவோ முன்னேறி யிருக்கிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஆனால் ஹாஸ்ய அம்சம் ஒன்றில் மட்டிலும் அவர்கள் தமிழ் நாட்டா ருக்கு எவ்வளவோ பின்தங்கியே யிருக்கிறார்கள். இன்னும் ஒரு நூறு வருஷங்கள் போனாலுங்கூட அவர்கள் நம்மவர்களின் ஹாஸ்யச் சுவை வரம்பை எட்டிப் பிடிக்க முடியுமா என்பது சந்தேகம்தான். இத்தகைய தனி மதிப்பை தமிழ் நாட்டிற் குத் தேடிக்கொடுத்த பெருமையில் பெரும் பங்கு என். எஸ். கிருஷ்ணனைச் சேரும்.

ஹாஸ்யத்தை நடிப்பதற்கும், ரஸிப்பதற்கும் நுண் ணறிவு அதிகம் வேண்டும். நவ ரஸங்களிலும் சிறந்தது ஹாஸ்ய ரஸம். அதை நடிப்பது மிகக் கஷ்டமுங்கூட. பழங்காலத்திலிருந்தே நம் நாடக மேடையில் ஹாஸ்யம் கையாளப்பட்டு வந்திருக்கிறது. எனினும், முக்கிய நடிகர் கள் வேஷம் மாற்றிக் கொள்ளுவதற்கும், பெரிய காக்ஷிகளை மாற்றி அமைப்பதற்கும் தேவையான அவகாசத்தை அளிப் பதற்காகவுமே பெரும்பாலும் ஹாஸ்யம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் ஹாஸ்யத்தை தமிழ்ப் படங்களின் முக்கிய அம்சமாக ஆக்கி யிருக்கிறார் என். எஸ். கிருஷ்ணன். தமிழ்ப் படம் ஓடுவதற்கு ஹாஸ்யம் அத்தியாவசியம் என்று அவர் காரியத்தில் காட்டியிருக்கிறார். படம் மோசமா யிருந் தால்கூட ஹாஸ்யப் பகுதி நன்றாயிருந்தால் படத்திற்கு நிறைய வசூல் கிடைத்து விடும் என்பது சில படங்களின் விஷயங்களில் நிரூபிக்கப்பட் டிருக்கிறது. இக் காரணங்களி னால்தான் படங்களின் இதர விஷயங்களுக்காக செலுத்தும் அவ்வளவு அக்கரையை ஹாஸ்யப் பகுதி சம்பந்தமாகவும் நம் பட முதலாளிகள் செலுத்தி வருகின்றனர்.

தமிழ்ப்பட ஹாஸ்யத்திற்கு ஒரு மஹத்துவத்தையும்,

ஹாஸ்ய நடிகர்களுக்கு ஒரு கிராக்கியையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் என். எஸ். கிருஷ்ணனின் சொந்த ஊர் நாகர்கோயிலைச் சார்ந்த ஒழுகிணசேரி என்ற கிராமம் ஆகும். நாஞ்சி நாட்டு வேளாளர் குலத்தில் சுடலைமுத்துப் பிள்ளை என்பவரின் புத்திரராய்ப் பிறந்தவர் அவர். அவருடன் கூடப் பிறந்தவர்கள் ஒரு தம்பியும், நான்கு சகோதரிகளும் ஆவர். அவருடைய தகப்பனர் சில வருஷங்களுக்கு முன்பு தான் காலமானர். அவருக்குத் தாயாரும், மனைவியும், இரண்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் இருக்கின்றனர்.

என். எஸ். கிருஷ்ணனது தாய்ப்பாஷை தமிழாகும். ஆனல் வேறு வழியில்லாததால் பள்ளிக்கூடத்தில் மலையாள பாஷையையே அவர் படிக்க வேண்டியதாயிற்று. அவருக்கு இந்த பாஷையை அசல் மலையாளியைப்போல் பேசவும் தெரியும். ஆதலால்தான் அவர் ஒரு மலையாளியின் வேஷத்தை ஆர்யமாலாவில் அதி இயற்கையாய் நடிப்பது சாத்தியமாயிற்று. பள்ளிக்கூடத்தை விட்ட பின்னர் அவர் தமிழ்ப் பாஷையை தாமாகவே எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார்.

கிருஷ்ணன் அதிக காலம் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கவில்லை. அவர் குடும்பத்தின் ஏழ்மை நிலைமை அவரது படிப்பிற்குக் குறுக்கே நின்றது. அதோடல்லாமல் இளம் பிராயத்திலேயே ஏதாவது ஒரு தொழிலைச் செய்து சம்பாதிக்க வேண்டிய அவசியத்தையும் ஏற்படுத்தியது. துறுதுறுப்பு மிகுந்த கிருஷ்ணன் நாடகத்தொழிலை மேற்கொண்டார். இவர் பல நாடகக் கம்பெனிகளில் பலவித வேஷங்களைத் தரித்து நடித்திருக்கிறார் என்றாலும், அவருக்கு நாடக மேடையில் ஹாஸ்ய பாகத்தை நடிப்பதிலேயே நிறையப் புகழ் ஏற்பட்டது. ஆதலால் அவரும் அந்த வழியிலேயே தம் நடிப்பைத் திருப்பிக்கொண்டார். அவர் நடித்த கம்பெனிகளுள் கோல்டன் சாரதாம்பாள் கம்பெனியும், அவர் கடைசியாக நடித்து வந்த (டி. கே. சகோதரர்களின்) ஸ்ரீ பாலஷண்முகானந்தா கம்பெனியும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவைகளாகும்.

வடுவூர் துரைசாமி ஐயங்காரின் பிரபல நாவலான "மேனகா"வை நடிப்பதில் ஸ்ரீ ஷண்முகானந்தா நாடகக்

கம்பெனியார் புகழ்பெற்று விளங்கினர். ஆதலால், 1935-ம் வருஷத்தில் திருப்பூர் ஷண்முகானந்தா டாக்கீஸார் இந்தக் கதையை சினிமாப் படமாகத் தயாரிக்க முற்பட்டபோது, மேற்படிக் கம்பெனி நடிகர்களையே தங்கள் படத்திற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இந்த நடிக கோஷ்டியில் ஒரு வராயிருந்த என். எஸ். கிருஷ்ணனுக்கும் சினிமாவில் முதன் முதலாக நடிக்க இப்படத்தில் சந்தர்ப்பம் வாய்த்தது.

**மேனகா** படத்தில் கிருஷ்ணன் சாமா ஐயரின் பாத்திரத்தை ஏற்று நடித்திருக்கிறர். முதல் படத்திலேயே அவர் ரஸிகர்களின் 'பேஷ்' களையும், 'பலே, பேஷ்' களையும் பெற்று விட்டார். "அடி, பெருந்தேவி! வராகசாமி வந்துடுவன். அதுக்குள்ளே நம்ம காரியத்தை முடிச்சுக்கணும். பணத்தை எங்கிட்டகுடு. பணம், என் பணம்....மாதிரி பார்த்துக்கறேன்!" என்ற சம்பாஷணைகளைக் கேட்கும்போது கொட்டகை அதிர்ந்து போகும்.

**மேனகா**வுக்கு ஏராளமான வசூலும், டி. கே. சகோதரர்களுக்கும், என். எஸ். கிருஷ்ணனுக்கும் அசாத்தியமான புகழும் கிடைத்தன. எனினும் டி. கே. சகோதரர்கள் உடனடியாக படங்களில் நடிக்காமல் மீண்டும் நாடகத்தில் ஈடு பட்டனர். ஆனல் என். எஸ். கிருஷ்ணனுக்கு மீண்டும் நாடகத்திற்கே போக இஷ்டமில்லை. சினிமாவில் நடிப்பதன் மூலம் தமக்கு அதிக கீர்த்தியும் சம்பாத்தியமும் கிடைக்கும் என்பதை மனக் கண்முன் கண்டார் கிருஷ்ணன். அதன் விளைவாக டி. கே. சகோதரர்களின் கம்பெனியிலிருந்து விலகி, நாடகத் திற்குப் பதில் சினிமாவைத் தம் தொழிலாக ஆக்கிக் கொண்டார். **சதி லீலாவதி, சந்திரகாந்தா, வசந்த சேனு** ஆகிய மூன்று படங்களில் நடித்ததும், மனக் கண்முன் தாம் கண்ட நிலைமையை, கிருஷ்ணன் நிஜக் கண்ணலேயே பார்க்க முடிந்தது. அவருடைய ஹாஸ்ய நடிப்பை சினிமா ரஸிகர்கள் மிக விரும்பத் தொடங்கினர்.

**வஸந்த சேனு**வில் நடித்துக் கொண்டிருந்தபோது கிருஷ்ணனின் வாழ்க்கையிலும், தொழிலிலும் ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. டி. ஏ. மதுரம் முதன் முதலாக இப்படத்தில் தான் அவருடன் ஜோடி சேர்ந்தார். மதுரம் அதற்கு

முன்பாகவே ரத்னவளியில் தோழி வேஷத்தில் நடித்திருக்கிறார் என்பது அநேகருக்குத் தெரிந்திருக்காது. வஸந்தசேனவில் இவர்களுடைய ஜோடி ஹாஸ்யம் ரஸிகர்களின் கவனத்தை அதிகமாக கவர்ந்துவிடவில்லை. இருந்தபோதிலும் இந்த ஜோடி மீண்டும் துளஸிதாஸில் தோன்றியதும் ரஸிகர்களின் கவனம் அவர்கள்பால் திரும்பியது. பிறகு, அம்பிகாபதியில் இருவரும் தனித்தனியாக நடித்தனர். இருவருக்கும் தனித் தனியாக நிறையப் புகழ் கிடைத்தது. அம்பிகாபதி படம் மதுரத்தின் நடிப்புத் திறமையை நன்கு விளக்கிக் காட்டியது. தமக்கு ஏற்ற ஜோடி மதுரம்தான் என்று கிருஷ்ணன் தீர்மானித்துக் கொண்டார். அதுமுதல் அவர்கள் நடித்த படங்களிலெல்லாம் அநேகமாக ஜோடியாகவே நடித்திருக்கின்றனர். நவீன தெனலிராமன் ஒரு படத்தில் மட்டும் மதுரம் இல்லாமல் கிருஷ்ணன் மட்டும் நடித்திருக்கிறார். பாண்டுரங்கா, சதி முரளி ஆகிய இருபடங்களில் மட்டும் கிருஷ்ணன் இல்லாமல் மதுரம் மட்டும்—அதுவும் ஹாஸ்யக் கலப்பற்ற பாத்திரங்களில்—நடித்திருக்கிறார். இப்படங்களில் அவருடைய நடிப்பு அவ்வளவாக சோபிக்கவில்லை. மதுரத்திற்கு ஏற்றது ஹாஸ்ய நடிப்புதான் என்பதையே இப்படங்கள் உணர்த்தின.

மதுரத்தின் சொந்த ஊர் ஸ்ரீரங்கம். தேவதாஸி குலத்தில் பிறந்தவர். அவருக்கு மூன்று சகோதரிகளும், ஒரு சகோதரரும் இருக்கின்றனர். அவருக்குப் பள்ளிகூடப்படிப்பு சொற்பந்தான். ஆனல் பால்யத்திலிருந்தே 'வெடுக், 'வெடுக்' என்று பேசும் குணத்தைப் பெற்றிருக்கிறார். அதோடு நல்ல நடிப்புத் திறமையும் உடையவர். எனவே, என் எஸ். கே. யின் தகுந்த மேற்பார்வையின்மூலம் அவர் ஹாஸ்ய நடிப்பில் இணையற்ற நடிகையாகியிருக்கிறார்.

கிருஷ்ணனும் மதுரமும் ஜோடியாக நடிக்கத்தொடங்கிய பின்னர் அவர்களது வாழ்க்கை, சம்பாத்யம், குடும்பம் முதலிய யாவற்றிலும் ஐக்கியம் ஏற்பட்டு விட்டது. மதுரத்தின் சகோதரியை கிருஷ்ணனின் சகோதரரான என். எஸ். திரவியம் மணந்து கொண்டிருக்கிறார். ஸ்ரீரங்கத்தில் உள்ள மதுரத்தின் மாளிகைக்கு 'கிருஷ்ண பவனம்' என்றும், நாகர் கோயிலில் உள்ள கிருஷ்ணனின் கிரஹத்திற்கு 'மதுர பவனம்' என்றும் அவர்கள் பெயர் கொடுத்திருப்பதானது,

அவர்களிடையே உள்ள வாஞ்சையை விளக்குவதா யிருக்கிறது. சுருங்கச் சொல்ல வேண்டுமானால், அக்காலத்திய கிட்டப்பா—சுந்தராம்பாள் ஜோடியையே ஞாபகப்படுத்துவதாக இருக்கிறது.

அம்பிகாபதி படத்திற்குப் பிறகு கிருஷ்ணன, மதுரம் இருவருக்கும் நல்ல மௌஸு ஏற்பட்டது. அந்த மௌஸு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போயிற்று. இந்த ஜோடி, நக்ஷத்திர மதிப்பையும் அடைந்தது. படத்தின் வசூலுக்கு இவர்கள் நடிப்பு பேருதவியாகிவிட்டது. படுத்துப் போகவிருந்த பல படங்களை இவர்களது ஹாஸ்யம் கைதூக்கிவிட்டு, அவைகளுக்குப் பண வசூலை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. நாளடைவில் படத்திற்கு வெற்றி அளிக்கும் அம்சங்களில் ஒன்றாகிவிட்டது கிருஷ்ணன்—மதுரம் ஹாஸ்யம். அதனால் படம் தயாரிக்க முற்பட்ட அத்தனை பட முதலாளிக்கும் கிருஷ்ணன்—மதுரம் ஹாஸ்யத்தை நாடினர். அவ்வளவு பேருக்கும் அவர்கள் மறுக்காமல், ஹாஸ்ய பாகங்களை நடித்துக் கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

கிருஷ்ணன்—மதுரம் ஜோடியைப்போல தமிழ்நாட்டில் பல ஹாஸ்ய ஜோடிகள் தோன்றியிருக்கின்றன. ஆனால் இந்த ஜோடியைப்போல வேறு எதுவும் வெற்றியும், ஆதரவும் பெறவில்லை. இதுவரை இந்த ஜோடி சுமார் 60 படங்களில் நடித்திருக்கிறது. இவ்வளவு அதிகமான படங்களிலும், அதுவும் மிகுந்த வெற்றியுடனும் தோன்றியிருக்கும் தனிப்பெருமை இவர்களையே சாரும்.

என். எஸ். கிருஷ்ணன் இதுவரை சுமார் 60 படங்களில் நடித்திருக்கிறார். அப் படங்களின் ஜாபிதாவைக் கீழே தந்திருக்கிறேன்:—

1. மேனகா
2. சதி லீலாவதி
3. சந்திரகாந்தா
4. வசந்தசேனா
5. பக்த துளசிதாஸ்
6. அம்பிகாபதி
7. தக்ஷயக்ஞம்
8. நவீன தெனாலிராமன் (கிருஷ்ணன் தூது)
9. கொழுக்கட்டை
10. மாணிக்கவாசகர்
11. மாயா மச்சீந்திரா
12. ராமலிங்கஸ்வாமிகள்
13. ஆனந்தாஸ்ரமம்
14. ரம்பையின் காதல்
15. திருநீலகண்டர்
16. பொம்மி கல்யாணம் (சத்திய சீலன்)

17. பிரகலாதா
18. சிரிக்காதே
19. நவீன விக்ரமாதித்தன்
20. புத்திமான் பலவான்
21. பரசுராமர்
22. உத்தம புத்திரன்
23. பூலோ ரம்பை
24. மணிமேகலை
25. சகுந்தலை
26. சீதா ஜனனம்
27. அலிபாபா
28. அசோக் குமார்
29. இழந்த காதல்
30. சந்திரஹரி
31. ஆரியமாலா
32. கிருஷ்ண பிடாரன்
33. பிருதிவிராஜன்
34. ஆராய்ச்சிமணி
35. கண்ணகி
36. மனோன்மணி
37. ஏமாந்த சோணகிரி
38. காளமேகம்
39. கிழட்டு மாப்பிள்ளை
40. கதம்பம்
41. தாசிப் பெண்
42. பாக்யலக்ஷ்மி (தெலுங்கு)
43. சிவகவி
44. ஜெகதலப்ரதாபன்
45. குபேர குசேலா
46. மஹா மாயா
47. பர்த்ருஹரி
48. அருந்ததி
49. பூம்பாவை
50. மங்கம்மா சபதம்
51. ஹரிச்சந்திரா (ஜெமினி)
52. பிரபாவதி
53. ஹரிதாஸ்
54. பர்மா ராணி
55. ராஜராஜேஸ்வரி
56. சாலிவாஹனன்
57. பரஞ்ஜோதி
58. சௌ சௌ
59. ஸ்ரீ வள்ளி
60. பக்த காளத்தி

கிருஷ்ணன்—மதுரம் ஹாஸ்யம் அநேகமாக எல்லாப் படங்களிலுமே ஜனங்களுக்குத் திருப்தி ஏற்படுத்தி வந்திருக்கிறது. ஆரம்பத்தில் கிருஷ்ணனிடம் நாடக மேடை கோரணிகளும், அங்கச் சேஷ்டைகளும் காணப்பட்டன. அவற்றை அவர் நாளடைவில் திருத்திக்கொண்டு விட்டார். கோணங்கிகள் குறையவே அவரது நடிப்பில் உயர்ந்த ஹாஸ்ய நடிகருக்குரிய லக்ஷணங்கள் குடிகொள்ள ஆரம்பித்தன. தூய ஹாஸ்யத்தை விரும்பும் படித்தவர்களைக்கூட அவரது நடிப்பு கவரலாயிற்று. ஹாஸ்ய எழுத்தாளர்கள்கூட அவரது கற்பனையைக் கண்டு மெச்சினர். பொது ஜனங்களின் ஆதரவோ அளவு கடந்து போய்விட்டது. இந்த ஜோடி திரையில் தோன்றும்போதே கொட்டகையில் ஒரு கலகலப்பும், குதூகலமும் ஏற்படும் அளவிற்கு அவர்களுடைய அபிமானம் அதிகரித்திருக்கிறது. கடைசியாக நடித்திருக்கும் சில படங்களில், வேறு சில காரணங்களினால், இவ்விருவரது நடிப்பு மிக சாதாரணமாகவே இருந்தது. என்றாலும்

கூட, அதற்காக ஜனங்கள் அவர்களுக்குக் காட்டிவந்த ஆதரவு குறைந்து போய்விடவில்லை.

கிருஷ்ணன் மதுரம் கோஷ்டியார் நடித்திருக்கும் படங்களுள், **திருநீலகண்டர், சகுந்தலை, அசோக் குமார், ஆர்யமாலா, கண்ணகி, மனோன்மணி, மங்கம்மா சபதம்** ஆகியவற்றில் அவர்களுடைய நடிப்பு மிகமிகப் போற்றப்பட்டு வருகிறது. கிருஷ்ணனின் கற்பனையிலிருந்து உதித்துப் பிரபலம் அடைந்திருக்கும் "அடிப்பியோ? ஞொப்பன் மகனே!", "ஐயோடா!", "என்ன ஆச்சரியம்!" "இவரு சொன்னு சொன்னதுதான், எவரு?" — இது போன்ற சினிமா "மூல வாக்கியங்களை" ரஸிகர்கள் என்றைக்கும் மறக்கவே முடியாது.

கிருஷ்ணன் பள்ளிப் படிப்பில் குறைந்தவரே தவிர அறிவில் சிறந்தவர். பத்திரிகைகளிலும், புஸ்தகங்களிலும் காணப்படும் ரஸமான ஹாஸ்ய சம்பவங்களையும் துணுக்குகளையும் அவ்வப்போது குறித்து வைத்துக்கொள்ளுவார். அதோடு தினசரி வாழ்க்கையில் இயல்பாக ஏற்படும் சம்பவங்களையும், பேச்சுகளையும் கவனித்து வைத்துக்கொண்டு, அவற்றிற்கு நகாஸ் கொடுத்து, தகுந்த சந்தர்ப்பங்களில் அவைகளைப் படங்களில் புகுத்திவிடுவார். ஆங்கில ஹாஸ்யப் படங்களை அடிக்கடி பார்த்து வருவார். இப்படியெல்லாம் அவர் இடைவிடாத முயற்சியில் ஈடுபட்டிருந்ததனால்தான் அவரது நடிப்பு நாளாவட்டத்தில் விருத்தி அடைந்திருக்கிறது; மற்ற ஹாஸ்ய நடிகர்களைவிட அவருக்கு அதிக பொதுஜன ஆதரவும் ஏற்பட்டிருக்கிறது.

கிருஷ்ணன் வெறும் நடிகர் மட்டுமல்ல. படத்தொழிலின் பல விஷயங்களிலும் அவருக்கு நல்ல ஞானமுண்டு. கதையையும், கதைக்கேற்ற ஹாஸ்ய சம்பவங்களையும், அதற்கேற்றபடி சம்பாஷணை, பாட்டு முதலியவைகளையும் அவரே அமைத்துக் கொள்ளுவார். இது முடிந்ததும் தம் கோஷ்டியாரோடு வீட்டிலேயே திருப்தி ஏற்படும் வரையில் பன்முறை ஒத்திகை பார்த்துக்கொள்ளுவார். அவருடைய கோஷ்டி 'ஸெட்'டுக்கு வந்துவிட்டதானல், உடனே கேமிரா ஓட வேண்டியது ஒன்று தான் பாக்கியாயிருக்கும். வந்ததும் போனதுமாக, பட முதலாளிகளுககு சிரமமே கொடுக்காமல், தம் பாகத்தைக் கச்சிதமாக நடித்துக் கொடுத்துவிட்டுப்

போய்விடுவார்கள். இவ்வேற்பாடு பட முதலாளிகளின் சிரமத்தையும், செலவையும் வெகுவாகக் குறைத்தால், கிருஷ்ணன் தம் பாகங்களைத் தாமே டைரக்ட் செய்து கொள்ளும்படி விட்டுவிட்டனர். இப்படி விட்டுவிட்டது இருதரப்பினருக்கும் நல்ல பலனை அளித்தது.

கிருஷ்ணன் பொறுப்பு மிக்கவர். பிறருடைய கஷ்டங்களைக் கவனித்து நடப்பவர். ஆதலால் குறித்த காலத்தையும், சொன்ன சொல்லையும் அவர் தவறிவிட்டதில்லை. குறிப்பிட்ட நேரத்தில், சகல முன்னேற்பாடுகளுடனும் கிருஷ்ணன் 'ஸெட்'டில் ஆஜராகிவிடுவார். வாங்கும் காசுக்கு உண்மையாக உழைக்கவேண்டும் என்ற கொள்கையை அவர் தீவிரமாகப் பின்பற்றி வந்திருக்கிறார். அதோடு, "நடிப்பதாக வாயால் சொல்லிவிட்டாலே போதும், கிருஷ்ணன் நடித்து விடுவார்" என்ற நம்பிக்கைக்கும் அவர் பழுது ஏற்படும்படி நடந்து கொண்டதில்லை. முன்பு அவர் கைது செய்யப்பட்டு ஜாமினில் விடப்பட்டிருந்த சமயத்தில்கூட, தாம் நடிப்பதாக ஒப்புக் கொண்டிருந்த படங்களின் முதலாளிகளை கோயமுத்தூருக்கு வரவழைத்து, தம் பாகங்களை நடித்துக் கொடுத்திருக்கிறார். இத்தகைய அருங் குணங்களைப் பொதுவாக இதர தமிழ் நடிகர்களிடம் காண்பது அரிது.

கிருஷ்ணன் படாடோபமற்ற நடையுடை பாவனைகளும், தம்மை அண்டினவர்களிடம் அன்பும் கொண்டவர். இந்த "நகைச்சுவை அரசர்" தம் பரிவாரங்களை நடத்திச் செல்வதற்கு, அதிகாரத்திற்குப் பதில் அன்பையே உபயோகித்து வந்தார். ஆதலால் அவருடைய கோஷ்டியிலிருந்த ஒவ்வொருவரும் அவருடைய திட்டத்திற்கும், நோக்கத்திற்கும் தங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பை அளித்து வெற்றியில் பங்கு கொண்டனர்.

கிருஷ்ணன் வெறும் நடிகராக மட்டும் இருந்துவிடவில்லை. அவர் "அசோகா பில்ம்ஸ்" என்ற கம்பெனியைத் தோற்றுவித்து, நவீன விக்ரமாதித்தன், புத்திமான் பலவான், அலிபாபா, சந்திரஹரி, இழந்த காதல் ஆகிய படங்களைச் சொந்தமாகவே தயாரித்து வெளியிட்டிருக்கிறார். தனி காமிக் படங்களாகத் தயாரிக்கப்பட்ட இவைகளுக்குத் தகுந்த பண வசூல் கிடைத்தது. இம் முயற்சியில் அவர் தொடர்ந்து ஈடுபட்டிருப்பாரானால் மேனாட்

டைப்போல தமிழ் நாட்டிலும் ஹாஸ்யத்திற்காகவே தனிப் படங்களைத் தயாரிக்க நம் படமுதலாளிகள் துணிந்திருப்பார்கள்.

தமிழ்ப்பட உலகிற்கு கிருஷ்ணன் செய்திருக்கும் சிறந்த ஊழியங்களை யெல்லாம் குறிப்பிடுகையில், அவர் விளைவித்திருக்கும் ஒரு ஹானியையும் எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. தமிழ்ப் படங்களில் ஒரு கதைக்கு உபகதை ஏற்படுத்துவதென்ற அசம்பாவிதம் கிருஷ்ணனால்தான் ஊர்ஜிதம் செய்யப்பட்டது என்று சொல்லவேண்டும். தமிழ்ப் படங்கள் நேரான வழியில் சென்று கலை அம்சங்களில் முன்னேறாமல் செய்திருக்கிறது—இந்த உபகதை வழக்கம். பிரதம கதைகளின் போக்கையும், தாத்பரியத்தையும் இந்த உபகதைகள் பல படங்களில் சிதைத்திருக்கின்றன. சில பட முதலாளிகள் தங்கள் பிரதம கதைகளை உபகதைகள் போலவும், உபகதைகளைப் பிரதம கதைகள் போலவும்கூட மாற்றியுள்ளனர்! பண வசூலையே முக்கியமாகக் கருதிவந்த முதலாளிகள் கிருஷ்ணனுடைய திறமைகளையும், அவருக்கிருந்த பொதுஜன ஆதரவையும் தவறான வழிகளில் பயன்படுத்தி வந்தனர். கிருஷ்ணன் இதை உணர்ந்திருந்தும் உடைந்தையாகவே இருந்திருக்கிறார். தனிப்பட்ட ஹாஸ்யப் படங்களைத் தயாரிக்க முற்பட்ட அவர், அந்த போற்றத்தக்க முயற்சியில் தொடர்ந்து ஈடுபடாதது கலை அன்பர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தையே அளித்திருக்கிறது.

சினிமாப் படங்கள் மூலம் வெகுகாலம் வரையில் ஜனங்களை சந்தோஷத்தில் ஆழ்த்திவந்த கிருஷ்ணன் கோஷ்டியார், ஜனங்கள்முன் நேரிலேயே தோன்றி உத்ஸாகம் மூட்டுவதற்கு ஒரு புது வழியைக் கண்டு பிடித்தார் கிருஷ்ணன். நந்தனார் கதையை வைத்துக்கொண்டு கிந்தனார் காலக்ஷேபத்தைத் தயாரித்தார். இந்த நையாண்டிச் சித்திரத்திற்கு ஒரு பகுதியாரிடம் மிருந்து எதிர்ப்பும், மற்றொரு பகுதியாரிடமிருந்து உத்ஸாகமான ஆதரவும் ஏற்பட்டது. "நந்தனார் போன்ற ஒரு பக்திமானையா நையாண்டி செய்வது ?" என்று கர்ஜித்தனர் எதிர்ப்பாளர்கள். ஆனால் அவர்களும்கூட 'கிந்தனார்' ஒரு சிறந்த ஹாஸ்ய விருந்து என்பதை மறுக்கவில்லை.

கிருஷ்ணன் சினிமா நடிகராக மாறிவிட்டபோதிலும் நாடகக் கலையை மறந்துவிடவில்லை. சீர்கெட்டிருந்த நாடகக் கலையை சிறப்புறச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு அந்த நாள் முதலே இருந்து வந்தது. அதற்குத் தகுந்த சந்தர்ப்பம் கிடைத்ததும், கிருஷ்ணன் என். எஸ். கே நாடகசபாவை ஸ்தாபித்திருக்கிறார். இந்த சபையினர் நவீன சாதனங்களைப் பயன்படுத்திக்கொண்டு, நல்ல முறையில் நாடகங்களை நடத்தி வருகின்றனர். இது தவிர நாகர்கோயிலில் கிருஷ்ணன் "அசோகா தியேட்டர்" என்ற ஒரு சினிமாத் தியேட்டரையும் கட்டியிருக்கிறார். இதை அவருடைய சகோதரர் நிர்வகித்து வருகிறார்.

இவ்விதமாக பல வழிகளில் தமிழர்களுக்கு உத்ஸாக மூட்டி, அவர்களைச் சிரிக்க வைத்துவந்த கிருஷ்ணனையும், மதுரத்தையும், தம் பத்திரிகைகள் மூலம் லக்ஷ்மீகாந்தன் அழவைக்கத் தொடங்கினர். லக்ஷ்மீகாந்தனின் லக்ஷியம் அவர் இறந்தபின் நிறைவேறிவிட்டது. கிருஷ்ணன் மதுரம் மட்டுமல்ல; அவர்களுடைய லக்ஷக்கணக்கான அபிமானிகளும் அழுதுகொண்டிருக்கும்படிச் செய்து விட்டார் அவர்.

"லக்ஷ்மிகாந்தன் கொலை வழக்கி"ல் கிருஷ்ணன் சிறை சென்ற பின், அவருடைய கோஷ்டியிலிருந்தவர்கள் தனித் தனியே படங்களில் நடித்துத் தங்கள் ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ள வேண்டியதாயிற்று. கிருஷ்ணனைப் பிரிந்த ரஸிகர்கள் மதுரத்தையாவது படத்தில் பார்ப்பதற்காகத் துடித்தார்கள். ஆனால் மதுரமோ பல மாதங்கள் வரை துக்கத் திலாழ்ந்திருந்தார். கடைசியில் சில மாதங்களுக்கு முன் மதுரம் தம் தீர்மானத்தை மாற்றிக்கொண்டு, என். எஸ். கே. நாடக சபையாரின் "பைத்தியக்காரன்" நாடகத்தில் நடித்தார். அது மட்டுமல்ல; பைத்தியக்காரன் தமிழ்ப் படத்திலும் இப்பொழுது நடித்து வருகிறார்.

இதற்கிடையில் பாகவதர்-கிருஷ்ணன் பிரிவி கௌன்ஸில் அப்பீல் வழக்கு 24—2—47-ந் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும், பின்னர், மார்ச் 27-ந் தேதி யன்று இவ்வழக்கை புனர்விசாரணை செய்யும்படி சென்னை ஹைகோர்ட்டிற்கு உத்தரவிடப் பட்டதும், முடிவில், 25—4—47-ந் தேதி யன்று புனர்விசாரணைக்குப் பிறகு பாக

வதரோடு கூட கிருஷ்ணனும் விடுதலை அடைந்ததும் நேயர்களுக்குத் தெரிந்த விஷயங்களே.

கிருஷ்ணன் ஹாஸ்யச் சுவை மிகுந்தவராதலால் ஜெயில் வாசத்தையும் அவர் ஒரு ஹாஸ்யமாகவே கருதி வந்தாராம்! எனவே, அவர் விடுதலையடைந்த சில மணி நேரங்களுக்குள்ளாகவே சிற்றுண்டி விருந்துகளிலும், பொதுக் கூட்டங்களிலும் சகஜமாகக் கலந்துகொண்டு விட்டார். அதுமட்டுமல்ல; தம் சொந்த பில்ம் கம்பெனி தயாரித்துக் கொண்டிருக்கும் "பைத்தியக்காரன்" தமிழ்ப் படத்திலும் இப்பொழுது மும்மரமாக நடித்து வருகிறார்.

என். எஸ். கிருஷ்ணன் சிறை சென்றதும் சினிமாவுலகில் ஹாஸ்யமே சிறை சென்றுவிட்டது போலிருந்தது. ஆகவே அவருடைய விடுதலை ஹாஸ்ய விடுதலைதானே! இனி வழக்கம்போல் பல படங்களில் என். எஸ். கே. பங்கெடுத்துக் கொள்ளுவார் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இனிமேலாவது அவர் வழக்கமான உபகதை ஹாஸ்யத்தை விட்டுவிட்டு, புதிய மாதிரியான ஹாஸ்ய விருந்தை அளிக்க முற்பட்டாரானால், தமிழ்ப் படங்கள் ஒரு தனிப் புதுவழியில் முன்னேறுவதற்கு உதவியா யிருக்கும்.

# நவாப் எம். கே. ராதா

"மிஸ்டர் ராதா! நீங்கள் எந்தப் படத்தில் மிகத் திறமையுடன் நடித்திருக்கிறீர்கள்?" என்று எம். கே. ராதாவிடம் கேட்டேன். தாம் நடித்திருக்கும் படங்களின் பெயர்களில் ஏதாவது ஒன்றைக் குறிப்பிடுவார் என்றே நான் எதிர்பார்த்தேன். ஆனால் கிடைத்தது என்னமோ நான் எதிர்பார்க்காத பதிலாகும்: "நான் மிகத் திறமையாக நடித்த படம் இனிமேல்தான் தயாராக வேண்டும்" என்று கூறினர்.

இந்த பதிலைக் கேட்டதும் நான் ஆச்சரியப் படவில்லை. ஏனென்றால், "கலையோ பெரிது; வாழ்வோ சிறிது" என்ற தத்துவத்தைத் தாம் எந்தக் காலத்திலும் மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் என்று நினைக்கிறேன, அவர் இப் பொன் மொழியை தம்முடைய கடிதத் தாளில் அச்சடித்து வைத்துக் கொண்டிருக்கிறார். முன்னேற்றம் அடைய விரும்பும் ஒரு கலைஞன் தன் இறந்தகால சாதனைகளைக் குறித்தே சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்க மாட்டான். செய்திருப்பதைவிட செய்யப் போவதே சிறந்தது என்று அவனுக்குத் தோன்றும். ராதா அதி பால்யம் முதலே இடைவிடாமல் நடிப்புக் கலைக்கு சிறந்த சேவை புரிந்து வந்திருக்கிறார். இருந்த போதிலும் தாம் செய்திருப்பது சொற்பமே என்று கூறுவதிலிருந்து அவருக்கு இக் கலையில் எவ்வளவு ஆர்வம் இருக்கிற தென்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

ராதாவின் தகப்பனரான ஸ்ரீ. எம். கந்தசாமி முதலியாரே ஒரு நடிகர். முதலியாருக்கு பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே நடிப்புக் கலையில் ஆசை ஏற்பட்டுவிட்டது. அடிக்கடி நாடகங்களில் நடித்து வந்தார். பள்ளிக்கூடத்தை விட்டதும் ஏதோ ஒரு ஆபிஸில் கொஞ்ச காலம் வேலையிலிருந்தார். பிறகு ஒரு சர்க்கஸ் கம்பெனியில் சிலகாலம் மேனேஜரா யிருந்தார். ஆனல் இந்த உத்தியோகங்கள் அவருக்குப் பிடிக்கவில்லை.

இந்த உத்தியோகங்களை விட்டபின், ஸ்ரீ. முதலியார்

சென்னை சுகுண விலாஸ சபாவில் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்து, ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியாருடன் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். பின்னர் ஸ்ரீமான்கள் ஜெ. ரெங்கராஜு, சம்பந்த முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் ஆகியவர்களால் எழுதப்பட்ட நாவல்களை அவர் நாடகத்திற்கு ஏற்றபடி தயாரித்துக் கொடுத்து, அவற்றில் தாமும் நடித்துவந்தார். இந்த ஊழியத்தை அவர் பிறகு பல பழைய தமிழ் நாட்டு நாடக கம்பெனிகளுக்கும் செய்திருக்கிறார். இன்றைய தினம் சமூக நாடகங்கள் நடிக்கப்படுகிறதென்றால், அதற்கு அஸ்திவாரத்தை பலப்படுத்திய பெருமை ஸ்ரீ. முதலியாரைச் சேரும். நாடகக் கலைக்கு அவர் மறக்க முடியாத தொண்டு செய்திருக்கிறார். அவரால் பயிற்றுவிக்கப்பட்ட நடிகர்கள் இன்று தமிழ் நாட்டில் அநேகர் இருக்கின்றனர்.

புலிக்குப் பிறந்தது பூனையாகிவிடுமா? ராதாவும் தம் தகப்பனாரின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி, சிறுவனாக இருந்த போதே நாடக மேடைமீது ஏறி நல்ல புகழ் சம்பாதித்துக் கொண்டு, இப்பொழுது பிரபல சினிமா நடிகராக விளங்கி வருகிறார். அவருடைய தாயாரான கமலாம்பாளுக்கு சிக்ஷையுடன் கூடிய சங்கீத வித்வத் உண்டாம். அவர் பாட ஆரம்பித்ததும் பையன் ராதா ஒரு பெட்டியை எடுத்து வைத்துக் கொண்டு மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்து விடுவானும். இவ்விதமாக ராதாவுக்கு இயற்கையாகவே சங்கீதத்தில் ருசி ஏற்பட்டது.

வழக்கம்போல அவர் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். ஆனால் அதில் வழக்கத்திற்கு மாறான விஷயம் என்னவென்றால், அவரது தாய் பாஷை தமிழாயிருந்த போதிலும், அவர் ஒரு தெலுங்குப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டதுதான். அந்தப் பள்ளியில் சில வகுப்புகள் படித்த பின், சென்னை ஹிந்து தியாலாஜிகல் ஹைஸ்கூலில் சேர்ந்து மூன்றாவது பாரம் வரையில் படித்தார் ராதா. அதோடு அவரது படிப்பு முற்றுப்பெற்றது.

ராதா பிறப்பதற்கு முன்பே அவருடைய தகப்பனார் மும்முரமாக நாடகங்களில் ஈடுபட்டிருந்தார். எனினும், அவரும் சரி; அவருடைய மனைவியும் சரி; குழந்தை ராதா நாடகங்

களில் ஈடுபடுவதை விரும்பவில்லை. ஆனால் ராதாவுக்கோ நடிப்பில் அபார ஆசை இருந்தது. இதை மாற்றுவதற்காக ஸ்ரீ. முதலியார் ஒரு தந்திரம் செய்தார். தெலுங்கு துருவ நாடகத்தின் வசனங்களைக் கொடுத்து அதைப் பாடம் பண்ணச் சொல்லிவிட்டு வெளியூர் சென்றார். திரும்பி வந்ததும் ராதா (எதிர் பார்த்ததற்கு மாறாக!) தம் பாடங்களை சரியாக ஒப்பித்து விட்டார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஹாட்டன் கம்பெனி பங்குதாரர் ஒருவர், தாம் வரவழைத்திருந்த பி. ஜெகன்னாதய்யர் கம்பெனியில் ராதாவை நடிக்கச் செய்தார். ராதா முதன் முதலில் நடித்தது தெலுங்கு துருவ நாடகத்தில்—துருவன் வேஷத்தில்தான். முதல் நாடகத்திலேயே அவருக்கு உத்சாகம் அளிக்கும் வெற்றி கிடைத்தது.

ராதாவின் பதினோருவது வயதில் அவருடைய தாயார் இறந்தார். அதே சமயத்தில் அவருடைய தேக அசௌக்கியம் காரணமாக படிப்பும் முற்றுப்பெற்றது. அவருக்கு படிப்பைவிட நடிப்பில் அதிக ஆசை இருந்ததை அறிந்து கொண்ட அவருடைய தகப்பனார், அவரை 1921-ம் வருஷத்தில் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் ஒரு பால நடிகனைச் சேர்த்துவைத்தார். ஆரம்பத்தில் ராதா அந்தக் கம்பெனியில் ஆண், பெண் இரு வேஷங்களையும் நடித்து வந்தார்.

ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் மூன்று வருஷ காலம் இருந்த பின்னர், ராதா மதுரை பால ஷண்முகானந்த சபாவில் சேர்ந்து நடிக்கலானார். இந்தக் கம்பெனியில் அவர் நடித்துக் கொண்டிருந்த சமயம், எட்டையாபுரம் ராஜா இக் கம்பெனியாரை தம் சமஸ்தானத்திற்கு வரவழைத்து சுமார் மூன்று மாதகாலம் நாடகங்களை நடத்தச் செய்தார். ராதாவின் நடிப்பு ராஜாவுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்தது. ராதாவுக்கும், அவருடைய தகப்பனாருக்கும் அவர் பல சன்மானங்களை வழங்கினர்.

இக்கம்பெனியில் ராதா ஒன்றிரண்டு வருஷங்கள் இருந்த பின்னர், மீண்டும் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்தார். சமூக நாடகங்களிலும், தசாவதாரம் நாடகத்திலும் ராதாவின் நடிப்பை ஜனங்கள் புகழலாயினர். 1926-ம்

வருஷத்தில் அவர் மீண்டும் பால ஷண்முகானந்தா கம்பெனியில் சேர்ந்தார். ஆனால் அதிககாலம் அக்கம்பெனியில் இருக்கவில்லை. அக்கம்பெனியிலிருந்து விலகி 1927-ம் வருஷத்தில் 'பிரஹதாம்பாள் தசாவதார் கம்பெனி'யில் சேர்ந்து ஒரு வருஷ காலம் நடித்துவந்தார்.

ஒருசமயம் ராதாவும் அவருடைய தகப்பனாரும் மங்களூரில் ஒரு நாடகக் கம்பெனியிலிருந்தபோது, கம்பெனி முதலாளி கடனுக்காகப் பயந்து கொண்டு நடிக கோஷ்டியினரை அந்தரத்தில் விட்டுவிட்டுக் கம்பி நீட்டிவிட்டார். அதன் விளைவாக, ராதாவும் அவருடைய தந்தையாரும் தங்கள் பொருள்களை அடமானம் வைத்து நடிகர்களை ஊர் கொண்டு வந்து சேர்க்கவேண்டிய தாயிற்றும்!

1928-ம் வருஷத்தில் ராதா மலாய் நாடுகளுக்கு மொஹிதீன் என்பவரால் அழைத்துச் செல்லப்பட்டு, ஒரு வருஷகாலம் பல நாடகங்களில் நடித்துவிட்டுப் புகழுடன் திரும்பி வந்தார். பிறகு ரங்கூனுக்குச் சென்று அங்கும் பல நாடகங்களில் (சந்தானலக்ஷ்மி, சிவபாக்யம் முதலியோருடன்) நடித்துவிட்டு வந்தார். 1942-ம் வருஷத்தில் அவர் சேலம் நாகலிங்கம் செட்டியாரின் நாடகக் கம்பெனியில் சேர்ந்தார். கோல்டன் சாரதாம்பாள் கம்பெனியிலும் ராதா கொஞ்ச காலம் நடித்திருக்கிறார்.

கோல்டன் கம்பெனியைவிட்டு விலகியபின், 'டிரியோ' டி. எம். சாரதாம்பாளுடன் இலங்கைக்குச் சென்று சில நாடகங்களில் நடித்தார். அங்கு ரெங்கராஜுவின் நாவல் நாடகங்களில் நடித்ததின் விளைவாக அவருக்கு நிறையப் புகழ் ஏற்பட்டது.

இந்தியா திரும்பியதும், ராதா, பி. ராஜாம்பாள் கம்பெனியில் சேர்ந்து மிகப் பிரபல மடைந்தார். அவர் சென்னை வாசிகளின் அபிமான நடிகர் ஆகிவிட்டார். "பதிபக்தி" நாடகம் சென்னையில் முதன் முதலாக 94 நாட்கள் நடைபெற்றது. அந்த நாடகத்தில் ராதா கதாநாயகனாக நடித்து அசாத்தியமான புகழைச் சம்பாதித்துக் கொண்டார். 'குடிகாரன் வேஷத்தை நடிப்பதில் ராதா நிகரற்றவர்' என்று ஜனங்கள் புகழலாயினர். இந்த நாடகத்தை திரும்பத் திரும்பப்

பார்த்தும் அவர்களுக்கு சலிப்பு ஏற்படவில்லை. ஆனால் ராதா வுக்குத்தான் ஒரே நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தது சலிப்பை உண்டுபண்ணியது.

193 -ம் வருஷத்தில் கோயமுத்தூர் மனோரமா பிலிம்ஸார் சதி லீலாவதி படத்தைத் தாயரிக்க முன்வந்தனர். நாடகமேடையில் பதி பக்தியில் பிரபல கதாநாயகனாக விளங்கிய ராதாவை, இப்படத்தில் அதே போன்ற வேஷத்தில் நடிக்க அவர்கள் தேர்தெடுத்தனர்.

சினிமாவுக்கு அவசியமான முக அழகை ராதா பெற்றிருக்கிறார். (இன்றைக்கும் நம் நடிகர்களுள் முக அழகில் இவருக்கு முதல் மார்க் கொடுக்கலாம்.) அதோடு அவர் சதி லீலாவதி படத்தில் மிகுந்த சிரத்தையுடன் நடித்திருக்கிறார். எல்லிஸ் ஆர். டங்கன் டைரக்ட் செய்யப்பட்ட இப்படம் சிறந்த வெற்றியைப் பெற்று, ராதாவையும் ஒரு சிறந்த நடிகர் என்று எடுத்துக் காட்டியது. சமூகப் படத்திற்கு ராதாதான் மிக ஏற்ற நடிகர் என்று சினிமா ரஸிகர்கள் புகழலாயினர்.

சதி லீலாவதி காரணமாக ராதா விஷயத்தில் நாம் எதிர் பார்த்தது, பல காரணங்களினால், அடுத்தபடியாக அவர் நடித்த சமூகத் தொண்டில் ஏமாற்றமாய் முடிந்தது. அதன் பிறகு அவர் நடித்த துளஸி தாஸும், அனாதைப் பெண்ணும் அவருக்கு பிரமாதமான புகழை ஏற்படுத்தவில்லை. பின்னர் அவர் மாயா மச்சிந்திரா, சதி முரளி, பிரேம பந்தன், ராஜா கோபிசந்த், வனமோகினி, தாஸி அபரஞ்சி ஆகிய அரை டஜன் படங்களில் நடித்திருக்கிறார். இவைகளில் எந்தப் படத்திலும் அவருடைய நடிப்பு படுமோசம் என்று சொல்லக்கூடியதாக இருக்கவில்லை. தமக்கு கிடைத்த வேஷங்களை தம்மால் இயன்றவரையில் அவர் நடித்திருக்கிறார்.

கடைசியாக, ராதா கண்ணம்மா என் காதலியில் மிகத் திறமையுடன் நடித்திருக்கிறார். சீன டாக்டரின் வேஷத்தில் வரும் போது அவரது தோற்றத்தையோ, குரலையோ அடையாளம் கண்டுபிடிக்கவே முடியாது. அவர் நடித்த படங்கள் எல்லாவற்றிலுமே கண்ணம்மாவில்தான் ராதாவின் நடிப்பு மிகமிக சோபித்திருக்கிறது. தற்போது அவர் ஜெமினியின் சந்திர லேகாவில் கதாநாயகனாக நடித்து வருகிறார். ஜெமினியில் அவர்

நிரந்தர சம்பளத்தில் நடிகராக இருந்து வருவதால் அடுத்து வரும் ஜெமினிப் படங்களிலும் அவரைக் காணலாம்.

1937ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் புதுக்கோட்டையில், பி. ராஜம்மாள் கம்பெனியார் நடத்திய ராமதாஸ் நாடகத்தில் ராதா நவாபாக நடித்தார். நாடகத்திற்கு விஜயம் செய்திருந்த பிரம்மஸ்ரீ சிதம்பர பாகவதரை ராதாவின் நடிப்பு மிகக் கவர்ந்தது. அதன் காரணமாக, அவர் ராதாவுக்கு "நவாப்" என்ற பட்டத்தைச் சூட்டி, புகழ்ந்து பேசினர்.

1910ம் வருஷம் நவம்பர் மாதம் (சௌமிய, கார்த்திகை) வேளாள ஜாதியில் பிறந்தவரான ராதாவின் சொந்த ஊர் மைலாப்பூர் (சென்னை) ஆகும். ராதாவுக்கு கூடப்பிறந்தவர்கள் கிடையாது. 1933-ம் வருஷத்தில் அவருக்கு விவாஹம் நடந்தது. சதி லீலாவதி படத்தில் கதாநாயகியாக நடித்த எம். ஆர். ஞானம்பாள் அவருடைய மனைவியாகியிருக்கிறார். ஞானம்பாளுக்கு நாடகமேடை அனுபவமும் உண்டாம். சதி லீலாவதிக்கு முன் அவர் லங்கா தகனத்தில் சீதையாகவும் நடித்திருக்கிறார். ராதாவுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் இருக்கின்றனர். மூத்த பையனுக்கு தற்போது 12 வயதாகிறது.

ராதாவுக்கு ஒரு மெய்க்காப்பாளர் போல விளங்கிய அவருடைய தந்தை கந்தசாமி முதலியார் 1939-ம் வருஷத்தில் காலமானார். அந்த சம்பவம் ராதாவுக்கு மிகுந்த மன வருத்தத்தை உண்டு பண்ணி யிருக்கிறது என்று சொல்ல வேண்டுமா?

ராதா மிகுந்த தேசபக்தி உடையவர். தம் ஜோலியுண்டு தாமுண்டு என்று மிக அடக்கமாக நடந்துகொள்ளும் வழக்கம் உடையவர். படபடப்பாகப் பேசுவதையும், நடந்து கொள்ளுவதையும் அவரிடம் காணமுடியாது.

ஐந்தரை அடி உயரமுள்ள ராதாவிடம் அழகு, நடிப்பு, சுமாராகப் பாடும் திறமை ஆகிய அம்சங்கள் அமைந்திருக்கின்றன. சமூகப் படங்களில் நடிப்பதென்றால் அவருக்கு கரும்பு தின்பதுபோல. இந்தக் கரும்பு ராதாவுக்கு நிறைய கிடைக்குமானல், அவருடைய புகழ் மேலும் ஓங்கும்.

# எல். நாராயண ராவ்

கையில் அளவுச் சங்கிலியுடன் கர்ணமாக வரப்பு மேடுகளில் சுற்றிவந்து கொண்டிருக்க வேண்டியவரான எல். நாராயண ராவ் இன்றைய தினம் சினிமாவில் ஒரு பிரபல ஹாஸ்ய நக்ஷத்திரமாக விளங்கி வருகிறார். நாராயண ராவுக்குப் பதில் அவர் நடித்திருக்கும் கால் நூறுக்கதிகமான தமிழ்ப் படங்கள் தற்போது தமிழ் நாட்டை சுற்றி வந்து கொண்டிருக்கின்றன!

அவரை பால்யத்தில் ஒரு நல்ல உத்யோகத்தில் அமர்த்தி ஒழுங்கான வாழ்க்கையில் ஈடுபடச் செய்வதற்காக நாராயண ராவின் தகப்பனார் கஜகரணம் போட்டுப் பார்த்தார். ஆனால் அவருடைய பிள்ளையோ அவரைவிடப் பெரிய கரணம் போட்டு, கர்ணம் வேலையிலிருந்து விடுபட்டார்! நாராயண ராவ் விஷயத்தில், "விளையும பயிர் முளையிலே" என்பதற்குப் பதில், "வளையும் பயிர் முளையிலே" என்று சொல்லுவது தான் பொருத்தமாகும். நாடக மேடையை நாடிச் சென்ற அவருடைய வளைந்த புத்தியை அவரது தகப்பனரால் மட்டுமல்ல....கடவுளால்கூட....நிமிர்த்த முடியவில்லை!

நாராயண ராவ் 1896 ஹு மார்ச்சு மீ 21 உ சனிக்கிழமை யன்று, கரூர் சமீபமுள்ள சின்னதாராபுரத்தில் மாத்வ பிராமண ஜாதியில் பிறந்தார். அவரது தகப்பனரான ஸ்ரீ. லக்ஷ்மிநாராயண தாஸர் கதை, உபந்யாசம், பிரசங்கம் முதலியவைகளைச் செய்து வந்தார். நாராயண ராவ் தான் குடும்பத்தின் மூத்த பிள்ளை. நல்ல வேளையாக அவருடன் கூடப்பிறந்த மூன்று சகோதரர்களும் தங்கள் அண்ணா சென்ற கோணல் வழியில் கூடச் செல்லாமலிருந்தார்களே.

தகுந்த வயதில் நாராயண ராவ் முறைப்படி பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பட்டார். ஆனால் அவருக்குப் படிப்பு வராத குறைக்கு யார் என்ன செய்யமுடியும்? அந்தப்

பாழாய்ப்போன பாம்பாட்டியின் மகுடிநாதம் பாம்புகளை மட்டுமல்லாமல், பாடத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும். நாராயண ராவையும் எதற்காகக் கவர்ந்து, வகுப்பைவிட்டு வெளியேறும்படிச் செய்யவேண்டும்? நீங்களே சொல் லுங்கள்!

நாராயண ராவுக்கு எப்படியாவது கல்வி ஞானம் ஏற்பட வேண்டுமென்பதற்காக அவரைவிட அவருடைய தகப்பனர் ரொம்பவும் சிரமப்பட்டார். தகப்பனர் பட்ட சிரமமெல்லாம் பிள்ளைக்கு மிகுந்த சிரமத்தையே கொடுத்தது! அந்த நான் காவது வகுப்புக்குத்தான் அவர்மீது எவ்வளவு கோபம், பாருங்கள். தன்னைத் தாண்டி மேலே செல்வதற்கு முடியாமல் முட்டுக்கட்டை போட்டுவிட்டது!

நாராயண ராவின் தாய்பாஷை கன்னடம். ஆனல் பள்ளியில் படித்தது தமிழ் பாஷையில். தெலுங்கு பேசினல் ஓரளவு புரிந்துகொள்ளுவார். ஆங்கிலம் அறவே தெரியாது.

நாராயண ராவ் பள்ளிக்கூடத்தில் "படித்து"க் கொண் டிருந்தபோது சுற்றுப்பக்க ஊர்கள் எதற்காவது நாடகக் கம்பெனி வந்துவிட்டால் போதும்; அவரை வீட்டில் பார்ப் பது குதிரைக் கொம்பாகிவிடும். அவர் நாடகம் பார்ப்பதை தடைசெய்ய அவருடைய பெற்றோர்கள் செய்த முயற்சி யெல்லாம் பலனில்லாமல் போயின. நாடகம் பார்க்கும் வழக்கத்தை நிறுத்துவதற்குப் பதில், அவைகளில் நடிக்க வேண்டும் என்ற தவிர்க்க முடியாத ஆசையும் நாராயண ராவுக்குத் தோன்றியது.

ஒரு சமயம் கரூரில் பிரபல பாலாமணி அம்மாளின் நாடகக் கம்பெனி நாடகங்களை நடத்திக்கொண்டிருந்தது. சிறு பையனுக இருந்த நாராயண ராவும், மற்ருெரு பைய னும் இந்தக் கம்பெனியில் நடிகர்களாய் போய் சேர்ந்து விடுவதென்ற திடமான தீர்மானத்துடன யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர். நாராயண ராவை வீட்டில் காணவில்லை என்றதும், அவருடைய மாமா வேணு, வேறு எங்கும்

தேடாமல் நேராக பாலாமணி கம்பெனிக்குச் சென்று, அவரை குடுமியைப் பிடித்து இழுத்துவந்து வீட்டில் சேர்த்தார்.

இந்த சம்பவம் நாராயண ராவின் எண்ணங்களை மாற்றுவதற்கு உதவவில்லை. அதற்குப் பதில், "எப்படியும் நாடகத்தில் சேர்ந்துவிடுவது" என்ற பிடிவாதத்தையே அவர் மனதில் புகுத்தியது. அதன் பிரகாரமே அவர் தம்முடைய பனிரெண்டாவது வயதில் கரூரில் நாடகம் ஆடிவந்த பெரிய சாமா ஐயர் கம்பெனியில் ஒரு நடிகராய்ப் போய்ச் சேர்ந்தார். அதன்பின் அவரைத் திருத்துவது சாத்தியமில்லை என்று அவருடைய தகப்பனார் விட்டுவிட்டார்.

பெரிய சாமா கம்பெனியில்தான் அந்த சமயத்தில், காலஞ்சென்ற பிரபல நடிகர்களான அனந்த நாராயணய்யரும், (குழந்தை) எஸ். ஜி. கிட்டப்பாவும் நடித்துவந்தனர். இக்கம்பெனியின் நாடகங்களில் நாராயண ராவுக்கு, பால பார்ட், மோஹினி, ராஜபார்ட், பிள்ளையார், சரஸ்வதி போன்ற வேஷங்களெல்லாம் கிடைத்தன. கொஞ்சகாலம் இக் கம்பெனியில் இருந்தபின், ராவ் ஸ்ரீ. வீரராகவலு நாயுடு கம்பெனியில் நடிகரானார். சில மாதங்களுக்குப் பிறகு அவர் சின்ன சாமா ஐயர் கம்பெனியில் சேர்ந்தார். இங்கிருந்தும் கொஞ்சகாலத்திற்குப் பிறகு விலகிக்கொண்டு, பல நாடகக் கம்பெனிகளில் சில காலமாக நடித்துவந்தார்:

நாராயண ராவின் பதினெட்டாவது வயதில் அவருடைய தகப்பனார் காலமானார். அதன் காரணமாக, அவர் நாடகங்களில் நடிப்பதை நிறுத்திக்கொண்டு, தம் தகப்பனார் விட்டுப்போன நிலபுலன்களைக் கவனித்து வரலானார்.

இந்த சமயத்தில் நாராயண ராவுக்கு அந்த ஊர் போஸ்டாபீஸில் பிராஞ்சு போஸ்ட்மாஸ்டர் வேலை கிடைத்தது. ஆனால் அந்த வேலை அவருக்கு ஒத்துக்கொள்ளவில்லை. பிறகு அவர் அந்த ஊர் போர்டு எலிமென்டரி பாடசாலையில் உபாத்தியாயராக அமர்ந்தார். சில மாதங்களுக்குப் பிறகு அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸை, தடபுடலாக ஆடை யணிந்துகொண்டு சென்று பார்த்து, டிரெயினிங்

பெறுவதற்கு அநுமதிபெற்று. சேலத்திற்குச் சென்றார். டிரெயினிங் ஒரு மாதகாலம் பூர்த்தியாவதற் குள்ளாகவே அது பிடிக்காமல் ஊருக்கு வந்துவிட்டார் நாராயண ராவ்!

வாத்தியார் வேலைக்கு வந்தனம் கூறியபின், ஸ்ரீ. ராவ் அந்த ஊர் கர்ணம் வேலையை ஏற்றுக்கொண்டார். இதுதான் அவர் கடைசியாக அதிக காலம் பார்த்த வேலையாகும்! இரண்டு வருஷ காலத்திற்குப் பிறகு இந்த வேலையையும் அவர் விட்டுவிட்டார்.

நாராயண ராவ் மேலே சொன்ன உத்தியோகங்களை வகித்து வந்தபோதுங்கூட நாடகங்களை மறந்துவிடவில்லை. இடைவிடாமல் நாடகங்களைப் பார்த்துவந்ததோடு, அவர் ஆரிய கான சபையில் அடிக்கடி வேஷம்போட்டுக் கொண்டு நடித்தும் வந்தார். கடைசியில், "நாடகம்தான் நமக்கேற்ற தொழில்" என்று அவர் தீர்மானித்துக்கொண்டு, வேலு நாயர் கம்பெனியில் நடிகராய்ச் சேர்ந்தார். இக்கம்பெனி யின் நாடகங்களில் அவர் பல வருஷகாலம் நடித்துவந்தார். இக்கம்பெனியை விட்டபிறகு வேலுநாயர், சுப்பய்யா பாகவதர் முதலியவர்களுடன் ஸ்பெஷல் நாடகங்களில் நடித்து வரலானார். இலங்கைக்குப் பன்முறையும், ரங்கூனுக்கு ஐந்து தடவையும் சென்று அவர் நாடகம் ஆடி வந்திருக்கிறார்.

ஒரு சமயம், பிரபல டி. பி. ராஜலக்ஷ்மியுடன் அவர் ரங்கூனில் நாடகங்களில் நடித்துவந்தபோது, அவருடைய அபிமானி ஒருவர் 'ஸர்ஜ்'கோட்டு ஒன்றை அவருக்கு (மேடைமீது) பரிசாக அளித்து, அதை அணிந்துகொண்டு காட்சியளிக்கும்படி வேண்டிக்கொண்டார். அப்பொழுதெல்லாம் நாராயண ராவ் ஷர்ட்கூட போட்டுக்கொள்ளும் வழக்க மில்லை. அந்தக் கோட்டு "குளோஸ்" கோட்டாக இருந் திருந்தாலாவது அவர் உள்ளே ஷர்ட் இல்லாமலே அதைப் போட்டுக் கொண்டிருப்பார்! ஆனால் அந்த "ஓப்பன் கோட்டை" என்ன செய்ய முடியும்! "என்னிடம் ஷர்ட் இல்லிங்களே!" என்று கையை விரித்து, உதட்டைப் பிதுக்கி னார் ராவ். சபையில் ஒரே கரகோஷம்! மறுநாள் அவர் மேடைமீது தோன்றியதும் அவரது அபிமானிகள் அவருக்கு ஒரு டஜன் ஷர்ட்களைப் பரிசாக அளித்தனர்!

நாடக மேடையில் மற்றெல்லா வேஷங்களையும்விட நாராயண ராவுக்கு அதிகப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது பபூன் வேஷம்தான். அவரது சமயோசித ஹாஸ்யத் துணுக்குகளை நாடகப் பிரியர்கள் மிகவும் பாராட்டி வந்தனர். ஆதலால் வேலு நாயரின் கம்பெனியில் சேர்ந்தது முதல் அவர் பபூன் வேஷத்திலேயே தோன்றி வரலானார். நாடகத்தில் மட்டுமல்லாது சினிமாவிலும் ஹாஸ்ய பாகங்கள்தான் அவருக்கு மிகுந்த புகழை வாங்கிக் கொடுத்திருக்கின்றன.

1934-ம் வருஷத்தில் கோயமுத்தூர் வெறைட்டி ஹால் டாக்கிஸார் **சகுந்தலா** படத்தைத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்தனர். அந்தக் காலத்தில் நாடக மேடையில் துஷ்யந்தன் வேஷத்தை நடிப்பதில் நிகரற்றவர் என்று வேலு நாயர் பிரசித்தி பெற்றிருந்தார். ஆதலால் மேற்படி கம்பெனியார் தங்கள் **சகுந்தலா** படத்திற்கு நாயரை ஒப்பந்தம் செய்தனர். நாயருடன் இடைவிடாது நாடகங்களில் பபூனாகத் தோன்றி வந்த நாராயண ராவும் அந்தப் படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். இருவருக்கும் தங்கள் புதிய முயற்சி வெற்றியாய் முடியுமா என்பதில் அதிக சந்தேகம் இருந்ததாம். எனினும், கல்கத்தாவிலிருந்து அப்படியே காசிக்குப் போய்விட்டு வரலாம்' என்ற எண்ண மேலீட்டால் சினிமாவில் நடிக்க ஒப்புக்கொண்டனராம். படம் முடிந்ததும் இருவரும் பல க்ஷேத்திரங்களுக்குச் சென்றுவிட்டுத் திரும்பினர்.

நாராயண ராவ் சினிமாவில் நடிக்கத் தொடங்கி இப்பொழுது சுமார் பதினேரு வருஷங்கள் ஆகின்றன. இந்தக் காலத்திற்குள் அவர் 28 தமிழ்ப் படங்களில் நடித்து முடித்திருக்கிறார். **சகுந்தலா** படத்தில் அவர் மாடவ்யனாகத் தோன்றினர். அதன் பிறகு அவர் மூன்று வருஷ காலத்திற்குள், **அல்லி அர்ஜுனு, நந்தனர், ரத்னவளி, மஹா பாரதம், சத்திய சீலன், கவிரத்ன காளிதாஸ்** ஆகிய அரை டஜன் படங்களில் மளமள வென்று நடித்து முடித்தார். ஆனல் இப்படங்களிலெல்லாம் அவருடைய நடிப்பு விசேஷமாய் குறிப்பிடக் கூடியபடி இல்லை.

பிறகு வந்த **சிந்தாமணி** தமிழ்ப் படம் அவருக்குக் கொள்

ளைப் புகழை வாரிக் கொடுத்தது. இப்படத்தில் அவர் ஆழ்வார் செட்டியின் வேஷத்தை அதி தத்ரூபமாய் நடித்திருக்கிறார். அதன் மூலம் நிரூபணமாயிற்று — நாராயண ராவ் ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகர் என்பது. நாராயண ராவின் வெற்றிக்கு ஒய். வி. ராவ் பெரும் பங்கு பொறுப்பாளி என்பதை இங்கு சொல்லியே ஆகவேண்டும்.

**சிந்தாமணி** படம் நாராயண ராவுக்கு 'பெயரைச் சம்பாதித்துக் கொடுத்த படம்' என்று சொல்லுவது தவறு! உண்மையில் 'நாராயண ராவ்' என்ற பெயரை ரஸிகர்கள் மறந்தே போகும்படிச் செய்து விட்டதல்லவா அப்படம். அவரை இப்பொழுதுகூட அவர்கள் 'ஆழ்வார் செட்டி' என்றுதானே அழைத்து வருகிறார்கள். ஆழ்வார் செட்டியின் வேஷத்தில் நாராயண ராவ் அவ்வளவு புதைந்து போய் விட்டார்.

**சிந்தாமணி** படத்தைப் போலவே 'ஆழ்வார் செட்டி'க்கும் அசாத்தியமான புகழ் கிடைத்தது. அவர் ஜனங்களின் வற்புறுத்தலின் பேரில் பல ஊர் மேடைகளில் நேரில் தோன்ற வேண்டியதாயிற்று.

மதுரை வலிடி சினிமாவில் அவர் மேடைமீது தோன்றிய போது மிக ரஸமான சம்பவமொன்று நிகழ்ந்தது. படத்தின் சொந்தக்காரர்கள் அவருக்கு ஒரு தங்க மாலையை போட்டனர். அதை பின் தொடர்ந்து பல பூமாலைகள் அவர் கழுத்தில் ஏறின. ஆனால் ஆழ்வார் செட்டியின் பரம பக்தர் ஒருவர் அவருக்கு அணிவித்தது ஒரு விசித்திரமான மாலையாகும். கடலைச் சுண்டலை துளையிட்டுக் கோர்த்திருந்த அந்த மாலை அவர் கழுத்தில் போடப்பட்டதும் சபையில் சந்தோஷம் எல்லை மீறியது. கரகோஷமும், கொம்மாளமும் கூரையைப் பிளந்தன. ஒரு பயலுக்கு மட்டும் சுண்டலைப் பார்த்ததும் நாக்கில் ஜலம் ஊறியது போலும்! ஆழ்வார் செட்டியிடம் அதற்கான காசைக் கொடுக்காமலே அந்த சுண்டல் மாலையை அவன் உருவிக்கொண்டு போய்விட்டான்! தங்க மாலையை மட்டும் 'செட்டியார்' கெட்டியாகப் பிடித்துக் கொண்டதால் அது பின்தங்கியது!

சிந்தாமணிக்குப் பிறகு நாராயண ராவ், கைலாச பிராமணன், ஒய். வி. ராவின் பக்த மீரா, ஸ்வர்ணலதா, வல்லாள மஹாராஜா, கம்பர், அனுதைப் பெண், மணிமேகலை, சதி முரளி, பரசுராமர் ஆகிய ஒன்பது படங்களில் ஒய்வே இல்லாமல் நடித்தார். இந்தப் படங்களி லெல்லாம் அவருடைய நடிப்பு சிந்தாமணியிலிருந்த அவ்வளவு பிரமாதமாக இருக்கவில்லை யென்றாலும், அவர் ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகர் என்பதுமட்டும் ஊர்ஜிதமாகியது.

என். எஸ். கிருஷ்ணனுக்கு எல். நாராயண ராவிடம் அதிகப் பிரியம் உண்டு. அவருடைய நடிப்பை கிருஷ்ணன் மிக மெச்சி வந்தார். அதன் விளைவாக, கிருஷ்ணன் தாம் சொந்தமாகத் தயாரித்த நவீன விக்கிரமாதித்தன், சந்திர ஹரி ஆகிய இரண்டு படங்களிலு நாராயண ராவுக்கு முக்கியமான பாத்திரங்களைக் கொடுத்து நடிக்கச் செய்திருக்கிறார். சிந்தாமணி படத்திற்குப் பிறகு இவ்விரண்டு படங்களிலும்தான் நாராயண ராவின் நடிப்பு ரொம்பவும் நன்றாய் அமைந்தது என்பது கவனிக்கத்தக்கது.

பின்னர் நாராயண ராவ் பக்த கௌரி, பஞ்சாமிர்தம் ஆகிய இரண்டு படங்களிலும் நடித்தார். அதற்குமுன் இருபத்தி ஒரு படங்களில் நடித்து சிறந்த ஹாஸ்ய நடிகர் என்று பெயர் பெற்றிருந்த நாராயண ராவுக்கு, முதல் தடவையாக, தமிழ்நாடு டாக்கீஸார் தயாரித்த பக்த நாரதர் படத்தில், ஹாஸ்யக் கலப்பே இல்லாத ஒரு குணவிசேஷ பாத்திரம் கொடுக்கப்பட்டது. இந்தப் படத்தைப் பார்த்த போது நான் மூக்கின்மேல் விரலை வைத்து ஆச்சரியப்பட வேண்டியதா யிருந்தது. குணவிசேஷ நடிப்பில் தேர்ந்த நடிகர்களே பானுதேவரின் பாத்திரத்தை நடிப்பதற்குத் திண றிப் போய்விடுவார்கள். அப்படி யிருக்க நாராயண ராவ் இப்பாத்திரத்தை, அதற்கெனவே தாம் பிறந்தவர் போல, வெகு அநாயசமாக நடித்திருந்தார். 'நாராயண ராவ் வெறும் ஹாஸ்ய நடிகர் மட்டுமல்ல; குணவிசேஷ நடிப்பி லும் சூரர்' என்ற விஷயம் இப்படத்தின் மூலம் சினிமா ரஸிகர்களுக்குத் தெரியலாயிற்று.

நாரதருக்குப் பிறகு (ஜெமினி) நந்தனரில் நடித்தார் நாராயண ராவ். பிறகு மனோன்மணியில் அவருக்குத் தம்

விசேஷ ஹாஸ்யத் திறமையை வெளியிடுவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. **குபேர குசேலா**வில் அவர் தம் காய கல்பத்தின் மூலம் பாபநாசம் சிவனை பி. யூ. சின்னப்பாவாக மாற்ற முயன்றது ரொம்ப தமாஷாயிருந்ததல்லவா? அவரால் குபேரனுக்கப்பட்ட அதே சின்னப்பா, அவருக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுப்பதற்குத் திணறிய போது, (கண்ணாம்பாவின் **ஹரிச்சந்திரா** படத்தில் நக்ஷத்திரேசனாகத் தோன்றி) என்ன பாடு படுத்திவிட்டார் நாராயண ராவ்! **தாஸி அபரஞ்சி**யின் மாமாவாகத் தோன்றி, 'இப்படி எல்லோருமே அபரஞ்சியைப்பற்றி கனவின் மூலமே சுகம் அனுபவிக்க ஆரம்பித்து விட்டால் அவள் கதிதான் என்னாவது?' என்று அவளுக்குப் பரிந்து பேசியதைக் கனவில் நினைத்தால் கூட சிரிப்பு வருகிறதல்லவா?

நாராயண ராவ் இதன் பிறகு நடித்த படம் **கண்ணம்மா என் காதலி**. இப்படத்தில் அவர் ஏற்றுக் கொண்டிருப்பது ஹாஸ்யமும், குணவிசேஷமும் கலந்த பாத்திரமாகும். நல்ல திறமை உடையவர்களால் தான் இது போன்ற பாத்திரங்களை வெற்றிகரமாய் நடிக்க முடியும். இந்த கடினமான பாத்திரத்தை நாராயண ராவ் அபாரமாய் நடித்து விட்டார். இனிமேல் அவரை தமிழ் நாட்டின் சிறந்த குணவிசேஷ நடிகர்களுள் ஒருவராகக் கூறவேண்டியதாகி விட்டது.

அவர் கடைசியாக நடித்துள்ள **ருக்மாங்கதன்** படம் இதற்கு நேறு மாறாய் முடிந்தது. இப்படத்தைப்பற்றி நினைக்கும் போதே ஜுரம் வந்து விடுகிறதாம் அவருக்கு! அவர் கடைசியாக நடித்திருக்கும் ஜெமினி சமூகப் படம் மிஸ் மாலினி.

நாராயண ராவ் ஒரு உன்னத ஹாஸ்ய நடிகர்; பிறரைச் சிரிக்க வைக்கவேண்டும் என்பதற்காக கோணங்கிகளையோ, ரஸாபாஸமான செய்கைகளையோ அவர் செய்து கலா ரஸிகர்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொள்வதில்லை. ஹாஸ்யமாகப் பேசவேண்டும் என்பதற்காக அவர் இயற்கைக்கு முரணான வசனங்களை தம் பேச்சில் திணித்துக் கொள்ளுவதில்லை. அல்லது பாமர ரஸிகர்களின் ஆதர

வைப் பெறும் நோக்கத்துடன் அவர் தம்முடன் ஒரு நடிகை யைச் சேர்த்துக் கொண்டு காதல், காமம் சம்பந்தமான விரஸ ஹாஸ்யத்திலும் இறங்கவில்லை. அவர் தூய்மையான ஹாஸ்ய நடிப்பின் மூலமும், சமயோசித ஹாஸ்யத்தின் மூலமுமே பிரபலமடைய முயன்று வந்திருக்கிறார். அம்முயற்சியில் அவர் வெற்றியையும் பெற்றிருக்கிறார்.

நாஸுக்கு மிகுந்த சினிமாவில் ஒரு பிரபல நடிகரா யிருந்த போதிலும், நாராயண ராவின், நடை, உடை, பாவனை, எண்ணம் எல்லாம் கர்நாடகமாகவே யிருக்கிறது. குள்ளமாகவும், சாத்வீகமாகவும் தோற்றமளிக்கும் அவரை நேரில் பார்க்கும்போது' இந்தப் பூனையும் அந்தப் பாலைக் குடிக் குமோ ? என்ற எண்ணந்தான் நமக்கேற்படும்! துலா லக்னத் தில் பிறந்துள்ளதால்தான் அவர் கோமுட்டிச் செட்டியார் வேஷத்தில் பிரபலம் அடைந்தார்' என்று சொன்னால் அது மிகப் பொருந்தும். அந்தக் 'கோமுட்டிச் சிக்கனமும், அவரது வாழ்க்கையில் படிந்து போயிருப்பது மேலும் ஆச்சரியத்தை அளிக்கும் விஷயமாகும்.

1915-ம் வருஷத்தில் உபாத்தியாயர் வேலை பார்த்து வந்த போதே விவாஹம் செய்து கொண்ட நாராயண ராவ் லக்ஷண மாக குடும்ப வாழ்க்கையை நடத்தி வருகிறார். அவருக்கு இரண்டு பெண்களும், இரண்டு பையன்களும் இருக்கின்ற னர். பெண்களில் ஒருத்திக்கு விவாஹம் ஆகிவிட்டது; பையன் கள் படித்துக் கொண்டிருக்கின்றனர். தம் மாமனாரின் சொந்த ஊரான கும்பகோணத்தில் பலகாலம் தங்கியிருந்த நாராயண ராவ் தற்போது சென்னையிலேயே ஒரு வீட்டை வாங்கிக் கொண்டு வசித்து வருகிறார்.

நாராயண ராவ் சென்ற நான்கு வருஷகாலமாக ஜெமினி ஸ்டுடியோவில் நிரந்தர சம்பளத்தில் நடிகராக இருந்து வரு கிறார். வையாபுரி போன்ற மற்றும் பல கடினமான பாத்தி ரங்களை ஜெமினி ஸ்டுடியோக்காரர்கள் அவருக்குக் கொடுத்து, அவரை மேலும் உத்ஸாகப் படுத்துவார்களாக.

# பி. எஸ். கோவிந்தன்

ஒரு பத்து வருஷங்களுக்கு முன்னால், பொது ஜனங்களிடம் அசாத்தியமான தைரியம் இருந்து வந்தது. "புலி வருகிறது!" என்று அவர்களிடம் சொன்னால் "எங்கே?" என்று ஆவலுடன் கேட்பார்கள்! கேட்பதோடு நின்று விடுவார்களா என்ன? அந்தப் "புலியை" பார்ப்பதற்காக கூட்டம் கூட்டமாகச் செல்லுவார்கள்! அந்தப் புலிதான் என்ன இவர்களைக் கண்டதும் மேலே பாய்ந்து, பிடுங்கித் தின்னும் என்கிறீர்களோ; அதுதான் இல்லை! தன்னைப் பார்க்க இவ்வளவு பேர்கள் சிரமப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டவுடன் அந்தப் "புலி" ஒய்யார நடைபோடும்; பார்க்க வந்தவர்களைப் பாடிப் பரவசப்படுத்தும்! புலியைப் பார்க்கச் சென்றவர்கள் மெய்மறந்து வாய் பிளந்து இருப்பார்கள்!

"என்னய்யா இது? புலியாவது பாடுவதாவது! மனிதர்களைக் கொல்லாமல் விடுவதாவது! என்ன கனவு காண்கிறீரோ?" என்று நீங்கள் கேட்கலாம். உங்களிடம் நான் எதற்காகப் பொய் சொல்லப் போகிறேன்? உண்மையிலேயே, "புளியமாநகர் புலிக்குட்டி பி. எஸ். கோவிந்தன் மேடையில் தோன்றப் போகிறார்" என்றால், கூட்டம தாங்கமுடியாமலிருக்கும். அந்தக் காலத்தில் பி. எஸ். கோவிந்தனுக்கு பிரமாதமான பொதுஜன ஆதரவு இருந்து வந்தது உங்களில் அநேகருக்குத் தெரிந்தே இருக்கும்.

கோவிந்தன் மேடைக்கு வந்தவுடனேயே ரஸிகர்கள் கரகோஷம் செய்து உத்ஸாகப் படுத்துவார்கள். அவர் "ஜெயஜெய கோகுலபாலா" என்ற பாட்டை ஆரம்பித்து விட்டால், சபையில் சர்வ அமைதி நிலவும். அவர் அரை மணி நேரத்திற்கு அடுக்கடுக்காக அநேக சங்கதிகளைப் போட்டுப் பாடிவிட்டு உள்ளே செல்வார். சபையோரின் கரகோஷம் சில நிமிஷநேரம் நீடிக்கும். இதேபோலத்தான் அவருடைய 'மாஸ்டர் பீஸா'ன "பக்தி கொண்டாடுவோம்" என்ற பாட்டும். இந்தப் பாட்டையும் அவர்

ஒவ்வொரு நாடகத்திலும் ஒரு முறையாவது பாடியாக வேண்டுமாம். இல்லாவிட்டால் அவருடைய அபிமானிகள் நாடகத்தை முடிக்க விடமாட்டார்களாம்.

கோவிந்தன் பிறந்த குடும்பத்தையும், அக் குடும்பம் இருந்த நிலைமையையும் கவனிக்கையில், அவர் தம் சங்கீதத்தின் மூலம் பொது ஜனங்களின் பேராதரவைப் பெற்றது ஆச்சரியப்படத்தக்க விஷயமாகும். அவருடைய தாரபந்துக்களுக்குக்கூட நாடகத்திலோ, சங்கீதத்திலோ, துளியும் சம்பந்தம் இருக்கவில்லை. அவருடைய தகப்பனரான சுந்தரராஜுலு நாயுடு (தற்போது ராஜாமில் என்று சொல்லப்படும்) செட்டி மில்லில் காவல்காரனாக இருந்தார். அண்ணன்மார்கள் இருவரும் ஹார்வி மில்லில் வேலை செய்து வந்தனர். தமக்கைகள் இருவருக்கும் பாடுவதற்கான குரல்கூட கிடையாது. கோவிந்தன் ஒரு வயதுக்குழந்தையாயிருந்தபோதே அவருடைய தகப்பனர் இறந்துவிட்டார். அண்ணன்மார்களின் சொற்பசம்பாத்தியத்தில் குடும்பம் நடந்துவந்தது. அந்தக் குடும்பம் பட்ட கஷ்டத்திற்கும், அனுபவித்த வறுமைக்கும் அளவேயில்லை. "பானைநிறைய தண்ணீர் இருக்கும்; ஆனால் அதில் அறிந்தெடுத்தால் ஒரு பிடி சோறு கிடைப்பதே அரிதாயிருக்கும்!"—என்று கோவிந்தன் தம் குடும்பத்தின் பூர்வ நிலைமையை விவரிப்பதைக் கேட்டபின், யார்தான் சொல்லமாட்டார்கள்-'பாவம், சினிமாவிலாவது நிறைய சம்பாதித்து சந்தோஷமாயிருக்கட்டும்" என்று?

மதுரைக்குச் சுமார் 12 மைல்கள் தூரத்திலுள்ள பூச்சிரம்பட்டிதான் கோவிந்தனின் சொந்த ஊராகும். திருமங்கலத்திற்குச் சமீபத்திலிருக்கும் புளியம்பட்டியைச் சேர்ந்த ஒரு நாடகக் கம்பெனி மூலம் அவர் முதன் முதலில் பிராபல்யம் அடைந்ததால், அவரது பெயருடன் 'புளியமாநகர்' என்ற அடைமொழி சேர்க்கப்பட்டது. அதன் விளைவாக அவருடைய சொந்த ஊரே புளியம்பட்டி என்று அநேகமாக எல்லோரும் நினைத்திருக்கின்றனர்.

காளயுக்தி (1918-ம்) வருஷம் ஆவணி மாஸத்தில் பிறந்தவரான கோவிந்தன், பள்ளிக்கூடத்தில் சேர்ந்து இரண்டா

வது வரைப் படித்தார். அப்பொழுதே அவர் தம் ஊர் பஜனைகளில் கலந்துகொண்டு பாடிவந்தார். அவரது குரல் இனிமையாய் இருந்ததால், மணி நகரம் வெள்ளைச்சாமித் தேவர் என்பவர் அவருக்கு ஒரு காந்திப் பாட்டைச் சொல்லிக் கொடுத்தார். தற்போது சில்வர் ஜூபிளி டாக்கீஸாக விளங்கும் "பெரிய தகரக் கொட்டகை"யில் நடந்துவந்த தம் சொந்தக் கம்பெனியின் வள்ளி நாடகத்தினிடையே பாடும்படிச் செய்தார். ஸ்ரீ. தேவர் எதிர்பார்த்தபடியே, கோவிந்தன் அந்தப் பாட்டை நன்றாக பாடி, ஜனங்களின் கரகோஷத்தைப் பெற்றார். அன்று முதல் கோவிந்தன் அந்தக் கம்பெனியில் ஒரு நடிகராகிவிட்டார்.

வெள்ளைச் சாமித் தேவரின் கம்பெனியில் கோவிந்தன் சுமார் நான்கு வருஷகாலம் நடித்துவந்தார். அவருக்கு முக்கிய வேஷங்களெல்லாம் கொடுக்கப்பட்டன. அவர் அவைகளை நன்கு நடித்து நாளுக்கு நாள் புகழ்பெற்று வந்தார்; ஆனால் பொருள்தான் அதிகம் கிடைக்கவில்லை.

கோவிந்தனுக்கு நல்ல பொதுஜன ஆதரவு இருப்பதை அறிந்த ஸ்ரீமான்கள் பி. கே. சுப்பா ரெட்டியாரும், ஏ. கே. ராமசாமி ரெட்டியாரும் அவரைத் தங்கள் பரமானந்த பாஸ்கரகான ஒரிஜீனல் பாய்ஸ் கம்பெனிக்கு அழைத்துச் சென்றனர். இந்தக் கம்பெனியில் கோவிந்தன் சேர்ந்ததும், பொது ஜனங்களிடையே அவருக்கிருந்த மதிப்பு பன்மடங்காய் அதிகரித்தது. அவரை "புளியமா நகர் புலிக்குட்டி" என்று புகழலாயினர். கோவிந்தன் தோன்றிய நாடகங்களுக்கு கொள்ளை வசூல் ஏற்படலாயிற்று. முதல் வருஷத்தில் கோவிந்தனுக்கு ரூ. 300 சம்பளம் கொடுப்பதாக அமர்த்தப்பட்டார். ஏராளமான லாபம் கிடைக்கவே, முதலாளிகள் ரூ. 3000— மாகக்கொடுத்தனர். மூன்றாவது வருஷத்தில் ரூ. 700 கொடுப்பதாகப் பேச்சு. கோவிந்தனுக்குக் கொடுக்கப்பட்டதோ ரூ. 7000 ஆகும். இந்தக் கம்பெனி மூலம் கோவிந்தனின் புகழ் தமிழ் நாடெங்கும் பரவலாயிற்று.

ஒரு சமயம், மேற்படிக் கம்பெனி சென்னை ராயல் தியேட்டரில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தது. கோவிந்த

னின் நாடகம் ஒன்றிற்கு காலஞ் சென்ற ஸ்ரீ. எஸ். ஜி. கிட்டப்பா விஜயம் செய்து, அவருடைய பாட்டையும், நடிப்பையும் பாராட்டி, ஒரு தங்க மெடலைப் பரிசாக அளித்து விட்டுச் சென்றார். இன்னொரு சமயம், இந்தக் கம்பெனி ஒற்றைவாடைத் தியேட்டரில் நாடகங்களை நடத்தி வந்த போது, பிரபல நடிகர்களான ஸ்ரீமான்கள் பி. எஸ். வேலு நாயரும், கே. எஸ். அனந்தநாராயணய்யரும், மேடைமீது ஏறி, கோவிந்தனைப் பாராட்டிப் பேசி ஆசீர்வதித்தனர்.

ஐந்து வருஷ காலம் இந்தக் கம்பெனியில் நடித்த பின்னர், அதைவிட்டு விலகி, ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார் கோவிந்தன். ரங்கூன், சிங்கப்பூர், பினங், சைகோன் முதலிய கடல்கடந்த பிரதேசங்களுக்குச் சென்று, நாடகமாடி, அவர் ஏராளமான பொருளையும், பெயரையும் சம்பாதித்துக் கொண்டு திரும்பினார்.

நாடக மேடையில் கோவிந்தன் பிரசித்தி பெற்று விளங்கியதின் காரணமாக, 1934-ம் வருஷத்தில் சேலம் ஏஞ்சல் பிலிம்ஸார் அவரைத் தங்கள் லீலாவதி சுலோசனா தமிழ்ப் படத்தில் ஸ்ரீதத்தனாக நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர். வி. எஸ். ஜெயராமன், டி. எம். சாரதாம்பாள், பி. எஸ். சிவபாக்கியம் ஆகியோர் அவருடன் இப்படத்தில் நடித்திருக்கின்றனர். இப்படம் கல்கத்தாவில் தயாரிக்கப்பட்டு, 1935-ம் வருஷத்தில் வெளிவந்தது. ஆனால் கோவிந்தனுக்கு இப் படத்தில் நல்ல பெயர் கிடைக்கவில்லை.

முதல் படத்தில் அவருக்கு ஏற்பட்ட அபஜெயம் அவரது மனோதிடத்தை வெகுவாகக் குலைத்துவிட்டது. ஆதலால், சொந்தக் கிராமத்திற்குச் சென்று "சிவனே" என்று விவசாயத்தைக் கவனித்துக் கொண்டிருந்து விட்டார். பட ரஸிகர்களும், நாடக ரஸிகர்களும் "பி. எஸ். கோவிந்தன் ஏன் வேறு படங்களில் நடிக்கவில்லை?" என்று என்னை சதா கேட்டுக்கொண்டே யிருந்தனர்.

ஏழு வருஷங்களுக்குப் பிறகு, 1941-ம் வருஷத்தில் ஜூபிடர் பிக்சர்ஸார், குபேர குசேலாவில் கிருஷ்ணன் வேஷத்

தில் தோன்றும் சந்தர்ப்பத்தை கோவிந்தனுக்கு அளித்தனர். இந்த சந்தர்ப்பத்தை அவர் சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். "மாலை போதாதோ", "நீ மயங்குவதேனோ" ஆகிய இரண்டு பாட்டுகளையும் அவர் நன்றாகப் பாடியிருக்கிறார். எதிர் காலத்தில் அவர் முன்னேற்றம் அடையக் கூடும் என்ற நம்பிக்கை இப்படத்தைப் பார்த்தவர்களுக்கு ஏற்பட்டது. அதற்கேற்றாற்போல் டைரக்டர் வி. வி. ராமன் அவரை தம் பக்த ஹநுமானிலும், ஆரவல்லியிலும் நடிக்கச் செய்திருக்கிறார். இப்படங்கள் மூலம் ஏற்பட்ட நல்லாதரவின் விளைவாக தற்போது கோவிந்தன் சேலம் மீனாக்ஷி பிலிம்ஸாரின் லக்ஷ்மி விஜயத்திலும், மாடர்ன் பிக்சர்ஸின் மஞ்சுளாவிலும், சித்ரகலாவின் அல்லியிலும் நடித்து வருகிறார். அடுத்தபடியாக அவர் கங்கா பிலிம்ஸின் மாயப் பிரபஞ்சத்தில் நடிக்கப் போகிறார். இது தவிர, ஜூபிடர் பிக்சர்ஸார் தங்கள் இரண்டு படங்களில் நடிப்பதற்கு அவரை ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றனராம்.

கோவிந்தனின் தாய்பாஷை தெலுங்கு. ஆனால், அந்த பாஷையை சரிவரப் பேசக்கூட அவருக்குத் தெரியாதாம். கம்பர், பாண்டுரங்கா, சபாபதி, என் மனைவி, மஹா மாயா போன்ற படங்களுக்கு சில பாட்டுகளும், வசனங்களும் எழுதிக் கொடுத்திருக்கும் ஸ்ரீ. டி. கே. சுந்தர வாத்தியாரிடம் கோவிந்தன் தமிழ்ப் பாட்டுகளையும், தமிழ் இலக்கியங்களையும் கற்றுக் கொண்டார்.

1930லிருந்து மூன்று வருஷ காலத்திற்கு ஸ்ரீ. உப்பையா பாகவதர் என்பவரிடம் சங்கீத சிக்ஷை சொல்லிக்கொண்டார். காஞ்சீவரம் நயினாப் பிள்ளையும், இந்த பாகவதரும் சேர்ந்தாற்போல் வீணை தனகோடி அம்மாளிடம் சிக்ஷை சொல்லிக் கொண்டவர்களாம்.

இருபத்தி ஓராவது வயதில் கோவிந்தனுக்கு விவாஹம் நடந்தது ஆனால் இதுவரை அவருக்கு புத்திர பாக்யம் ஏற்படவில்லை. சுமார் ஐந்தேகால் அடி உயரமும், கறுப்பு நிறமும் உடைய அவர் சாதுவான குணம் உள்ளவராகக் காணப்படுகிறார்.

தற்போது ஸ்பெஷல் நாடகங்களில் தோன்றுவதை கோவிந்தன் வெறுக்கிருர். சினிமாப் படங்களில் தம் திறமை பூராவையும் காட்டிவிட வேண்டுமென்பதே அவரது பேரவா வாம். நாடக மேடையில் அவருக்கு ஏராளமான புகழ் இருந் தது. ஆனல் அவ்வளவு புகழை அவர் சினிமாப் படங்களில் இனிமேல்தான் சம்பாதித்துக் கொள்ள வேண்டியதாயிருக் கிறது. இனி நடிக்கப்போகும் படங்கள் மூலம் அந்தப் புகழைச் அவர் சம்பாதித்துக் கொண்டுவிடுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

# காமெடியன் கே. சாரங்கபாணி

ஒரு பிடில் வித்வானாகவோ, அல்லது வாய்ப்பாட்டு வித்வானாகவோ ஆகியிருக்கவேண்டிய கே. சாரங்கபாணி இன்று ஒரு ஹாஸ்ய நடிகராக விளங்கிவருகிறார். அவருக்கிருக்கும் குறும்புகளுக்கும், சேஷ்டைகளுக்கும், நகைச் சுவைக்கும் அவர் உண்மையில் ஒரு சங்கீத விற்பன்னராக ஆகியிருந்தால், பாவம், அந்த சங்கீதக் கலை என்ன பாடு பட்டிருக்குமோ? நல்ல வேளையாக தன் முத்தண்ணாவான சங்கீதக் கலை மீது நாடகக்கலை அநுதாபம் கொண்டதுபோலும்; சாரங்கபாணிக்கு யோசிப்பதற்கு ஒரு துளிக்கூட அவகாசம் கொடுக்காமல், அவரை பிடரியைப் பிடித்துத் தள்ளிவந்து தன்னிடம் வைத்துக் கொண்டு விட்டது! இதைத் தடுக்க எதிர்ப்பட்டவர்களெல்லாம் வெற்றிகரமாகவே பின்வாங்க வேண்டியதாயிற்று.

நாடகம் பார்ப்பதையே பெருந் தவறு என்று அவருடைய பெற்றோர்கள் கருதிவந்தார்கள். நாடகத்தைச் சொல்லப் போவானேன்; சாரங்கபாணி சங்கீதம் பயிலுவதற்குக் கூட முதலில் அவர்கள் இஷ்டப்படவில்லை. பிறகு, (ருக்மணி அருண்டேலுக்கு நாட்டியம் கற்பித்தவரான) பந்தணைநல்லூர் ஸ்ரீ. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையிடம் வாய்ப்பாட்டையும், பிடிலையும் கற்றுக்கொள்ள அவர்கள் அரை மனதுடன் சம்மதித்தனர். முழுமனதுடன் சம்மதிக்காததால்தானோ என்னவோ இந்த சிக்ஷை ஒன்றரை வருஷ காலம்தான் நீடித்தது. சாரங்கபாணிக்கு இயற்கையாகவுள்ள கோணங்கியும், குறும்பும் எங்கே போகும்? போக இடமில்லாமல் அவரது சங்கீதத்தில் புகுந்து கொண்டன! சங்கீதமே கஷ்டமான விஷயம். போதாதற்கு அந்த சுருதியையும் தாளத்தையும் கட்டி இழுத்துக்கொண்டு போவதென்றால் யாரால் ஆகிற காரியம். பேசாமல் சங்கீதத்தை பந்தணைநல்லூர் வாத்தியாரிடமே விட்டு விட்டு, கும்பகோணத்திற்கு நடையைக் கட்டினார் சாரங்கபாணி.

சாரங்கபாணி சங்கீத வித்வானாக முயற்சிப்பதற்கு முன்னால் நாடகத்தில் சேர முயற்சித்தது ரஸமான விஷயமாகும். குழந்தைப் பருவம் முதலே அவர் பிறரது தோற்றத்தையும் பேச்சையும் தத்ரூபமாக "இமிடேட்" செய்வாராம். பக்கத்தில் இருப்பவர்களுக் கெல்லாம் பரம சந்தோஷம் ஏற்படுமாம்.

இப்படி யிருக்கையில், "தமிழ் நாட்டின் வஷிவஷில் பி. டி. மில்லி" என்று சொல்லப்படக் கூடியவரும், தமிழ் நாடக மேடையில் பல நவீன முறைகளைப் புகுத்தி புதுசகாப்தத்தை உண்டு பண்ணியவருமான ஸ்ரீ கன்னையாவின் கம்பெனி கும்பகோணத்தில் நாடகமாடி வந்தது. இக்கம்பெனியின் ஏஜண்டு சாரங்கபாணியின் சகோதரர்களுக்கு மிகவும் வேண்டியவர். அவர் சாரங்கபாணியின் கோணங்கிகளையும், குறும்புகளையும் மிகவும் ரஸித்தார். அதன் விளைவாக தம் கம்பெனியில் அவரைச் சேர்த்துக்கொள்ள எண்ணி அவருடைய பெற்றோர்களிடம் கேட்டார். அவர்கள் "முடியவே முடியாது" என்று தாமத மன்னியில் பதில் கொடுத்து விட்டார்கள்.

ஒருநாள் இந்தக் கம்பெனி "நந்தனார்" நாடகம் நடத்தியது. ஏஜண்டு ஒரு ஹரிஜனப் பெண்ணாக நடித்தார். சாரங்கபாணியை தம்முடைய பையனாக நடிக்கச் செய்தார். சாரங்கபாணி முதன் முதலில் நாடகமேடையில் தோன்றியது அப்பொழுதுதான். அன்று ஸ்ரீ. கன்னையா தம் கையாலேயே போட்ட 'மேக்கப்'பானது சாரங்கபாணிக்கு ஆயுள் முழுதும் 'மேக்கப்'பை தீர்மானித்தது. தொட்ட தெல்லாம் பொன்னாக்கும் ஸ்ரீ. கன்னையாவின் கைக்குச் சொல்லவேண்டுமா என்ன?

அந்த முதல் நடிப்பை எல்லோரும் பாராட்டி கரகோஷம் செய்தனர். ஆனால் அதைப் பாராட்டி ரஸிக்காத ஒருவரும் இருக்கத்தான் செய்தார். அவருடைய அத்தான் ஸ்ரீ. கே. பி. கிருஷ்ணஸ்வாமி அவரை வீட்டில் காணாததால் நேராக நாடகக் கம்பெனிக்குச் சென்று அவரைக் கூப்பிட்டார். தம் பலம் கொண்ட மட்டில் சாரங்கபாணியின் முதுகில் வைத்தார் ஒரு அறை. "அம்மாடி!" என்று அவர் அலறிக்கொண்டு முகத்தில் பூசியிருந்த கரியுடனேயே வீட்டிற்கு எடுத்தார் ஓட்டம்!

சில குழந்தைகள், நாம் எதைச் செய்யக்கூடாது என்று பலமாய்க் கண்டிக்கிறோமோ அதை பிடிவாதமாகச் செய்வதோடு, அதையே மாற்ற முடியாத நிரந்தரப் பழக்கமாகவும் ஆக்கிக்கொண்டு விடுகின்றன. சாரங்கபாணியின் போக்கும் அப்படித்தானாகி விட்டது. நாடகத்தில் சேரக்கூடாதென்று பெற்றோர்கள் செய்த கண்டிப்புதான் சாரங்கபாணியை ஒரு நடிகராகவே ஆக்கிவிட்டது. கடவுள் இஷ்டம் அப்படியிருக்கையில் யார்தான் என்ன செய்யமுடியும்?

இரண்டொரு மாதங்களில் கன்னையாவின் கம்பெனி சென்னைக்குப் போய்விட்டது. எப்படியாவது சென்னைக்குப் போய் அந்தக் கம்பெனியில் சேர்ந்துவிட வேண்டுமென்ற விருப்பம் சாரங்கபாணிக்கு அளவு கடந்துபோய்க் கொண்டிருந்தது. இதேபோன்ற விருப்பம் அவருடைய நண்பர்கள் சிலருக்கும் இருந்தது. ஆதலால், ஒரு நாளைக் குறிப்பிட்டு, எல்லோரும் சென்னைக்குப் புறப்படுவதென்று தீர்மானித்தனர்.

குறிப்பிட்ட தினத்தன்று இரவு வீட்டிலுள்ளவர்களுக்குத் தெரியாமல், வேஷ்டியின்மேல் வேஷ்டியும், சட்டையின் மேல் சட்டையுமாக அணிந்துகொண்டு, வீட்டின் பின்புற வாயில் வழியாக வெளிவந்து, சாரங்கபாணி தம் பிரயாணத்தைத் தொடங்கினர்! உச்சிப்பிள்ளையார் கோயில்முன் முனிசிபல் கியாஸ் லைட் வெளிச்சத்தில் (அப்பொழுது மின்சார விளக்குகள் கிடையாது) கோலி விளையாடிக்கொண்டிருந்த தம் நண்பர்களை "போகலாம் வாருங்கள்" என்று அழைத்தார். அவருடன் முதலில் வருவதாக வாக்களித்த நண்பர்களுக்கு இப்போது தைரியமில்லை. சாரங்கபாணி உண்மையிலேயே புறப்பட்டுவிடக்கூடும் என்று அவர்களுக்கு முன்பே தெரிந்திருக்குமானல் இப்படி அவர்கள் வாக்களித்திருக்கவே மாட்டார்கள்போல் தோன்றியது! ஆனல் சாரங்கபாணி இதனல் மனம் குன்றவில்லை. "சரி, நான் போகிறேன்" என்று சொல்லி விட்டு ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தார்.

ஸ்டேஷனை அடைந்ததும், ஒரு புறமாக உட்கார்ந்திருந்த ஒரு வயோதிகரிடம், "போட் மெயில் வந்துவிட்டதா?" என்று விசாரித்தார் சாரங்கபாணி. "வரவில்லை" என்றார்

அவர். இவருக்கோ தூக்கம் கண்ணைச் சுழற்றியது. மெயில் வந்ததும் எழுப்புவதற்கு வயோதிகர் சம்மதித்ததனால் அவர் பக்கத்திலேயே படுத்துக்கொண்டு தூங்கிவிட்டார்.

மெயில் வந்ததும் வயோதிகர் சாரங்கபாணியை எழுப்பினர். அவரிடம் விடை பெற்றுக்கொண்டு, சாரங்கபாணி (டிக்கெட்டில்லாத காரணத்தால்) கம்பிக்கிராதிகளின் இடுக்கு வழியாகப் புகுந்து உள்ளே சென்று, வண்டியிலேறி உட்கார்ந்து கொண்டார். ரயில், பெருமையுடன் புறப்பட்டது.

அவர் ஏறியிருந்தவண்டியில் சில சிப்பாய் சாரங்கபாணியைக் கூப்பிட்டு, "நீயார்? உனக்கு அப்பா அம்மா இல்லையா" என்று கேட்டார். "ஒருவருமில்லை; நான் அனாதை, என்று சாரங்கபாணி கூறினர். சிப்பாய்க்கு அவர்மீது இரக்கம் ஏற்பட்டது. தம்முடன் வந்து வசிக்கும்படி சொன்னர். சாரங்கபாணி அதற்குச் சம்மதித்து சென்னையில் அந்த சிப்பாயுடன் நாலைந்து மாதங்கள் வசிக்கலானர். சிப்பாய் அவரை மிகப் பிரியத்துடன் நடத்தி வந்தார்.

ஒருநாள் காலை ஒன்பது மணியிருக்கும். அவர் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கையில், கன்னையா கம்பெனியின் "அலாவுதீன்" விளம்பர வண்டி அப்பக்கமாகச் சென்றது. அதைக் கண்டதும், அவர் சிப்பாயிடம் சொல்லிக் கொள்ளாமலே நேராக செங்காங்கடையிலிருந்த லக்ஷ்மி தியேட்டருக்குச் சென்றார். ஸ்ரீ. கன்னையா இவரைப் பார்த்ததுமே தம் கம்பெனியில் சேர்த்துக்கொண்டு விட்டார்.

ஐந்தாறு மாதங்கள் ஆனபின், (இக் கம்பெனியில் சித்திரக் காரராயிருந்த உஷன் பக்ஷ் அவர்களின் சிஷ்யரான) ஆர்டிஸ்ட் ரங்கபாக்ஷயமும், ஹார்மோனிஸ்ட் பத்மராவும், மிருதங்கம் குப்புஸ்வாமியும் இக் கம்பெனியை விட்டு பி. ஜகன்னதையரின் "மதுரை பால மீன ரஞ்சனி சங்கீத சபா"வுக்குச் சென்றனர். அந்தக் கம்பெனிக்கு வந்தால் சாரங்கபாணிக்கு நல்ல வேஷம் வாங்கித் தருவதாக அவர்கள் சொல்லிச் சென்றனர்.

இந்த சம்பவம் நடந்து 2 மாதங்களாகி விட்டன. கன்னையா கம்பெனி அப்பொழுது பூந்தமல்லியில் நாடக

மாடிக்கொண்டிருந்தது. முதல் நாளிரவு, "லவகுச" நாடகத்தில் குசனாக நடிக்கவிருந்த சாரங்கபாணி, பகல் போஜனத்தை முடித்துக்கொண்டு கம்பெனிக்குச் சென்றார். எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தனர். அவருக்கு என்ன தோன்றியதோ என்னவோ; சுருட்டி வைத்திருந்த படுதாவிலிருந்து ஒரு கஜம் துணியைக் கிழித்து அதை மேலே போர்த்திக் கொண்டு, சைதாப்பேட்டையில் நடந்து வந்த ஜகன்னாதய்யர் கம்பெனிக்கு கால் நடையாகவே புறப்பட்டார்.

பத்மராவ் இவரைக் கண்டதும் ஆனந்தம் பொங்கினார். கம்பெனி முதலாளி ஸ்ரீ. பி. ஜகன்னாதய்யரிடம் இவரைப் பற்றி அபாரமாய் புகழ்ந்தார். பெற்றோர்கள் அனுமதி யில்லாமல் யாரையும் சேர்த்துக் கொள்வதில்லை என்ற கொள்கை அக்கம்பெனியில் தீவிரமாய் அமுலிலிருந்தாலும், பத்மாவின் உறுதியின்மேல் சாரங்கபாணி சேர்த்துக்கொள்ளப் பட்டார்.

சங்கீதக்கலைக்கு தியாகய்யர்வாள் எப்படியோ அப்படி நாடகக் கலைக்கு ஸ்ரீலஸ்ரீ சங்கரதாஸ் ஸ்வாமிகள் என்று சொல்லலாம். தற்போது நாடகங்களிலும் சினிமாவிலும் நடித்து வருபவர்களில் பெரும்பாலோர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளால் பயிற்று விக்கப்பட்டவர்களாவர். சாரங்கபாணியும் அவரிடம் பயிற்சி பெற்றவர்தான் என்பது குறிப்பிடத் தக்கது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அந்த சமயம் ஜகன்னாதய்யர் கம்பெனியில் இருந்து வந்தார். இக்கம்பெனியின் புராண நாடகங்களை ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளும், நாவல் நாடகங்களை எம். கே. ராதாவின் தந்தையாரான ஸ்ரீ கந்தஸ்வாமி முதலியாரும் பயிற்றுவித்து வந்தனர். எஸ். ஜி. கிட்டப்பா நாடக மேடையில் தோன்ற ஆரம்பித்த காலம் அது.

ஜகன்னாதய்யர் கம்பெனியில் முதன் முதலாக **பிரஹலாதா** நாடகத்தில் சாரங்கபாணி பபூன் வேஷம் போட்டுக்கொண்டு மேடைக்கு வந்து பாடினார். அன்று முதல் அவர் ஜனங்களின் அபிமான நடிகராக ஆகிவிட்டார். ஒவ்வொரு நாடகத்திலும் அவர் ஆறு ஏழு தடவையாவது பபூன் வேஷத்துடன் மேடைக்கு வரவேண்டி யிருக்குமாம். போகாவிட்டால், "சாரங்கபாணி, சாரங்கபாணி!' என்று சபையோர் கூச்சலிடுவார்களாம். இதற்குப் பயந்து அவர் எங்காவது

ஒரு மூலையில் போய் மறைவாய்ப் படுத்துக் கொள்ளுவாராம். இருந்தாலும் விடாமல் கொண்டிருந்தபடியே மேடைக்கு அனுப்பி வைப்பது வழக்கமாம் அந்தக் காலத்திலேயே அவருக்கு அவ்வளவு பொதுஜன ஆதரவு இருந்து வந்ததாம். முதல் தடவையாக அவருக்கு, பிரபல பாடகியாயிருந்து வந்த ஸ்ரீமதி வனஜாட்சி அம்மாள் ஒரு தங்க மோதிரத்தைப் பரிசளித்தார். அதன் பிறகு அவர் இன்றுவரை எவ்வளவோ பரிசுகளைப் பெற்றிருக்கிறார்.

மேற்படிக் கம்பெனியில் சில வருஷங்கள் இருந்தபின்னர் சாரங்கபாணி சங்கீதத்தை மறுபடியும் பயமுறுத்தலானார்! கும்பகோணம் சிவவடிவேல் பிள்ளையவர்களிடம் மீண்டும் பிடில் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அவர் ஆரம்பத்தில் சாதகம் செய்வதில் காட்டிய அபார சிரத்தையைப் பார்த்தவர்கள். கூடிய சீக்கிரத்தில் அவர் "பிடில் வித்வான் சாரங்கபாணி பிள்ளை" ஆகிவிடக்கூடும் என்று எண்ணினர். இவ்வளவு பேர்கள் இப்படி எதிர்பார்க்கிறார்களே என்பதற்காகவாவது அவர் பிடில் வித்வானாகி யிருக்கலாம்! ஆனால் அந்தப் பிடில் அவருக்குச் சொன்னபடி கேட்டால்தானே? விரலை வைத்ததும் வைக்காததுமாய் ராகம், கீர்த்தனை, ஸ்வரம் எல்லாம் புரண்டோடிக் கொண்டு வரவேண்டாமா? ஆனால் வரவில்லை! பிடிலைக் கீழே வைத்துவிட்டு யோசித்தார் சாரங்கபாணி: "இது ரொம்பப் பொல்லாத வாத்யம். எப்படித் தேர்ச்சி அடைவது? எப்பொழுது புகழ்பெறுவது? ஆகாத காரியம்...." என்று. இனி இந்த முயற்சியில் இறங்குவதேயில்லை என்று சத்தியம் செய்துகொண்டு சிக்ஷைக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டார்.

சொற்ப காலம் இவ்விதம் சிக்ஷை சொல்லிக் கொண்ட போது அவர் ஒரு அரிசி மில்லில், நான்கு ரூபாய் சம்பளத்தில், நெல்லை இயந்திரத்தில் வாரிக்கொட்டும் வேலையையும் செய்து வந்தார். வில்லிற்கு ஒரு முடிவு கட்டியதுபோலவே மில்லிற்கும் ஒரு முடிவு கட்டிவிட்டுப் புறப்பட்டார் சாரங்கபாணி. ராஜாம்பாள் கம்பெனி மூலம் மீண்டும் நாடகமேடையிலேறினர்.

அந்தச் சமயத்தில் இந்தக் கம்பெனியில்தான் "இந்தி

யன் சார்லி" என்று புகழப்பட்டு வந்த பிரபல வி. எஸ். சாமண்ணா ஐயர் நடித்து வந்தார். **டம்பாச்சாரி** நாடகத்தில் சாமண்ணாவின பதினொரு வேஷங்கள் அதிக பிரசித்த மானவை. இந்த நடிப்பை தாம் பார்த்த பின்தான், தமக்கு உயர்ந்த முறையில் ஹாஸ்யமாக நடிக்க வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டது என்று கூறுகிறார் சாரங்கபாணி.

ராஜாம்மாள் கம்பெனியில் சாரங்கபாணி சுமார் ஒரு வருஷகாலந்தா னிருந்தார். பிறகு மீண்டும் ஜெகன்னாதய்யர் கம்பெனியிலேயே 1928-ம் வருஷத்தில் சேர்ந்தார். அவர் சேர்ந்த சமயத்தில், புதுக்கோட்டை சமஸ்தான வித்வான் சிதம்பர பாகவதரவர்களால் எழுதப்பட்ட **பக்த ராமதாஸ்** நாடகத்திற்கு ஒத்திகை நடந்து கொண்டிருந்தது.

இந்தக் கதையில் வரும் **மிளகாய்ப் பொடி பார்ஸ்** நாடகத்திலும் சரி; சினிமாவிலும் சரி; பிரசித்தமானது. இந்த "பார்ஸி"ல் சாஸ்திரிகள் வேஷத்தில் ஸ்ரீ. டி. பி. பொன்னுசாமி பிள்ளை நடிப்பதா யிருந்தது. ஆனால் என்ன காரணத் தாலோ அவர் திடீரென்று இந்தப் பாகத்தில் சாரங்க பாணியை நடிக்கும்படி செய்தார். ஒத்திகையே யில்லாமல் குருவின் ஆசீர்வாத பலத்தை மட்டும் கொண்டு சாரங்க பாணி மேடைக்குச் சென்றார்; திரும்புகையில் நிறையப் பாராட்டுதலுடன் வந்து சேர்ந்தார்.

சாமண்ணாவின் பதினொரு வேஷம் சாரங்கபாணியின் மனதைப் பரிதும் கவர்ந்தன என்று சொன்னேனல்லவா? அதன் விளைவாக அவர் **ராம்தாஸ்** நாடகத்தில் தம் சொந்த கற்பனையின்பேரில் தமக்கென பதினோரு வேஷங்களைச் சிருஷ்டித்துக்கொண்டார். இன்றையப் புகழுக்கு அவரைக் கொண்டுவந்து விட்டது இந்த ராம்தாஸ் நாடகந்தான்.

சாரங்கபாணியின் ஹாஸ்ய நடிப்பை உருப்படுத்தி, உத்சாகமூட்டி, புகழடையும்படி செய்தவர் அவரது குருவான ஸ்ரீ. பி. டி. சம்பந்த முதலியார் என்று குறிப்பிட வேண்டியது அவசியம். ஸ்ரீ. முதலியார் இப்பொழுது என். எஸ். கே. நாடக சபாவில் இருந்துவருகிறார். ஹாஸ்ய பாகத்தை அவர் அபாரமாய் நடிக்கக்கூடியவர் என்பதை நேரி

லேயே பார்த்து வருகிறோம். பஞ்சாமிர்தம் படத்தில் ஒரு பகுதியான திருவாழ்த்தான் காமிக்கிற்கு வசனம் எழுதியவர் இவர் தான்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு சாரங்கபாணியும், சஹ நடிகராயிருந்த நவாப் ராஜமாணிக்கமும் ஜகன்னாதய்யர் கம்பெனியிலிருந்து விலகினர். இருவரும் வேறொரு கம்பெனியில் 3 வருஷ காலம் நடித்தபின், ஸ்ரீ ராஜமாணிக்கம் தம் சொந்தக் கம்பெனியை ஆரம்பித்தார். ராம்தாஸ் நாடகம் இந்தக் கம்பெனிக்கு மட்டுமல்லாமல் சாரங்கபாணிக்கும் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுத்தது. பிறகு ராம்தாஸ் நாடகம் அப்படியே சினிமாப் படமாக்கப் பட்டது. மேடையில் என்னென்ன வேஷங்களில் தோன்றினரோ அதே வேஷங்களில் சினிமாவிலும் தோன்றி ரஸிகர்களின் மிகுந்த பாராட்டுதலைப் பெற்றார் சாரங்கபாணி. 1936-ம் வருஷத்தில் ராஜமாணிக்கம் கம்பெனியிலிருந்து அவர் விலகி, துகாராம், ரம்பையின் காதல் ஆகிய இரு படங்களிலும் நடித்தார். இந்தப் படங்கள் முடிந்த பின்னர், மீண்டும் டி. பி. பொன்னுசாமி பிள்ளையின் நாடகக் கம்பெனிக்குச் சென்றார். அதன் பிறகே சினிமா உலகம் அவரைப் பூராவாக ஆகர்ஷித்துக்கொண்டது. சக்குபாய், சகுந்தலா, வேணுகானம்' சாவித்திரி, திருவாழ்த்தான், சபாபதி, என் மனைவி, காரைக்கால் அம்மையார், பூம்பாவை, எம். எஸ். நடித்த மீரா, உதயணன், லவங்கி ஆகிய படங்களிலெல்லாம் அவர் நடித்திருக்கிறார். இவைகளில் சக்குபாய் சபாபதி, என் மனைவி, பூம்பாவை, ஆகிய படங்களில் அவரது நடிப்பு மறக்க முடியாததாய் இருக்கிறது. கடைசியாக அவர் நடித்துள்ள நாம் இருவர் படத்தில் அவர் நடிப்பில் மற்றுமோர் படிமேலேறி விட்டார். ராமசாமி பிள்ளையின் குணவிசேஷ பாத்திரத்தை சாரங்கபாணி அதி திறமையுடன் நடித்துக்காட்டியிருக்கிறார். தற்போது அவர் வேதாள உலகம் ஏகம்பவாணன், சிவயோகி ஆகிய படங்களில் ஏக காலத்தில் நடித்து வருகிறார். சிவயோகியில் அவருடைய வேஷம் பிரமாதமாய் இருக்கும்போலிருக்கிறது.

காமெடியன் சாரங்கபாணி ஒரு உயர்ந்த ஹாஸ்யநடிகர். அவரது நடிப்பு அதிக நஹாஸ் பெற்றது. ஆபாசமாக நடிப்பதற்கு அவர் இணங்குவதேயில்லை. அதனால்தானே என்னமோ அவர் நிறையப் படங்களில் நடிக்கவில்லை. சதா

சர்வகாலமும் படத்தில் நடிப்பது ஒன்றையே அவர் குறியாகவும் கொள்ளவில்லை. இந்தக் காரணங்களினுலேயே சினிமா ரஸிகர்கள் அவருக்கு நல்ல மதிப்பு கொடுத்து வருகின்றனர்.

சினிமா ரஸிகர்கள் மட்டுமல்ல; படத்தொழிலிலும் அவருக்கு நல்ல மதிப்புக் கொடுக்கப்படுகிறது. தங்கமான குணமுடையவர்; தம் ஜோலியுண்டு தாமுண்டு என்று நடந்துகொள்ளுவார் அவர் மட்டும், மரியாதை, விசுவாசம் போன்ற நல்ல குணங்களை அவரிடம் பூரணமாய்க்காணலாம். சிநேகிதர்களிடம் எல்லையற்ற பிரியத்துடன் நடந்துகொள்ளுவார். குடி, சிகரேட் போன்ற கெட்ட பழக்கங்கள் எதுவும் அவருக்குக் கிடையாது.

சாரங்கபாணியின் முக கோணல்கள் மிகப் பிரசித்தமானவை; அவற்றைப் பார்த்தவுடன் நமக்கு (முக்கியமாகக்) குழந்தைகளுக்கு சிரிப்பு பீரிட்டுக்கொண்டுவரும். நல்ல வேளையாக, இந்தக் கோணல்கள் அவருடைய நடத்தையிலும் பழக்க வழக்கங்களிலும் புகுந்துகொள்ளாமலிருந்தனவே!

சாரங்கபாணியின் சொந்த ஊர் கும்பகோணம். இசை வேளாளர் குலத்தில், ஜெகதாம்பாள் அம்மாளின் கடைசி புத்திரராய் பிறந்த அவருக்கு நான்கு தமையன்மார்களும், ஒரு தமக்கையும் இருக்கின்றனர். ஒரு தமையனுர் (சின்ன ராஜண்ணு) நாதஸ்வரத்தில் பிரபலமாயிருக்கிறுர். இதே பெயருடைய இன்னெருவர் கும்பகோணத்தில் ஒரு போட்டோ ஸ்டுடியோவை நடத்திவருகிறுர். மற்றெருவர்தான் மிருதங்கம் வாசித்து வரும் தம்புஸ்வாமி பிள்ளை ஒரு தமையனுர் பால்யத்திலேயே சாமியாராகப்போய்விட்டாராம்.

இரண்டாவது உலக மஹாயுத்தம் ஆரம்பமான அன்றையதினமே சாரங்கபாணி திருமணம் செய்துகொண்டு தம் வாழ்க்கையில் அமைதியை ஆரம்பித்துக் கொண்டார்! அவருக்கு ஒரு ஆண்; ஒரு பெண்; ஆக இரண்டு குழந்தைகளிருக்கின்றன.

சுமார் 36 வயதான சாரங்கபாணி பள்ளிக்கூடத்தில் 3-வது வகுப்பு வரைத்தான் படித்திருக்கிறுர். ஆனுல் அதன்

பிறகு தம் தமிழ் ஞானத்தைத் தாமாகவே விருத்திசெய்து கொண்டிருக்கிறார். தேசீய மனப்பான்மை உடைய அவர் தற்போது ஹிந்தி பாஷையைக் கற்றுக்கொள்ள முயற்சித்து வருகிறார்.

சாரங்கபாணி இந்த உன்னத பதவியை அடைவதற்குள் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார். இருந்த போதிலும், "அடுத்த ஜென்மத்தில்கூட நான் நடிகனாகவே தான் பிறக்க விரும்புகிறேன்" என்று அவர் உத்ஸாகத் துடன் கூறுவதைப் பாருங்கள்! அவருக்கு நடிப்புக் கலையில் எவ்வளவு ஆர்வம் இருக்கிற தென்பது இதன் மூலம் தெரிகிற தல்லவா?

## கொத்தமங்கலம்

# வி. எஸ். ஸ்ரீனிவாசன்

ஸினிமா உலகில் "கொத்தமங்கலம்" என்ற ஊரின் பெயரை பிரசித்தி அடையச் செய்தவர்கள் கொத்தமங்கலம் சீனுவும், கொத்தமங்கலம் சுப்புவும் ஆவர். சீனு பாட்டைப் பிரதானமாகக் கொண்ட நடிகர். சுப்புவோ ஹாஸ்யத்தை பிரதானமாகக் கொண்டு நடிப்பவர். சினிமாவில் நடப்பதைத் தவிர சீனு சங்கீதக் கச்சேரி செய்கிறார்; நாடகங்களில் நடிக்கிறார். சுப்புவோ சினிமாவில் நடிப்பதுடன் படங்களுக்கு கதை, வசனம், பாட்டு எழுதுகிறார்; படங்களை டைரெக்ட் செய்கிறார்; பத்திரிகைகளுக்கு விஷயதானம் அளிக்கிறார். இவர்கள் சில படங்களில் சேர்ந்து நடித்திருக்கின்றனர்; பல வருஷங்களாக ஒன்றாகவே வசித்து வருகின்றனர். இந்த "சகோதரர்களி"டையே காணப்படும் மன ஒற்றுமையும், 'சகோதரத்துவமு'ம் ஆச்சரியப்படத் தக்கவையாகும். ஆனால் இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் (பலர் நினைத்திருப்பதுபோல) இவர்கள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்களல்ல! இவர்களுடைய சொந்த ஊரும் கொத்தமங்கலம் அல்ல!

கொத்தமங்கலம் சீனுவின் (வி. எஸ். ஸ்ரீனிவாசன்) ஊர் சோழவந்தான். அவர் கொத்தமங்கலத்தில் சிலகாலம் தங்கியதால், பிரபலம் அடையத் தொடங்கிய ஸ்ரீனிவாஸனின் பெயரை அவ்வூர் விட மறுத்துவிட்டது. அவருடைய தகப்பனரான ஸ்ரீ, சுப்ரமண்ய ஐயர் கலெக்டர் ஆபீஸில் 'காபிஸ்ட்' உத்தியோகம் பார்த்து வந்ததோடு, சங்கீதத்திலும் மிகுந்த ஞானமுடையவராய் இருந்தார். ஆதலால் சீனுவுக்கும் சிறு வயதிலேயே சங்கீதத்தில் இயற்கையான பற்று ஏற்பட்டதில் ஆச்சரியமென்ன? .

"சீனு" சௌமிய (1910-ம்) வருஷம் மாசி மாதம் பிறந்தவர். அவருடன் பிறந்தவர்கள் இரு சகோதரிகள்

மட்டும்தான். அவர் ஐந்தாவது வயதில் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து, மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் மூன்றுவது பாரம் வரையில் படித்தார். பின்னர் சில காரணங்களினல் படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று. படிப்பை நிறுத்தியபின் அவர் தம் 13-வது வயதில் சங்கரதாஸ் பாய்ஸ கம்பெனியில் ஒரு பால நடிகனுகச் சேர்ந்தார். இந்தக் கம்பெனியில் அவர் இரண்டு மூன்று வருஷகாலம் இருந்துவிட்டு விலகினர். பின்னர் பல நாடகக் கம்பெனிகளில் சுமார் இரண்டு வருஷ காலம் நடித்துவந்தார். அப்பொழுதெல்லாம் அவருக்கு ஸ்திரீ வேஷங்களே கொடுக்கப்பட்டு வந்தன.

அவருக்கு 18 வயதான சமயத்தில், அவர் வத்ரா யிருப்பு சாமா ஐயங்காரிடம் இரண்டு வருஷகாலம் சங்கீத சிக்ஷை சொல்லிக்கொண்டார். பிறகு சிக்ஷையை முடித்துக்கொண்டு அவர் கானுடுகாத்தானுக்குச் சென்று வசித்தார். அங்கு, அவர் மீண்டும் நாடகத்தில் ஈடுபடலானுர்.

இப்படி ஒரு வருஷம் கழிந்ததும், அவர் கொத்தமங் கலத்திற்கு தம் வாசஸ்தலத்தை மாற்றிக்கொண்டார். கொத்த மங்கலத்தில் குடியேறிய ஸ்ரீனிவாஸன் அந்த ஊரில் சங்கீதம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். அவருடைய பாட்டைப் பற்றிக் கேள்விப்பட்ட "ஓடியன்" கம்பெனியார், அவரைத் தேடிப் பிடித்து, அவருடைய பாட்டுகளை இசைத் தட்டுகளில் பதியவைத்தனர். அந்த இசைத் தட்டுகள் நிறைய விற்பனை யாயினவாம்.

இதே சமயத்தில் இன்னெரு முக்கிய சம்பவமும் நிகழ்ந் தது. 1932-ம் வருஷத்தில் அவருக்குத் திருமணம் நடந் தேறியது. மிருதங்க வித்வான் திண்ணியம் வெங்கட்ட ராமய்யரின் புத்ரி அவரது வாழ்க்கைத் துணைவியானுர். தற்போது அவருக்கு ஒரு பெண்ணும் நான்கு பிள்ளைகளும் இருக்கின்றனர்.

இசைத் தட்டுகள் மூலம் ஸ்ரீனிவாஸனின் பாட்டுகள் பிரசித்தம் அடையவே, ஸ்ரீமான்கள் டி. வி. வடிவேல் நாய்க்கரும், வி. எஸ். குஞ்சிதபாதமும் கொத்தமங்கலத்திற்கு விஜயம் செய்து, அவரைத் தங்கள் (லோடஸ்) சாரங்கதரா

படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்தப் படத்திலும், அவர்களது அடுத்த படமான (ஒரிஜினல்) பட்டினத்தாரிலும் ஸ்ரீனிவாசன் பிரதம பாகத்தில் நடிக்கலானார்.

ஸ்ரீனிவாஸனின் துரதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்; இவ்விரண்டும் போட்டிப் படங்களாக முடிந்தன. மற்றவருக்குமுன் தம் படத்தை வெளியிட்டுவிட வேண்டும் என்பதற்காக இவை அவசர அவசரமாகத் தாயாரிக்கப் பட்டன. பட்டினத்தார் படம் பதினைந்தே நாட்களில் தயாரிக்கப் பட்டதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! இதன் விளைவாக இரு படங்களும் படுதோல்வி யடைந்தன. நல்ல வேளையாக இசைத் தட்டுகள் மூலம் அவருக்குக் கிடைத்திருந்த புகழானது அவரைக் காப்பாற்றின.

பின்னர் அவர் ஸௌண்ட் ஸிடி தயாரித்த மீரா பாயிலும், விப்ரநாராயணாவிலும் நடித்தார். துளஸி பிருந்தாவில் அவருக்கு நாரதர் வேஷம் கொடுக்கப்பட்டது. பிறகு சுகுண சரஸா சமூகப் படத்திலும், ராயல் டாக்கீஸ் சக்குபாய், மணிமேகலை, திருமங்கை ஆழ்வார், சூர்ய புத்ரி சக்குபாயிலும், திருமங்கை ஆழ்வாரிலும் அவருடைய பாட்டுகள் மிக நன்றாயிருந்தன.

பின்னர் வந்தது கச்ச தேவயானி; அவருக்கு நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுத்தது. அவருடைய நடிப்பு, பாட்டு இரண்டையுமே ரஸிகர்கள் மிகப் பாராட்டினர். அதன் பிறகு அவர் இணையற்ற நக்ஷத்திரம் ஆகிவிடுவார் என்று அவர்கள் எதிர் பார்த்தனர். "சீனு" கிருஷ்ண பிடாரன், சோகா மேளர், பக்த நாரதர், தாஸி அபரஞ்சி, சகடயோகம், பொன்னுருவி ஆகிய படங்களில் தொடர்ந்து நடித்தார். ஆனால் இப் படங்கள் எதிலும் அவருக்கு கச்சதேவயானி யவ்வளவு புகழ் கிடைக்கவில்லை. "அபரஞ்சி"யில் அவர் பாடியிருக்கும் பாட்டுகள் மட்டும் நன்றாயிருக்கின்றன.

"சீனு" நடித்திருக்கும் படங்களைப் பரிசீலனை செய்கையில் ஒன்று தென்படுகிறது. அவர் நடித்திருக்கும் பதினைந்து படங்களில், ஐந்து படங்கள் இருமுறையும், ஒரு படமோ மூன்றாவது முறையும் தாயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இதனாலேயே அவருடைய வெற்றி ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது.

"சீனு" இனிய குரலும், நல்ல சங்கீத ஞானமும் பெற்றவர். அதோடு சுமாராக நடிக்கக் கூடியவர் என்பது முந்தின படங்கள் மூலம் தெரியவருகிறது. இருந்தும்கூட படமுதலாளிகள் அவருக்கு கச்ச தேவயானியைப் போல நிறைய சந்தர்ப்பத்தை அளித்து, அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளாததேன் என்றுதான் விளங்கவில்லை ?

சிவந்தமேனியும், சுமார் 5¼ அடி உயரமும் உள்ள சீனு இப்பொழுது சங்கீதக் கச்சேரிகள் செய்வதில் மிகுந்த அக்கரை செலுத்தி வருகிறார். அத் துறையில் அவருக்கு நாளடைவில் ஆதரவு அதிகரித்து வருகிறது. அதோடு அவர் ரேடியோவிலும் அடிக்கடி பாடிவருகிறார். ஸ்பெஷல் நாடகங்களிலும் நடித்து வருகிறார்.

தற்போது அவர் **துளஸி ஜலந்தரில்** நாரதராகவும், **ஏகம்பவாணன் மஹாத்மா உதங்கர், மானவாதி,** அருணாவின் **ஜயஹாரப்பன்** ஆகிய படங்களின் பிரதம பாகங்களிலும் நடித்துவருகிறார். இந்தப் படங்களிலாவது அவருடைய சங்கீதம், நடிப்பு இவை சரிவர பயன்படுத்தப் படுகின்றனவா என்று பார்ப்போம்.

# கொளத்து மணி

உங்களில் யாருடைய தம்பியாவது சொல்லிக்கொள்ளாமல் சினிமாவில் போய்ச் சேர்ந்துவிட்டால், அவனைக் கண்டு பிடித்து அழைத்து வருவதற்காக நீங்கள் புறப்படவேண்டாம். நான் சொல்வதைக் கேளாவிட்டால், கொளத்து மணிக்கு ஏற்பட்ட கதிதான் உங்களுக்கும் ஏற்படக்கூடும். அடேயப்பா! சினிமாத்தொழில் ரொம்பவும் பொல்லாத தொழில் அல்லவா! வீட்டைவிட்டு சொல்லிக்கொள்ளாமல் வெளியேறிய தம் தம்பி சினிமாவில் சேர்ந்திருப்பதை அறிந்த கொளத்து மணி, அவரைச் "சிண்டைப் பிடித்து இழுத்து வருவதற்காக"ப் புறப்பட்டார். பாவம், முடிவு என்னவென்றால், அவருடைய சிண்டே சினிமாவில் சரியாக மாட்டிக்கொண்டு விட்டது!

கொளத்து மணி என்ற சினிமாப் பெயர்கொண்ட ஹரிஹர சுப்ரமண்ய ஐயர் சினிமாப் படங்களில் நடிக்க வருமுன் பலவித தொழில்களைச் செய்து, வாழ்க்கையில் பலதரப்பட்ட அநுபவங்களைப் பெற்றிருக்கிறார். காரைக்குடி மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஹைஸ்கூலில் படித்துக்கொண்டிருக்கும் போதே அவருக்கு மிகுந்த தேசிய உணர்ச்சி ஏற்பட்டது. அந்நகரில் பாரத ஆஸ்ரமத்தை ஸ்தாபித்து மக்களிடையே தேசிய உணர்ச்சியைப் பரப்பிவந்த தேசத்தியாகி ஸ்ரீ சுப்ரமண்ய சிவாவின சேவை ஸ்ரீ மணியின் மனதைக் கவர்ந்தது. பள்ளிப்படிப்பை உதறிவிட்டு ஸ்ரீ. மணி ஸ்ரீ. சிவாவின் கோஷ்டியில் சேர்ந்து சேவை புரியும் பாக்கியத்தைப் பெற்றார்.

இப்படிக் கொஞ்ச காலம் கழிந்தபின், "குமரன்" பத்திரிகை ஆசிரியரான ஸ்ரீ. சொ. முருகப்பா தம் பத்திரிகையின் வெளிநாட்டுப் பிரசார நிமித்தம், பர்மா, சிங்கப்பூர், மலேயா முதலிய நாடுகளுக்கு மணியை அழைத்துச் சென்றார். இந்தியா திரும்பியதும், காரைக்குடி சேஷசாயி மோட்டார் ஸர்விஸில் சொற்பகாலம் ஏஜண்டாக இருந்தார். இச்சமயத்தில் அந்நகரில் எஸ். ஜி. கிட்டப்பா சகோ

தார்களின் நாடகங்கள் நடந்துகொண்டிருந்தன. இந்த நாடகங்களில் ரொம்பவும் லயித்துப்போன மணி, அந்தக் கோஷ்டியிலே சேர்ந்து முதன் முதலாக நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார்.

பின்னர் மணி இலங்கைக்குச் சென்று வியாபாரத் துறையில் ஈடுபட்டார். அச்சமயத்தில் இலங்கைக்குச் சென்ற நாடகக் கம்பெனிகளுக்கு தம்மாலான உதவிகளைச் செய்திருக்கிறார். ஆனால் வியாபாரத்தில் அவர் மனம் அதிக நாள் நீடித்திருக்கவில்லை. இந்தியாவுக்குத் திரும்பிவந்து, ஆரிய கான சபையில் பி. எஸ். வேலு நாயர், அனந்த நாராயணய்யர் ஆகியோருடன் நடித்து அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றார். பிறகு தம் சொந்த ஊரான கல்லிடைக்குறிச்சிக்கே சென்று, தம் சகோதரியின் கணவரான டாக்டர் எஸ். கே. சர்மாவிடம் அவர் கம்பௌண்டராக அமர்ந்தார். கலை ஆர்வம் கொண்டிருந்த மணிக்கு கம்பௌண்டர் வேலை பிடிக்காமற் போனதில் ஆச்சரியமென்ன? அவ்வேலையை விட்டுவிட்டு அவர் நாடக கண்டிராக்ட்களை எடுத்துக்கொண்டு நடத்த ஆரம்பித்தார்.

இப்படியாக தம் பிள்ளை ஒரு தொழிலிலும் ஸ்திரமாக அமராமல்போனது அவருடைய தகப்பனாரான நாராயணய்யருக்கு கவலையை அளித்தது. ஒரு வேளை விவாஹத்தைச் செய்து வைத்தாலாவது மணியின் மனதில் ஸ்திரமான எண்ணங்கள் பதியலாம் என்ற நம்பிக்கையுடன் அவர் மணிக்கு விவாஹத்தை நடத்தி வைத்தார். மணியின் வாழ்க்கை ஸ்திரப்பட்டது; ஆனால் அவரது தொழிலென்னமோ பழைய மாதிரியிலேயே இருந்தது!

திருநெல்வேலி சந்திர விலாஸ் ஹோட்டலில் கொஞ்ச காலம் மனேஜராயிருந்து விட்டு, மணி சொந்தத்திலேயே ஒரு ஹோட்டலை ஆரம்பித்தார். சுபாவத்தில் நண்பர்களை விரும்பி நெருங்கிப் பழகும் குணமுடையவர் மணி. எனவே அவர் ஹோட்டல் ஆரம்பித்தது அவருடைய நண்பர்களுக்கு சௌகரியமாயிருந்திருக்கும்! ஆனால், அவருக்கு அதனால் லாபம் ஏற்படவில்லை! ஆதலால், ஹோட்டலை மூடிவிட்டு மணி கோல்டன் கம்பெனியில் சேர்ந்து, அதன் நிர்வாகத்தை

ஏற்று நடத்தலானார். இந்த சமயத்தில்தான் பிரபல நடிகர் எம். வி. மணிக்கும் அவருக்கும் நட்பு ஏற்பட்டது.

கொளத்து மணிக்கு சகோதரர்கள் இருவர். இவர்களில் ஒருவரான கே. என். ராமலிங்கமும் நடிப்புக் கலையில் ஆசைகொண்டவர். அவர் ஒரு நாள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் திடீரென்று சென்னைக்கு வந்து, திருப்பூர் டாக்கீஸாரின் வசந்தசேனாவில் நடிக்க ஒப்புக்கொண்டு பம்பாய்க்குச் சென்றுவிட்டார்.

தம்பியைத் தேடிய வண்ணமே அண்ணா சென்னையை அடைந்தார். அங்கு ஓரியன்டல் பில்ம்ஸில் மானேஜராக இருக்கும் ஸ்ரீ. ராமச்சந்திரன் என்ற நண்பரைச் சந்தித்தார். மணி நாடகங்களில் நன்றாக நடித்துப் பெயர் வாங்கியிருந்தது அவருக்குத் தெரியும். ஆதலால் எப்படியும் மணியை சினிமாவில் சேர்த்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன், அவருக்கு நிறைய உபதேசம் செய்து, அவரது மனதை மாற்றிவிட்டார் ஸ்ரீ. ராமச்சந்திரன். அதோடன்றி நேஷனல் மூவிடோனின் மூன்று முட்டாள்கள் என்ற ஹாஸ்யத் துண்டுப் படத்தில் ஒரு வேஷத்தையும் அவர் மணிக்கு வாங்கிக் கொடுத்தார். இந்தத் துண்டுப் படம் பார்வதி கல்யாணம் தமிழ்ப் படத்துடன் காட்டப்பட்டது.

மணி சினிமா உலகில் பிரவேசித்த வேளை ரொம்ப நல்ல வேளையாகத்தான் இருக்கவேண்டும். இல்லையென்றால் சினிமா உலகம் அவரை விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டு விடுமா என்ன? இன்றுவரை அவர் முப்பத்திரண்டு படங்களில் நடித்துவிட்டார். இன்னமும் அரை டஜனுக்கு மேற்பட்ட படங்களில் அவர் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இரண்டாவது படமாக மணி சீமந்தனியிலும், பிறகு சேதுபந்தனத்திலும் நடித்தார். இவை முடிந்ததும் அவர் பம்பாய்க்குச் சென்று, தர்மபுரி ரகஸியம், நந்தகுமார், வீரமணி, பாக்யலீலா, பாரத் கேஸரி, ஜெயக்கொடி ஆகிய படங்களிலெல்லாம் நடித்தார். வனராஜ் கார்ஸான், பாரத் கேஸரி ஆகிய இரண்டு படங்களையும், இவரும் எஸ். ஆர். கிருஷ்ணய்யங்காருமாக பொறுப்பேற்று, வாடியா மூவிடோனுக்குத் தயாரித்துக்

கொடுத்தார்கள். தமிழ்ப் படங்கள் ஒரு புறமிருக்க மணி குல் தீபக், சபுக்வாலி போன்ற சில ஹிந்திப் படங்களிலும் உப பாத்திரமேற்று நடித்திருக்கிறார்.

மணி பம்பாயில் படங்களில் நடித்துக்கொண்டிருந்த சமயத்தில், அவ்வப்போது அங்குள்ள தென்னிந்திய நாடக சபாக்காரர்களுக்கு நாடகங்களை நடத்திக் கொடுத்திருக்கிறார். சந்திரவதனுள் என்ற நாடகத்தில் ஸ்வாமிநாத சாஸ்திரி சாஸ்திரி வேஷத்தில் மணி ரொம்பவும் புகழ் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்.

ஜெயக்கொடி படம் முடிந்ததும் மணி சென்னைக்கு வந்து விட்டார். வந்ததும் வராததுமாய் அவர் எஸ். எஸ். போலிப் பாஞ்சாலி ஆகிய துண்டு ஹாஸ்யப் படங்களில் நடித்தார். பிறகு திருமங்கை ஆழ்வார், காமதேனு, திருவள்ளுவர், வேணுகானம், குமாஸ்தாவின் பெண், வனமோஹினி, ஜெமினி நந்தனர், கண்ணகி, சோகாமேளர், ஆர்யமாலா, மங்கம்மா சபதம், பிரபாவதி, உத்தமி, பரஞ்சோதி, காரைக்கால் அம்மையார், ஜெகதலப்ரதாபன், கண்ணம்மா என் காதலி, உதயணன் வாஸவதத்தை, ஆரவல்லி, சகடயோகம், பொன்னுருவி, ஆகிய படங்களில் நடித்திருக்கிறார்.

தமிழ்ப்பட உலகில் கொளத்து மணியைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. எந்தப் படமுதலாளி அவரைக் கூப்பிட்டபோதிலும் அவர் மறுக்காமல் நடிக்க ஒப்புக் கொள்ளுகிறார். வேஷம் சின்னதா பெரிதா என்று அவர் கவலைப்படுவதே யில்லை. நிறைய சந்தர்ப்பம் கொடுத்தார்களானுல் சரி; அப்படிக் கொடுக்காவிட்டால் கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைவது என்பது அவரது கொள்கையாம்.

மணி நடித்திருக்கும் எல்லாப் படங்களிலும் ஜெயக்கொடி. வனமோஹினி, மங்கம்மா சபதம் ஆகிய படங்களில் நடிப்பதற்கு நிறைய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இப்படங்களின் மூலம் அவருக்கு நல்ல பெயரும் ஏற்பட்டிருக்கிறது. இவை தவிர நந்தகுமார், வீரமணி, பாக்ய லீலா, வேணுகானம், குமாஸ்தாவின் பெண் ஆகிய படங்களிலும் அவருடைய நடிப்பு குறிப்பிடத் தக்க முறையிலிருக்கிறது.

1906-ம் வருஷம் மார்ச்சு மாஸம் 21-ந்தேதி பிறந்தவரான கௌளத்து மணி தற்போது **வேதாள உலகம், ஏகம்பவாணன், கிருஷ்ண பக்தி, மஹாத்மா உதங்கர், தியாகி, சிகாமணி,** (மாடர்ன்) **மஞ்சுளா** ஆகிய படங்களின் நடிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். ஆடம்பரமற்ற வாழ்க்கையும், எல்லோருடனும் அன்புடன் பேசிப் பழகும் சுபாவமுடைய மணி ஐயர், படத்தயாரிப்பின்போது படமுதலாளிகளுக்கும், டைரக்டர்களுக்கும் பேருதவியாயிருந்து வருகிறார். ஒழிந்த வேளைகளில் அவர் சர்க்கா சுற்றிக்கொண்டிருப்பதை நாம் காணலாம். சினிமாவில் நடித்தவண்ணமே அவர் தம் தம்பியுடன்கூட கைத்தறி ஜவுளி வியாபாரத்தையும் நடத்தி வருகிறார். எவ்வளவோ தொழில்களைச் செய்துவிட்டு வந்திருக்கும் மணியை சினிமாத் தொழில் விடாமல் பிடித்துக் கொண்டு விட்டது. இனி எங்கே தப்புவது, இதினின்றும்?

# ஸி. வி. வி. பந்துலு

ஸங்கீதம், நாடகம், சினிமா ஆகிய முத்துறைகளிலும் நிறையப் புகழ்பெற்று விளங்கும் ஸ்ரீ. ஸி. வி. வெங்கடரமண பந்துலுவின் வாழ்க்கை ஆச்சரியகரமான சம்பவங்கள் நிறைந்ததா யிருக்கிறது. அவற்றை நீங்கள் படித்தீர்களானால் "நிஜமாகவா?" என்று கேட்காமலிருக்க முடியாது.

இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள குருந்தமடம் கிராமத்தைச் சொந்த ஊராகக் கொண்ட பந்துலு, 1901௵ ஜூலை௴ 8௳ ஸ்ரீ. பு. வெ. வெங்கட கிருஷ்ணய்யரின் புத்திரராகப் பிறந்தார். தாயாரின் பிறந்த ஊராகிய சிந்தாமணி (திருநெல்வேலி ஜில்லா) கிராமத்தில் அவர் சிறு வயதில் வளர்ந்து வந்தார். பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட பந்துலுவுக்கு படிப்பிற்குப் பதில் பாட்டில் கவனம் சென்றது. அதோடு பள்ளிக்கூட நாடகங்களில் பெண் வேஷங்களைப் போட்டுக்கொண்டு அவர் நடிக்கலானார்.

படிப்பில் சிரத்தை ஏற்படவில்லை என்பதை உணர்ந்துகொண்ட தகப்பனார், பந்துலுவுக்கு ஸ்ரீ. ராமகிருஷ்ண பாகவதரிடம் சங்கீதம் கற்றுக்கொண்டு ஏற்பாடு செய்தார். ஏழாவது வயதில் சிருங்கேரி ஜெகத் குரு சங்கராச்சாரியார் பந்துலுவுக்கு உபநயனம் செய்து வைத்தார்.

பத்து வயது நிரம்புவதற்குள்ளாகவே பந்துலு கீர்த்தனை உள்பட சங்கீதப் பாடங்களையும், ஹார்மோனியம் வாசிப்பதற்கும் கற்றுக்கொண்டு விட்டார். பின்னர் சிந்தாமணி காமேஸ்வர பாகவதரிடம் சிஷ்யராக அமர்ந்து, அவருடைய கதா காலக்ஷேபங்களில் பின் பாட்டுப் பாடிவந்தார். அந்த சமயத்தில், பிரபல ஹார்மோனிய வித்வான் கே. எஸ். தேவுடு ஐயரும் மேற்படி பாகவதரிடமே பின் பாட்டுப் பாடி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு சமயம், போடி நாய்க்கனூரில் காமேஸ்வர பாகவதர் கதா காலக்ஷேபம் செய்து வந்த சமயத்தில், அந்த

ஊரில் சின்ன சாமா ஐயரின் கம்பெனி நாடகம் ஆடிவந்தது. பாகவதர் எவ்வளவோ தடுத்தும், அவருக்குத் தெரியாமல் இரண்டு மூன்று நாடகங்களை பந்துலு பார்த்தார். சின்ன சாமா ஐயர், பி. எஸ். வேலு நாயர் இவர்களது பிரமாதமான நடிப்பு பந்துலுவின் மனதைக் கவர்ந்தது. தாமும் அவர்களைப் போல ஒரு உன்னத நடிகராக வேண்டுமென்ற ஆசை அவருக்கு அப்பொழுதே ஏற்பட்டதாம்.

இந்த எண்ணம் நாளுக்கு நாள் வலுக்கவே பந்துலு காமேஸ்வர பாகவதருக்குப் பின்பாட்டுப் பாடுவதை நிறுத்திக் கொண்டார். கையில் தம்பிடி கூட இல்லாமல் குற்றாலத்தை அடைந்தார். பிறகு ஆண்டிப்பட்டி ஜமீன்தார் ஸ்ரீ. பெத்தாச்சி. செட்டியார் தம் ஆதரவில் இருந்த ஸ்ரீ. முத்தையா பாகவதரை பந்துலுவுக்குச் சங்கீதம் சொல்லிக் கொடுக்கும் படி ஏற்பாடு செய்தார். ஸ்ரீ. முத்தையா பாகவதருக்கு அவகாசம் இல்லாமலிருந்ததால் துரிதமாக சங்கீதம் பயில முடியாமலிருந்தது.

இதன் காரணமாக, குற்றாலம் மௌன சுவாமிகளிடம் சிபார்சு பெற்று, இராமநாதபுரம் ராஜா முத்து ராமலிங்க சேதுபதி அவர்களைப் போய்ப் பார்த்து, அவர்முன் பாடினார். ராஜா அவர்கள் பந்துலுவை பூச்சி ஸ்ரீனிவாஸ ஐயங்காரிடம் சிஷ்யராக அமர்த்தினார். ராஜா சரித்திரத்தில் முதலில் இலவசச் சாப்பாடு கிடைத்தது. பிறகு இந்தச் சாப்பாடு நிறுத்தப்பட்டதால், பிக்ஷை எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு, இரண்டு வருஷகாலம் சங்கீதப் பயிற்சி பெற்று வந்தார். மேதை மிகுந்த பூச்சி ஐயங்காரிடம் சங்கீதம் கற்க ஆரம்பித்த பின்தான் பந்துலுவுக்கு விதரணையான ஸ்வரஞானம் ஏற்பட்டதாம்.

ஐயங்கார்வாள் ஒரு தடவை சென்னைக்கு கச்சேரி செய்ய வந்திருந்தார். அவருடன் வந்திருந்த பந்துலு, கல்கத்தாவைச் சேர்ந்த ஹிந்துஸ்தானி வித்வான் பியாரா சாஹேபின் கச்சேரியைக் கேட்க நேர்ந்தது. அதன் விளைவாக ஹிந்துஸ்தானி சங்கீதத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற பேரவா அவருக்கு ஏற்பட்டதாம். தம்விருப்பத்தை

தம் குருவிடம் தெரிவித்து, அவரிடம் ஆசீர்வாதம் பெற்று, சென்னைக்குப் புறப்பட்டார். பத்மாஸனிபாய் என்ற லேடி பாகவதரின் கதாகலாக்ஷேபங்களில் கொஞ்சகாலம் பின் பாட்டுப் பாடி, கையில் பணம் சேர்த்துக்கொண்டு கல்கத்தாவுக்குச் சென்றார் பந்துலு.

பிறகு அவர் கல்கத்தாவிலிருந்து காசியை அடைந்தார். அங்குள்ள சிவமடத்தின் சொந்தக்காரரான ஸ்ரீ. கேதார்நாத் சிவனை (இவர் கவி பாரதியாரின் சகோதரியின் மாப்பிள்ளையாம்) பந்துலுவுக்கு முன்பே தெரியுமாம். ஸ்ரீ. சிவன் ஹார்மோனியத்தை அபூர்வமாய் வாசிக்கக்கூடியவராம். அவருக்கு ஹிந்துஸ்தானி சங்கீதத்தில்வித்தும் இருந்ததால் அவரிடம் பந்துலுகொஞ்சகாலம் ஹிந்துஸ்தானி சங்கீதத்தைக் கற்றுக் கொண்டார்:

காசியில் தங்கும்போது பந்துலு ஹநுமந்த கட்டத்தில் தினமும் ஸ்நானம்செய்து வருவது வழக்கம். அவர் ஒருநாள் ஒரு மூலையில் கிழிந்த துணி மூட்டை யொன்று இருப்பதைக் கண்டார். யாராவது வைத்து வீட்டுக்குளிக்கப் போயிருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டு வந்து விட்டார். மறுநாள் ஸ்நானம்செய்துவிட்டு வரும்போது அந்த மூட்டை அங்கேயே இருந்ததைக் கண்டார். இதுபோல் பத்து நாட்கள் அந்த மூட்டை அதே இடத்தில் இருந்ததைப் பார்த்துக்கொண்டு வந்தார் பந்துலு. பதினொராம் நாள், ஆச்சர்யம் தாங்க முடியாதவராய், அவர் அந்த மூட்டையை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அதனுள் நூறு ரூபாய் பணமும், நான்கு பவுன் காசுகளும் இருந்தது. அவருடைய ஆச்சரியத்தை அதிகரிக்கச் செய்ததாம்!

அவர் காசியிலிருக்கும்போது இதைவிட நூறு மடங்கு ஆச்சரியகரமான சம்பவம் ஒன்று நடந்ததாம். அதைப்பற்றி பந்துலு கூறுவதைக் கேளுங்கள் :

“ஒரு நாள் சாயங்காலம் நான் கங்கைக் கரையில் சந்தியாவந்தனம் செய்துகொண்டிருந்த போது ஒரு வங்காளி என்னை அநுகி’ புகழ்ந்து பேசி, என் நெற்றியில் விபூதியைப்

பூசினான். என் ஞாபகம் தவறியது. பிறகு பிரயாகையை அடைந்தபோதே எனக்கு ஞாபகம் தந்தது- அவன் பதிலே பேசாமல் என்னை வேறு ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு போய் விட்டான். அந்த ஆள் என்னை காட்டு மார்க்கமாய் டோங்கா வண்டியில் ஏழெட்டு மைல்கள் தூரம் அழைத்துச் சென்றான். பிறகு கால் நடையாக வெகுதூரம் அழைத்துச் சென்றான். கடைசியில் இரவு 12மணி சுமாருக்கு சில குடிசைகள் இருந்த இடத்தை அடைந்தோம். பௌர்ணமிச் பால்போலக் காய்ந்து கொண்டிருந்தது. அங்கிருந்த சிலவங்காளி பிராமணர்கள் எங்களை வரவேற்று, என்னை ஸ்நானம் செய்யச் சொன்னார்கள். அதுமுடிந்ததும், எனக்கு ஒரு சிவப்பு வஸ்திரத்தைக் கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொன்னார்கள். நெற்றியில் விபூதியும் குங்குமும் இட்டுக் கொண்டேன்.

"பிறகு இரண்டு வங்காளிகள் என்னை ஒரு பள்ளத்தாக்கில் படிகளின் வழியாக அழைத்துச் சென்றனர். சிறிது தூரத்தில் ஒரு கோயில் தென்பட்டது. அங்கு சென்றவுடன் என்னை அழைத்து வந்தவர்கள் என்னைப் பூசாரியிடம் ஒப்புவித்து விட்டுப் போய் விட்டனர்.

"பூசாரி என்னைக் கோயிலுக்குள் அழைத்துப் போனார். என்மீது ஜலத்தை பிரோக்ஷித்து, கழுத்தில் ஒரு பூமாலையைப் போட்டு' என்னை பிரதக்ஷிணம் வரச்செய்து, காளியை தரிசனம் செய்யும்படி சொன்னான். நான் மந்திரத்தால் கட்டுண்டவன் போல பூசாரி சொன்னபடி யெல்லாம் செய்தேன். தேவியை நிமிர்ந்து பார்த்தேன். மெய்மறந்தேன். ஸ்லோகங்களைப் பாடினேன். பக்கத்தில் ஒருவன் வாளுடன் நின்றதைக் கண்டதும் திகிலடைந்தேன். அந்த வாள்காரனிடம் பூசாரி, "சீக்கிரம் ஆகட்டும்!" என்று உத்தரவிட்டான். திடீரென்று ஒரு ஒளி தோன்றியது. நான் என் ஞாபகமிழந்தேன். பிறகு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. மீண்டும் கண்விழித்தபோது என் கைகால்கள் கட்டப்பட்டு ஒரு காட்டு ரஸ்தா ஓரத்தில் கிடந்ததை அறிந்தேன். பொழுது விடிந்ததும் அவ்வழியாய் வந்த இருவர் என்கட்டுகளை அவிழ்த்து விட்டார்கள். என் வேஷ்டியின் நுனியில் 1912ம் வருஷத்திய புது ரூபாய்கள் ஐந்து முடியப்பட்டிருந்தது என்னை மேலும் திகைக்கச் செய்தது."

மேற்படி சம்பவத்திற்குப் பிறகு பந்துலு தம் சொந்த ஊருக்குத் திரும்பினர். திருப்பயணம் பஞ்சாபகேச பாகவதர், நீலிதநல்லூர் பாகவதர் சேஷய்யங்கார், லேடி பாகவதர் திருக்கோகர்ணம் கனகாம்புஜம் ஆகியவர்களின் கதா காலக்ஷேபங்களில் சிற்சில மாதங்கள் அவர் பின்பாட்டு பாடிவந்தார்.

இந்த சமயத்தில் பந்துலுவுக்கு அவரது இஷ்டத்திற்கு மாருக, தகப்பனரின் வற்புறுத்தல் காரணமாக, 1918ம் வருஷத்தில் திருமணம் நடந்தேறியது. ஆனல் இரண்டு மாதங்களுக்குள் அவரது மனைவி ஜுரத்தால் இறந்துபோனர்.

இதன் பிறகு பந்துலு, வி. வி. கிருஷ்ணய்யர் என்ற நாடக நடிகருடன் சென்னைக்கு வந்தார். ராயல் தியேட்டரில் நாடகம் ஆடிக் கொண்டிருந்த வேலு நாயர் கம்பெனியில் இருவரும் சேர்ந்தனர். சில மாதங்கள் இக்கம்பெனியில் நடித்த பின்னர், கிருஷ்ணய்யர் எர்ணுகுளத்தில் "பாரத பூஷண கான சபா" என்ற பெயருடைய சொந்தக் கம்பெனியை ஆரம்பித்தார். பந்துலுவும் அக்கம்பெனியில் போய்ச் சேர்ந்தார். இந்தக் கம்பெனியின் "விக்ரம ஸ்திரீ சாகஸம்" நாடகத்தில் பந்துலு ஸ்திரீ வேஷம் தரித்துப் புகழ் பெற்ருர்.

மேற்படி சபையை விட்டு விலகியபின், பந்துலு ஆரிய கான சபாவில் கொஞ்ச காலம் நடிகராயிருந்தார். இந்த சமயத்தில் அவருக்கு இரண்டாம் முறையாக விவாஹம் நடந்தேறியது. ஆரியகான சபை இலங்கைக்குப் புறப்பட்ட போது பந்துலு அதிலிருந்து விலகி, சென்னைக்குச் சென்று, ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரியாரின் காலக்ஷேப கோஷ்டியில் சில மாதங்கள் இருந்துவிட்டு, மதுரைக்குச் சென்ருர்.

இதன் பிறகுதான் பந்துலு தம் நாடக வாழ்க்கையின் முக்கிய கட்டத்தை அடைந்தார். அந்தச் சமயத்தில் பிரபல கன்னையா கம்பெனி திருநெல்வேலியில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தது. ஒரு தனவந்தரின் சிபார்சின் பேரில் அவர் இந்தக் கம்பெனியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். "தசாவதாரம்" நாடகத்தில் பந்துலு முதன் முதலில் நாரத

ராகத் தோன்றினர். ஜனங்கள் அவருடைய பாட்டையும், நடிப்பையும் மெச்சினர்.

பந்துலு மேற்படி கம்பெனியில் சேர்ந்த சமயத்தில், எஸ். ஜி. கிட்டப்பா அந்தக் கம்பெனியில் பிரபல நடிகராக விளங்கி வந்தார். பிறகு மஹாராஜபுரம் கிருஷ்ணமூர்த்தி, பி. பி. ரங்காச்சாரி ஆகியவர்களும் அக் கம்பெனியில் சேர்ந்தனர். பந்துலுவுக்கு நாளுக்கு நாள் பொதுஜன ஆதரவு ஏற்படவே, அவருக்கு ராமன், கிருஷ்ணன், மோஹினி போன்ற முக்கிய வேஷங்களும் கொடுக்கப்பட்டன கிட்டப்பா ஒரு நாளும், பந்துலு ஒரு நாளுமாக ராமானுஜர் வேஷத்தில் நடித்துவந்தனர். கிட்டப்பா பந்துலுவிடம் மிக மதிப்பு வைத்திருந்தார். அதுபோலவே பந்துலுவும் கிட்டப்பாவுக்கு அதிக மதிப்பளித்து வந்தார். கன்னையா கம்பெனியில் பந்துலு ஒன்பது வருஷ காலம் இருந்துவந்தார். கன்னையா பந்துலுவை மிகுந்த கௌரவத்துடன் நடத்திவந்தார். நாளடைவில் அவர் பந்துலுவுக்கு அதிகச் சம்பளமும், முக்கிய வேஷங்களும் கொடுத்து ஆதரித்துவந்தார்.

ஒரு சமயம், இந்தக் கம்பெனி ஹைதராபாத்தில் நாடகம் ஆடிக் கொண்டிருந்தபோது, கத்தவால் ராணி பந்துலுவின் பாட்டை மெச்சி, அவரை தனியாக வரவழைத்துப் பாடச் சொல்லி 5 டாலர்களைப் பரிசளித்தார்.

கன்னையா கம்பெனி ரங்கூனுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியதும் சென்னையில் 1933ல் "பகவத்கீதை" நாடகத்தை நடத்த ஆரம்பித்தது. ஒரு மாதத்திற்கெல்லாம் ஸ்ரீ. கன்னையா காலமானர். அதன் பிறகு இக் கம்பெனி திருச்சி, திருநெல்வேலி, மதுரை, கும்பகோணம் முதலிய நகரங்களில் நாடகம் நடத்திவிட்டு திருவாரூரை அடைந்ததும் பந்துலு கம்பெனியிலிருந்து விலகினர்.

கும்பகோணத்தில் மஹாமஹம் நடந்து கொண்டிருந்தது. அதை முன்னிட்டு அங்கு நாடகம் நடத்தி வந்த குப்பி வீரண்ணாவின் கம்பெனியில் சேர்ந்து பந்துலு ஒரு வருஷகாலம் இருந்து வந்தார். பிறகு அதை விட்டு விலகி, சுப்பையா பாகவதர், தேவுடு ஐயர், வேலம்மாள் முதலிய

வர்களுடன் இலங்கைக்குச் சென்று நாடகம் ஆடி விட்டுத் திரும்பினர்.

இந்தச் சமயத்தில், அதாவது 1934ம் வருஷத்தில், சேலம் ஏஞ்சல் பில்ம்ஸார் பந்துலுவை முதன் முதலாக தங்கள் **கிருஷ்ண லீலா** படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்தப் படத்தில் வசுதேவரின் வேஷத்தை அவர் திறமையுடன் நடித்ததோடு, இனிமையாய்ப் பாடியுமிருந்ததால், தொடர்ந்தாற்போல **திரௌபதி வஸ்திராபஹரணம்** (ஏஞ்சல்), **சீதா வனவாஸம், தூக்குத் தூக்கி, ஞானசௌந்தரி, ராஜாம்பாள், மீரா** (ஸௌண்ட் ஸிடி), **உஷா கல்யாணம், பாலயோகினி** ஆகிய படங்களில் நடிக்க அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. கடைசியாய் கூறப்பட்ட படத்தில் பந்துலு வேலைக்கார முனிசாமியின் வேஷத்தை வெகு இயற்கையாக நடித்திருப்பது குறிப்பிடத் தக்கது.

**பாலயோகினி** முடிந்ததும் பந்துலு "டிரியோ" சாரதாம்பாள் கோஷ்டியுடன் மலேயா, பினங்கு, சிங்கப்பூர் கோலாலம்பூர் ஆகிய தூர தேசங்களுக்குச் சென்று நாடகங்களில் நடித்து விட்டுத் திரும்பினர்.

திரும்பி வந்ததும் **நந்த குமார்** படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். முன்பு **கிருஷ்ண லீலா**வில் கிருஷ்ணனின் சொந்தத் தகப்பனாராக நடித்த பந்துலு **நந்த குமாரி**ல் அவரது வளர்ப்புத் தகப்பனாராக நடித்திருக்கிறார்! பிறகு அவர், **ஆனந்தாஸ்ரமம், மாணிக்கவாசகர், ஊர்வசியின் காதல், உத்தம புத்திரன், சதி மஹாநந்தா, பக்த கௌரி, ஹரிஹர மாயா, காளமேகம், கங்காவதாரம், கிருஷ்ண பிடாரன், உத்தமி, பக்த ஹநுமான்** ஆகிய படங்களிலெல்லாம் நடித்திருக்கிறார்.

பந்துலு இதுவரை இருபத்திரண்டு படங்களில் நடித்திருக்கிறார். இவைகளில் பெரும்பான்மையானவை புராணப் படங்கள்; நான்கு படங்களில் சிவன் வேஷத்தை நடித்திருப்பது குறிப்பிடத் தக்கது. மொத்தத்தில், பந்துலு ஒரு நல்ல நடிகர். பிரமாதமாக நடிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத சமயங்களில் அவர் தம் வரையில் சுமாராகவாவது நடித்து விடுவார்.

சிவந்தமேனியும், 5¾ அடி உயரமும் உடைய பந்துலு வுக்கு மூன்று இளைய சகோதரர்களும், இரண்டு சகோதரி களும் இருக்கின்றனர். அவருக்கு இரண்டு குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டன. அவருடைய தம்பிகளுள் ஒருவ ரான வி. வி. ஆர். சந்திரனும் ஒரு நடிகராக இருந்து வருகிறார்.

தெலுங்கை தாய் பாஷையாகக் கொண்ட பந்துலுவுக்கு தமிழை எழுதப் படிக்கவும், கன்னடம், மலையாளம், ஹிந்துஸ்தானி ஆகியவைகளை பேசவும் தெரியுமாம். மோட் டார் ஓட்டுதல், குதிரை சவாரி இவை அவருக்கு சாதாரண விஷயங்களாம்.

தற்போது பந்துலு, உதய சங்கர் தயாரிக்கும் கல்பனு ஹிந்திப் படத்திலும்; **லக்ஷ்மிவிஜயம் கடகம், நாதவிஜயம், துளஸி தாஸ்** ஆகிய தமிழ்ப் படங்களிலும் நடித்துவருகிறார். அடுத் தாற்போல் **யோகி வேமண்ணு** (தமிழ்), **மதனிகா** ஆகிய தமிழ்ப் படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். இப் பொழுதும்கூட அவர் அடிக்கடி ஸ்பெஷல் நாடகங்களில் நடித்து வருகிறார்.

யாருக்குத் தெரியாது!
ஜாப்கோவின் மகிமை



ஜாப்கோ ஹேர் குரோயருக்கு நம் நாட்டில் ஈடேயில்லை. இதை எங்கள் அனுபவபூர்வமாய் கூறுகிறோம். கூந்தல் வளர்ப்பதில் இது நிகரற்றது. அதன் நறுமணம் ஒன்றேபோதும். அழகுக்கு அழகு செய்யும் ஜாப்கோவின் ஒப்பற்ற சாதனங்கள் இருக்கையில் பிற நாட்டு சரக்கை நாம் கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாது.

யோகம்
மங்களம்

ஜயபாரதம் கோ
மதராஸ், பெங்களூர், எர்ணாகுளம்